ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸுதர்சனர் பதில்-பதின்மூன்றாவது சதகம்

## முன்னுரை

[ஸுதர்சனர்]

பன்னிரண்டு சதகங்களில் பத்திரிகைகளின் பொய்ப் பிரசாரங்களை நாம் மறுத்து வந்ததன் விளைவாக, வைணவத்தைத் திரித்தும் தாழ்த்தியும் செய்து வந்த பொய்ப்பிரசாரங்கள் பொதுஜனப் பத்திரிகைகளில் குறைந்துள்ளன. புதியபார்வை ஆன்மீகம் போன்ற பத்திரிகைகளில் நம்முடைய பேட்டி வெளிவந்துள்ளதையும் இந்த சதகத்தில் காணலாம். ஆனால் தினமலர் பத்திரிகைமட்டும் வைணவத்தைத் தாழ்த்தியும் திரித்தும் கூறும் கட்டுரைகளையும் துணுக்குகளையும் விடாமல் பிரசுரித்து வருகிறது. அவற்றுக்கு இந்த சதகத்தில் தக்க பதில்கள் அளிக்கப்பட்டுள்ளன. தினமலரும் திருந்தும் என்று நம்புகிறோம்.

வைஷ்ணவத்தைப் பிரசாரம் செய்வதற்காகவே அஹோபில மடத்தாரால் பலவருடங்களாக நடத்தப்பெற்று வரும் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா பத்திரிகை வைணவத்தின் அடிப்படைக் கொள்கைகளை அழிக்கும் சில காரியங்களை, சமீப காலமாகச் செய்து வருவது இந்த சதகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்வரும் கேள்வி பதில்கள் காணலாம்:— (1) 14 வது கேள்வி பதிலில் [பக்கம் 29-31] மகாபாரதத்தைப் பிள்ளையார் எழுதினார் என்பது இடைச்செருகல் என்னும் உண்மையை அன்பர் ஒருவர் எடுத்துக்காட்டிய பின்பும், பெரும்பான்மையாகவுள்ள பிள்ளையார்பக்தர்களான தன் வாசகர்களை இழக்கவிரும்பாமல் இவ்வுண்மையை ப்ரியா வெளியிட மறுப்பது எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. (2) ஸ்ரீவைஷ்ணவர்களனைவரும் ராமானுஜரின் ஆசார்யர்களான திருக்கோட்டியூர் நம்பியும் திருமாலையாண்டாரும் பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவர்கள் என்பதை அறிவார்கள். ப்ரியாவில் வெளிவந்த ராமானுஜர் படக்கதையில் இவ்விரு ஆசார்யர்களும் அபரசிகையுடையவர்களாகச் சித்திரிக்கப்பட்ட தவறை அன்பர் ஒருவர் எடுத்துக் காட்டியபின்பும் 'ப்ரியா' உண்மையை ஏற்கமறுப்பது— கேள்வி பதில் 12 ல் [பக்கம் 20] எடுத்துக் காட்டப்பட்டுள்ளது (3) தாத்ரு ஸு ஐப்பசி ப்ரியாவில் 'திருக்

http://acharya.org

கடிகை' [சோளஸிம்ஹபுரம்] திவ்யதேசம் அமைந்துள்ள இடம் முழுவதும் ஆற்காட்டு நவாப்பால் கொடுக்கப்பட்டது என்னும் செய்தி வெளியிடப்பட்டது. கேள்வி பதில் 22 ல் [பக்கம் 39] இது தவறென்று எடுத்துக்காட்டியிருந்தும் 'ப்ரியா' திருத்தம் வெளியிடவுமில்லை, வருத்தம் தெரிவிக்கவுமில்லை. (4) இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தது போலே விசிஷ்டாத்வைதத்தையே விசிஷ்டத்வைதமாக மாற்றுவதற்கு ப்ரியா அரும்பாடுபடுகிறது. அபத்தமாக வல்லது எழுத அறியாத ஓர் அரைகுறை வித்வான் "பிராட்டிக்குப் பாரதந்த்ரியம் செயற்கையானது. ஸ்வாதந்த்ரியமே அவளுடைய இயல்வு, பிராட்டி பெருமாளுக்கு சரீரமல்ல; பெருமாள் அவளை நியமிக்க முடியாது; விசிஷ்டாத்வைத மதத்தில் பெருமாளும் பிராட்டியும் இரண்டு துல்யமான ஈச்வரர்களே" முதலான அபத்தக் கொள்கைகளை வெளியிட்ட சுவடியை நாம் மறுத்தோம். நடுநிலையாளர்கள் தீர்ப்பையும் கோரினோம். பல அறிஞர்கள் இவருடைய அபத்தக்கருத்துக்களை மறுத்துக் கட்டுரைகள் எழுதினார்கள். இதைப் பொறுக்காத 'ப்ரியா' இதில் உட்புகுந்து வசவுமாரியிலும் விதண்டாவாதங்களிலும் இறங்கி நாது மறுப்பைப்பெற்றது. இவ்விஷயங்களை சுமார் 200 பக்கங்களில் விளக்கும் "ஸ்ரீதத்வ ஸர்வஸ்வம்" என்னும் நமது நூலின் விவரத்தையும் தன் வாசகர்களுக்கு அறிவிக்க மறுத்து வசவுமாரிகளையும் விதண்டாவாதங்களையும் 'ப்ரியா' தொடர்ந்து செய்து வருகிறது. கேள்வி பதில் 93 ல் [பக்கம் 92] இவ்விஷயம் குறிக்கப்பட்டுள்ளது. அடுத்த இதழில் தொடங்கவிருக்கும் 14 வது சதகத்தில் ப்ரியாவின் விதண்டாவாதங்களுக்குத் தினவடங்க பதிலளிக்கப்படும்.

இந்த சதகத்தின் இறுதியில் பின்வரும் ஆறு அனுபந்தங்கள் இணைக்கப்பட்டுள்ளன:— (1) உத்தமூர் ஸ்வாமியின் நூற்றாண்டு விழாக் கட்டுரைகள், (2) சென்னைத் தொலைக்காட்சியில் ஸுதர்சனர். (3) கலியுகக் கடவுள்கள் (4) வைணவத்தின் இன்றைய நிலை (5) பாரதி ஆழ்வாரா? (6) அரசியல் வாதிகளும் வைணவமும்,

19—3—98 ஸ்ரீவைஷ்ணவ தாஸன்,

திருச்சி ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்

[ஸுதர்சனர்]

http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸுதர்சனர் பதில்-பதின்மூன்றாவது சதகம்

திருவெள்ளறை கீழத்திருமாளிகை அப்பன் ஸ்ரீ திருவேங்கடாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.

"1 கூரநாராயணஜீயர் அருளிய ஸுதர்சன சதகம் 12-வது ஶ்லோகத்திற்கு பழைய வ்யாக்யானங்களில் காணப் படும் பொருளைக்காட்டிலும் சிறந்ததொரு பொருளை சமீபத் தில் ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாராயண ஜீயர் ஸ்வாமி மடத்தில் நடந்த உபந்யாஸத்தில் வெளியிட்டார்கள். வாசகர்கள் அறியுமபடி அதை வெளியிடவேண்டுகிறேன்.

12-வது ஶ்லோகம் பின்வருமாறு:—

பத்₃மௌகே₄ தீ₃ர்க்கி₄காம்ப₄ஸி அவநித₄ரதடே
கைரிகாம்பு₃ப்ரபாத:
ஸிந்தூ₃ரம் குஞ்ஜராணாம் தி₃ஶி தி₃ஶி க₃க₃நே
ஸாந்த்₄யமேக₄ப்ரப₃ந்த₄: |
பாராவாரே ப்ரவாலோ வநபு₄வி ச தத₂ா
ப்ரேக்ஷ்யமாண: ப்ரமுக்₃தை₄:
ஸாதி₄ஷ்டா₂ம் வ: ப்ரபே₃ாத₄ம் ஜநயது
த₃நுஜத்₃வேஷிணஸ் த்வைஷராஶி: ||

ஸ்ரீ காஞ்சீ மஹா வித்வான் ஸ்வாமியின் உரையில் அதன் பொழிப்புரை பின்வருமாறு:- "குளங்களின் தண்ணீ ரில் செந்தாமரை மலர்க்கூட்டமாகவும், மலைச்சாரலில் தாது ஜலங்களின் அருவி நீராகவும், திசைகள் தோறும் உள்ள திக்கஜங்களுடைய ஸிந்தூரப்பொடியாகவும், ஆகாயத் தில் அந்திப்போதில் உண்டான மேகத்திரளாகவும், கடலில் பவழமாகவும், காட்டு நிலத்தில் செந்தளிராகவும், அறிவிலி களால் பார்க்கப்படாநின்ற அஸுரசத்ருவான ஸுதர்சனாழ் வானுடைய கிரணக்கூட்டமானது. உங்களுக்கு நல்ல அறிவை உண்டாக்கட்டும்" என்பது. "திருவாழியாழ்வானு டைய சோதி வெள்ளமே குளங்களில் தாமரைக்கூட்டம் முத லானவையாகப் பரவியிருக்கிறது. இவ்வுண்மையை அறியாத

http://acharya.org

பொதுமக்கள், இவையெல்லாம் ஸுதர்சனச் சோதிவெள்ளமே என்று புரிந்துகொள்ளாமல் குளங்கள் முதலான ஒவ்வொரு இடத்தில் தாமரைக்கூட்டம் முதலான ஒவ்வொரு பொருளாக மயங்குகின்றனர். உண்மை அறியவல்லவர்கள் இவையெல்லாம் ஸுதர்சனச் சோதிவெள்ளமே என அறிவார்கள்'' என்று தாத்பர்யம். "திருவாழியாழ்வானுடைய சோதிவெள்ளம் எல்லாவிடத்திலும் வியாபித்திருக்கிறது என்பதைச் சமத்காரமாகப் பேசுகிறார்'' என்று ஸ்ரீ காஞ்சீ ஸ்வாமியின் உரையில் உள்ளது. ஆழ்வார்களை அடியொற்றி கூரநாராயண ஜீயர் இங்கு வேறொரு பொருளைத் திருவுள்ளம்பற்றியிருக்கிறார் என்று அடியேனுக்குத் தோன்றிற்று. அதையே அவர் ஸ்தாபித்த ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாராயண ஜீயர் மடத்தில் வெளியிட்டேன். அதாவது :—

"பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற
காவிமலரென்றும் காண்தோறும்—பாவியேன்
மெல்லாவி மெய்மிகவே பூரிக்கும் அவ்வவை
எல்லாம் பிரானுருவே என்று''. [பெரியதிருவந்தாதி73]

என்பது நம்மாழ்வார் வாக்கு. இதில் நீலநிறமுடைய பூக்களைப் பார்க்கும் போதெல்லாம் நம்மாழ்வார் தம்முடைய பக்திப் பெருக்கினால் உண்டான மயக்கத்தாலே, அவற்றை எம்பெருமானுடைய திருமேனியாகவே காண்பதாக அருளியுள்ளார். இந்த ஶ்லோகத்தில் 'ப்ரமுக்₃தை₄:' என்று அத்தகைய ஆழ்வார்களைக் குறிப்பதாகக் கொள்வதே உசிதம். நாட்டிலுள்ள அறிவிலிகளைக் குறிப்பதற்கு "முக₃தை₄'' என்னும் சொல்லே போதும். "ப்ரமுக்₃தை₄:'' என்றதால் சிறந்த மயக்கத்தையுடைய ஆழ்வார்களே இங்கு குறிக்கப்படுகிறார்கள் என்று விளங்குகிறது. அவர்களுக்கு, குளங்களிலுள்ள தாமரைக் கூட்டங்களைப் பார்க்கும்போது, மணித்தடம் போன்று எம்பெருமான் சக்கரத்தை ஏந்தியிருப்பதுபோல் தோன்றுகிறது. மலைச்சாரலிலுள்ள தாதுக்கள் கலந்து வருகையாலே செந்நிறமுள்ள நீர்வீழ்ச்சியைப் பார்க்கும்போது, 'பச்சைமாமலைபோல் மேனி' யுடைய எம்பெருமானுடைய சக்கரச் சோதியாகவே தோன்றுகிறது. திக்₃க₃ஜங்களிலுடைய ஸிந்தூரப்பொடியைப் பார்க்கும்போது, யானைபோன்ற எம்பெருமானிடமுள்ள திரு

http://acharya.org

வாழிச் சோதியாகத் தோன்றுகிறது. வானத்திலுள்ள அந்தி மேகத்திரளைப் பார்க்கும்போது நீலவான வண்ணனிடமுள்ள ஸுதர்சனஒளியைப்பார்ப்பதாகத்தோன்றுகிறது. கடலிலுள்ள பவளத்தைப் பார்க்கும்போது, கடல் வண்ணனின் சக்கர ஒளியாகத் தோன்றுகிறது. காட்டுநிலத்தில் உள்ள செந்தளிரைப் பார்க்கும்போது, காடுபோன்ற பச்சை வண்ணனிடமுள்ள திருவாழியாழ்வானின் கிரணங்களாகத் தோன்றுகிறது. "த₃நுஜத்₃வேஷிண: த்₃வைவஷ ராஶி:" என்னும் தொடர் அஸுரசத்ருவான எம்பெருமானுடைய திருமேனிச் சோதியையும் அஸுரசத்ருவான திருவாழியாழ்வானின் சோதியையும் குறிக்கும்படி அமைந்திருப்பது காணத்தக்கது. இப்போது பொழிப்புரையில் 'ய:' 'ஸ:' என்னும் இருபதங்களை வருவித்துக் கொண்டு பின்வருமாறு பொருள் கொள்ள வேண்டும். "குளங்களின் தண்ணீரிலுள்ள செந்தாமரை மலர்களின் திரளும், மலைத்தாழ்வரையிலுள்ள செந்நிறமான அருவி நீர்வீழ்ச்சியும் திக்கஜங்களுடைய சிந்தூரச்செம்பொடியும், நீலவானிலுள்ள அந்திமேகக் கூட்டமும், கடலிலுள்ள பவளப்பாறையும். காட்டுநிலத்திலுள்ள செந்தளிரும் பக்திப் பெருக்கினாலே சிறந்த மயக்கத்தையுடைய ஆழ்வார்களாலே திருவாழியாழ்வானுடைய யாதொரு சோதிச்சுடராகப் பார்க்கப்படுகிறதோ, அந்தச் சோதிச்சுடரானது உங்களுக்கு நல்ல அறிவை உண்டாக்குக" என்பது பொழிப்புரை. பழைய உரையில் மக்களின் ப்ரத்யக்ஷஜ்ஞானத்தைத் தவறானது என்று கூறி திருவாழியாழ்வானது சோதி ஸர்வ வ்யாபி என்று காட்டுவதற்காகச் சமத்காரமாகப் பேசுகிறார்' என்று நலிந்து பொருள்கூற வேண்டியுள்ளது. இப்பொருளில் அக்குறையில்லாதிருப்பதோடு, ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தியை அடியொற்றிருக்கும் சிறப்பும் உள்ளது. 'ப்ரமுக்₃தை₄' 'ப்ரேக்ஷ்யமாணா:' என்னும் சொற்களிலுள்ள 'ப்ர' என்னும் பகுத்க்குச் சுவையான பொருளும் கிடைக்கிறது. திருப்பதியில் எழுந்தருளியுள்ள வித்வத்வரிஷ்டரான ஸ்ரீ உ வே தி. அ. கிருஷ்ணமாசார்யஸ்வாமியிடம் இதை அடியேன் விண்ணப்பித்தபோது அவரும் உகந்தருளினார்.

http://acharya.org

மணவாள இராஜஹம்ஸம், பவானி

2 அமுதசுரபி [1995] தீபாவளி மலரில் கோவி. மணிசேகரன் என்பவர் "திருமாலின் அவதாரங்கள் பிற சமயத்தார்களைப் பழிப்பதற்காகவே படைக்கப்பட்டவை. ஆனால் சிவனின் செயல்கள் அப்படி அல்ல" என எழுதியுள்ளார். இதை விமர்சிக்கவேண்டுகிறேன்.

மேற்படி கட்டுரையை எழுதியவர் திருமாலின் அவதாரங்களையோ சிவனின் செயல்களையோ அடியோடு அறியாதவர் என்றே இக்கூற்றிலிருந்து விளங்குகிறது. திருமாலின் அவதாரங்கள் வேதங்களிலும், இதிஹாஸங்களிலும் ஸாத்விக புராணங்களிலும் விவரிக்கப்பட்டுள்ளன. நம்முடைய விஷ்ணுசித்த விஜயத்தில் திருமாலின் அவதாரங்களைக் கூறும் பலபல வேதவாக்யங்களும், இதிஹாஸ புராண வாக்கியங்களும் காட்டப்பட்டன. மேல்வரும் பகுதிகளிலும் காட்டப்படும். சங்கநூல்களிலும் இவ்வவதாரச் செயல்கள் பல இடங்களில் பாராட்டப்பட்டுள்ளன. வடமொழி தென்மொழிக் கவிஞர்கள் பலராலும் தங்கள் காவியங்களில் அழகாக வர்ணிக்கப்பட்டுள்ளன. அந்த அவதாரங்கள் வேறு எந்தச்சமயத்தாரையும் பழிப்பதாகக் காணப்படவில்லை. உலகினரைக் காப்பதற்காகவும், தீயவரை அழிப்பதற்காகவும். அறத்தை நிலைநிறுத்துவதற்காகவும் செய்யப்பட்டவையாகவே காணப்படுகின்றன. மாறாக சிவனின் செயல்களாக நாயன்மார்கள் முதலானார் சைவர்களால் புனையப்பட்ட அடிமுடி தேடிய கதை, கண்ணைப்பிடுங்கி அர்ச்சனை செய்த கதை, தசாவதாரங்களையும் பங்கப்படுத்திய கதை முதலானவையே விஷ்ணுவையும் வைஷ்ணவ சமயத்தையும் பழிப்பதற்காகவே ஏற்பட்டவை என்பது சிறுவர்க்கும் விளங்கும். இக்கதைகள் வேதங்களிலோ, இதிஹாஸங்களிலோ, சான்றோர்கள் கையாண்ட ஸாத்விகபுராணங்களிலோ, சங்கநூல்களிலோ பழைய தென்மொழி வடமொழிக் காவியங்களிலோ எடுக்கப்படவில்லை என்பதே—இவை சைவர்களால் விஷ்ணுவையும் வைணவத்தையும் தாக்குவதற்காகவே பிற்காலத்தில் புனையப்பட்டவை என்னும் உண்மையைத் தெளிவாகக் காட்டுகிறது. தன்மேல் உள்ள குற்றத்தைப் பிறர்மேல் ஏறிடும், இக்காவலாசிரியரின் தன்மை இக்கூற்றிலிருந்து விளங்குகிறது.

http://acharya.org

V. கிருஷ்ணசாமி, கோயில்பட்டி

3. பகவானுக்கு இவ்வுலகு லீலாவிபூதியென்றும், முத்தொழில் செய்துவருவது அவனது அலகிலா விளையாட்டென்றும் சொல்லப்படுகிறது. இவ்விதம் பகவான் செய்வதானது, ஒரு குழந்தை ஒரு புழுவைப் பிடித்து ஊசியால் குத்தி விளையாடுவது போன்றது. குழந்தைக்கு இன்பம். ஆனல் புழுவுக்கோ துன்பம். இம்மாதிரி மக்களுக்குத் துன்பம் அளித்து பகவான் மகிழ்கிருனு? துன்பத்தின் காரணமாகப் பரமபதம் அடைவதற்கு ஆத்மாக்கள் முயல வேண்டுமென்பது பகவானின் சித்தமா? உலகத்தைப் படைக்காமலே இருந்தால் யாருக்கும் துன்பம் இல்லையே. ஆகவே, பகவான் ஏன் இந்தக் கொடு விளையாட்டைச் செய்கிருன் என்பதை விளக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

பரமாத்மாவைப் பற்றி நாம் சாஸ்திரங்கள் கொண்டே அறிகிறோம். வெறும் யுக்திகளால் அவனை உள்ளபடி அறிந்துவிட முடியாது. சாஸ்திரங்கள் ஆனந்தமே வடிவெடுத்த நித்ய விபூதியும், இன்பதுன்பங்கள் கலந்த லீலாவிபூதியும் அவனுக்கு உண்டென்று கூறுகின்றன; நித்ய விபூதியில் என்றுமே துன்பத்தை அநுபவித்தறியாத நித்யஸூரிகள் என்றும் அவனைச் சூழ்ந்திருந்தேத்திக் கொண்டிருப்பதாகவும், இங்கிருந்து விடுதலை பெற்றுச் சென்ற முக்தாத்மாக்களும் அங்கு சென்ற பின்பு துன்பம் கலக்காத பேரின்பத்தைப் பின்னுள்ள காலமெல்லாம் அடைவதாகவும் கூறுகின்றன. அதே போல் இந்த லீலா விபூதியிலும் கணக்கற்ற ஜீவர்கள் இன்ப துன்பங்களை அநுபவித்துக்கொண்டு அவனுடைய விளையாட்டுக்கு இலக்காகிருர்கள் என்றும் கூறுகின்றன. "இப்படிச் சிலரை என்றுமே பேரின்பமநுபவிப்பவர்களாகவும், சிலரை இன்ப துன்பங்களை அநாதிகாலமாக அநுபவித்து வருபவர்களாகவும் ஏன் வைத்திருக்கிருன், இது பக்ஷபாதமல்லவா?" என்று நாம் அவனைக் கேட்க முடியாது. அவன் நிரங்குச



http://acharya.org

ஸ்வதந்த்ரன் என்று சாஸ்திரம் கூறுகிறது. இவ்வுலகில் கட்டுப்பட்டிருக்கும் பத்தஜீவர்கள் அநாதிகாலமாகத் தாம் செய்து வரும் புண்யபாப கர்மங்களுக்கு ஏற்ப, பல வகை சரீரங்களையடைந்து இன்பதுன்பங்களை அநுபவிக்கின்றனர். ஆகையால் இவர்களது இன்பத்திற்குப்போலே துன்பத்திற்கும் காரணம் அவர்களது பழவினைகளே. இப்படியிருக்கும் இவர்களில் சிலராவது தன்னையறிந்து பரம பதத்திற்கு வந்து, பேரின்பமடைய வேண்டும் என்னும் கருணையாலேயே அவன் இந்த லீலாவிபூதியை அநாதி காலமாக மறுபடியும் மறுபடியும் படைத்து, அவர்களை அதில் பிறக்கவைத்துத் தானே அவதரித்து அவர்களுக்குத் தன்னைக் காட்டியும், சாஸ்திரங்களை அளித்தும், ஜ்ஞானிகளை அனுப்பியும் படிப்படியாக ஜீவர்களை முன்னேற்றித் தன்னை அடைவதற்கு வழிவகுத்துத் தந்திருக்கிறான். இவன் அநுபவிக்கும் இன்ப துன்பங்களுக்குத் தன் மேலேயே பழி வராமலிருப்பதற்காக பத்த ஜீவர்களுக்கு நல்வினையையோ தீவினையையோ தொடங்கும்போது தன் பகுத்தறிவைப் பயன்படுத்தி ஸ்வதந்திரமாகத் தொடங்குவதற்கு சக்தியளித்திருக்கிறான். ஆகையால் ஜீவன் துன்பமடைவதற்கு உண்மையில் அவனே காரணமேயொழிய, பரமாத்மா காரணமல்ல.

இவ்வுலகத்திற்கு லீலாவிபூதி என்று பெயர் இருப்பதற்கும், ஜீவர்களைப் படைப்பது முதலானது பரமனுக்கு விளையாட்டு என்று சொல்லுவதற்கும் காரணம் இனி ஆராயப்படுகிறது. ஒரு சிறுவன் புழுவைப் பிடித்து ஊசியால் குத்தி விளையாடுவது போல் எம்பெருமான் இவ்வுலகினர் படும் கஷ்டங்களைக்கண்டு ஆனந்தமடைவதாக நமது மதம் சொல்லவில்லை. "நாம் இவனை சரீரேந்த்ரியங்களோடு படைத்ததும், அவதாரங்கள் முதலான செயல்களைச் செய்ததும் இவன் நம்மை அடைந்து, நித்யஸூரிகளைப்போலே பேரின்பம் பெறுவதற்கும், இவனைப் பெற்று நாம் ஆனந்தமடைவதற்குமேயாகும். அப்படியிருக்க, இவன் நாம் கொடுத்த சுதந்திர புத்தியைக் கொண்டு தன் ஆனந்தத்திற்காக

http://acharya.org

எதை எதையோ செய்து நம்மைவிட்டு விலகியே செல்கிறனே!" என்று எண்ணும்போது உண்டாகும் புன்முறுவலும் அதனுல் உண்டாகும் ஒரு தாற்காலிகமான ஆனந்தமுமே எம்பெருமானுக்கு லீலை என்று சொல்லப்படுகிறது என்பது நமது மதம். இப்படிப் பெரும்பாலான பத்₃த₄ சேதநர்கள் தன் லீலைக்கு உறுப்பாக ஆனாலும் எம்பெருமான் தன் பரம கருணையாலே 'என்றாவது ஒரு நாள் இவன் நம்மை அடைய மாட்டானா?' என்னும் நப்பாசையாலே அவனை மறுபடியும் மறுபடியும் படைக்கிறான். ஒரு சில ஜீவர்கள் அப்படி அவனுக்குக் கிடைத்தாலும், பெரும்பாலான ஜீவர்கள் இவனுடைய லீலைக்கே இலக்காவதால் இவ்வுலகம் லீலா விபூ₄தி எனப் பெயர் பெற்றது. பத்₃த₄ஜீவர்களும் கணக்கற்றவர்களாகையாலே இந்த லீலா விபூ₄தி ஒரு நாள் ஆளில்லாமல் போய்விடும் என்று நினைப்பதற்கும் இடமில்லை. 'இவ்வுலகத்தில் இன்பமும் நிலையற்றதாயிருப்பதாலும், துன்பம் கலந்திருப்பதாலும் இவ்வுலக வாழ்வில் வெறுப்புற்று ஜீவன் தன்னையடைவதற்கு வழிவகைகளை ஆராய்ந்து அதன்படி நடப்பான்' என்பதே எம்பெருமானுடைய திருவுள்ளம். பத்₃த₄ ஜீவர்களும் எம்பெருமானுடைய உடைமையாகையால் அவர்களில் சிலராவது தன்னை அடைய வேண்டும் என்னும் எண்ணத்தாலேயே திருப்பித திருப்பி இவ்வுலகத்தைப் படைக்கிறானாகையாலும், 'இவ்வுலகத்தைப் படைக்காமலே இருந்து விடலாமே?' என்னும் கேள்விக்கு இடமில்லை. இவ்வுலகில் படைக்கப்படுகிறவர்களும் துன்பத்தோடு இன்பத்தையும் அநுபவிக்கிறார்கள். அந்தத் துன்பத்தோடு கலந்த இன்பமே போதுமென்று அந்த வாழ்க்கையை நீடித்துக் கொள்வதற்காகப் படாதபாடு படுகிறார்கள். ஆகையால் துன்பத்தை மட்டும் பார்த்து 'இவ்வுலகப் படைப்பு தேவையில்லை; வேண்டாம்' என்று சொல்லுவதற்கும் எவருக்கும் தகுதியில்லை. இத்தகைய துன்பமும் இன்பமும் தேவையில்லை என்று நினைப்பவர்களும் இவற்றிலிருந்து விடுதலை பெறவும் அவன் வழி காட்டியிருக்கிறான். ஆகையால், எம்பெருமானுடைய இந்த விளையாட்டைக் கொடு விளையாட்டு என்று சொல்லமுடியாது.

http://acharya.org

மணவாள ராஜஹம்ஸம், பவானி

4. நரகாசுரன் 'வராகப்பெருமாளுக்கும் பூமிதேவிக்கும் பிறந்த மகன்' என்கிறார் காஞ்சி பீடாதிபதி. இதற்கு ஏதேனும் ஆதாரம் உள்ளதா?

வராகப் பெருமாள் ப்ரளயச் சேற்றில் அழுந்தியிருந்த பூமியைத் தூக்கியெடுத்தபோது, பூமியிலிருந்த தோஷங்களெல்லாம் சேர்ந்து நரகாசுரனாக உருவாயிற்று என்று புராணங்களில் சொல்லப்படுவதாகப் பிரசித்தியுள்ளது. அதனாலேயே அவன் பூமிபுத்ரன் என்று சொல்லப்படுகிறான். மற்ற தெய்வங்களுக்குப் போலே ப்ராக்ருதமான ஸ்த்ரீ புருஷச் சேர்க்கையால் எம்பெருமானுக்குக் குழந்தையுண்டாவதில்லை என்பது ஸர்வசாஸ்த்ர ப்ரஸித்தம். ஸுதர்சனர் பதில் 11—94ல் ஸ்ரீபாஞ்சராத்ர ஸம்ஹிதைகளில் ஒன்றான ஸ்ரீப்ரச்ந ஸம்ஹிதையில் உள்ள ச்லோகங்களில் நரகாஸுரனை பூமி புத்திரன் என்று குறித்திருப்பதும், ப்ரளயச் சேற்றில் அழுந்திக் கிடந்த பூமியிலுள்ள தோஷங்கள் ஓர் அசுரனாக உருவெடுத்ததைக் கருதியே என்று கொள்ள வேண்டும்.

A. சத்யநாராயணன், திருக்கண்ணங்குடி

5. 'சிவவாக்கியர்' என்னும் பெயருடன் சைவத்திலிருந்தவர்தான் திருமழிசையாழ்வாராக மாறினார் என்று சிலரும், 'இது சரியல்ல' என்று சிலரும் கூறுகிறார்கள். விளக்க வேண்டுகிறேன்.

'சிவவாக்கியர்' என்னும் சித்தர் கி. பி. 14ம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர் என்பதே ஆராய்ச்சியாளர்களின் முடிவு. அவர் தன்னைத் திருமழிசையாராகவே நினைத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகவே சந்தவிருத்தத்தில் பல பாடல்களைப் பாடியிருக்கிறார். திருச்சந்தவிருத்தத்திலிருந்தும் சில பாடல்களைத் திருடிச் சேர்த்துக்கொண்டிருக்கிறார். ஆயினும் அவர் எழுதியுள்ள பாடல்களிலுள்ள பல பிற்காலக் கொச்சைச் சொற்கள் அவர் மிகவும் பிற்காலத்தவர் என்று காட்டிக்கொடுத்துவிடுகிறது.

http://acharya.org

V. S. கருணாகரன், புதுடில்லி

6. ஸுதர்சனம் 580 ஆசார்ய வைபவ மஞ்ஜரியில் [பக் 210, 211] எடுக்கப்பட்ட "விஷ்ணு சித்தை: விவவ்ரே" என்னும் ஸாராவளிச்லோகத்திற்கு தேசிகனின் குமாரராகிய வரதகுரு அருளிச்செய்த அதிகரண சிந்தாமணி எனும் வ்யாக்யானத்தில், 'ப்ரமேய ஸங்க்ரஹம் முதலான க்ரந்தங்களை இயற்றிய விஷ்ணு சித்தர் ஶடமர்ஷண கோத்ரத்தில் உதித்தவர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால் இந்த விஷ்ணு சித்தர் எங்களாழ்வான் அல்லர் என்று தேறுகிறதே? மேலும் இந்த ஶ்லோகத்தில் வ்யாஸார்யராகிற ஶ்ருதப்ரகாசிகாசார்யர், விஷ்ணுசித்தர், வாதிஹம்ஸாம்புவாஹராகிற கிடாம்பி அப்புள்ளார் என்னும் வரிசையில் அப்புள்ளாருக்கும் வ்யாஸார்யருக்கும் நடுவில் எடுக்கப்பட்ட விஷ்ணுசித்தர் இவர்களுக்கு ப்ராசார்யரான எங்களாழ்வானைக் காட்டிலும் வேறுபட்டவர் என்று விளங்குகிறது. இது பற்றித் தங்கள் கருத்தைத் தெரிவிக்கவும்.

சிந்தாமணி வ்யாக்யானத்தில் இப்படியிருப்பதை அடியேனும் அறிவேன். இது பற்றி எங்களாழ்வான்வம்ஶஸ்தர்களான பெரியவர்களின் கருத்து பின்வருமாறு:—

1. விஷ்ணுசித்தர் என்னும் திருநாமமுடையவராய், பல கிரந்தங்களை அருளியவரான ஆசார்யர் விஷ்ணுபுராண வ்யாக்யாதாவான எங்களாழ்வானைத் தவிர வேறொருவர் இருப்பதாக எந்தப் பூர்வாசார்ய க்ரந்தத்திலுமில்லை. இதனால் சிந்தாமணி வ்யாக்யானத்தில் "ஶடமர்ஷண கோத்ர ப்ரபவா:" [ஶடமர்ஷண கோத்ரத்தில் உதித்தவர்] என்று விஷ்ணு சித்தருக்கு விசேஷணம் இட்டிருப்பது பிற்காலத்தவர்களால் சேர்க்கப்பட்டதாயிருக்க வேண்டும்.
2. பூர்வாசார்யர்கள் பல ஆசார்யர்களைக் குறிப்பிடும்போது காலவரிசைப்படி எடுக்காமலிருப்பதும் உண்டு. உதாரணமாக தேசிகன் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஆசார்யர்களை ஏறு வரிசையில் எடுக்கும்போது "ஸ்ரீவிஷ்ணுசித்தவாதிஹம்ஸாம்



http://acharya.org

பூவாஹ வரதாசார்யாதிகள் ஸங்க்ரஹித்தார்கள்" என்று வாதிஹம்ஸாம்பூவாஹருக்கு முன்னால் விஷ்ணுசித்தரை எடுத்திருக்கிறார். அதிகரணஸாராவளி ச்லோகத்திலோ வெனில் ஆசார்யர்களை இறங்கு வரிசையில் எடுக்கும் போது வாதிஹம்ஸாம்புவாஹருக்கு முன்னால் விஷ்ணுசித்தரை எடுத்துள்ளார். எங்களாழ்வானைக் காட்டிலும் வேறான ஒரு விஷ்ணுசித்தர் இருந்தார் என்று பூர்வாசார்ய க்ரந்தங்களிலிருந்தோ இன்றளவுமுள்ள ஆசார்யர்களுடைய வம்ச பரம்பரைகளிலிருந்தோ தெரியும்வரையில் இவ்விஷயத்தில் கருத்து வேற்றுமை இருந்தே தீரும். அவரவர் கருத்தை அவரவர் வைத்துக்கொள்வதில் நமக்கு ஆக்ஷேபமில்லை. இது விஷயமாக மேலும் சர்ச்சை தேவையில்லை.

N. ஸ்ரீநிவாஸன், சென்னை—33.

7. டிசம்பர் 95 ஸப்தகிரி இதழில் (பக். 11, 12) வித்வான் ரா. கண்ணன் என்பவர், "ஆழ்வார்கள் திருவுள்ளம்" என்றகட்டுரையில். ஆழ்வார்கள் சமயசமரசத்தை போதிப்பதாகவும், சிவபெருமானை ஸ்ரீமந்நாராயணனுடன் சமமாகக்கருதிப் போற்றியதாகவும் ஒரு மயக்கத்தை உருவாக்கும் வண்ணம் எழுதியுள்ளார். செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலின் திருவில் வெளிவரும் இதழில் இத்தகைய அறிவை மயக்கும் கட்டுரைகள் வெளிவருவது குறித்தும், மேற்குறித்த கட்டுரையில் கண்ட பாசுரங்களின் உண்மைப்பொருள் குறித்தும் தெளிவுபடுத்த வேண்டுகிறேன்.

ஆழ்வார்கள் சமரசவாதிகள் என்று ராஜாஜி காலத்திலிருந்து 'கல்கி' முதலான பத்திரிகைகளில் கட்டுரைகள் வெளிவந்தபோது விரிவாகவும் திணவடங்கவும் அக்கட்டுரைகளை மறுத்திருக்கிறோம். ஸுதர்சனர் பதில்களிலும் இப்போது வெளிவந்து கொண்டிருக்கும் ஸுதர்சன விஜயத்திலும் காணலாம். "உயிர்த்தோற்றத்துக்குக் காரணமான ஆண்பெண் தத்துவம் கடவுளுக்குக் கற்பிக்கப்பட்டுள்ளது"

என்று இவர் எழுதுவதிலிருந்து தெய்வங்களெல்லாம் கற்பனை என்னும் நாஸ்திகக்கருத்தை உடையவர் இக்கட்டுரையாளர் என்று விளங்குகிறது. "பொன் திகழும் மேனி" "அரன் நாரணன்" "ஏற்ருன் புள்ளூர்ந்தான்" ஆகிய முதலாழ்வார்களின் பாசுரங்களில் திருமாலின் பரத்துவமும் சிவனின் தாழ்வும் வெளிப்படையாகக் கூறப்பட்டிருக்கும் போது இவர் "இருவரும் ஒன்று" என்று கூறுவதாக அப்பாசுரங்களுக்குப் பொருள் எழுதுவது மனஸ்ஸாக்ஷியை மறைத்துக் கொண்டு எழுதுவதாகும். "பாருருவில்" என்று தொடங்கும் திருநெடுந்தாண்டகப் பாசுரத்தில "இமையவர் தம் திருவுரு வேறு எண்ணும்போது" என்று மும்மூர்த்திகளும் வெவ்வேறு என்பதைத் திருமங்கையாழ்வார் தெளிவாக உணர்த்தி, "ஒன்று ஆம் சோதி" என்றும், அது "முகிலுருவமே" என்றும் ஆழ்வார் தெளிவாகப் பரதத்துவ நிர்ணயம் செய்திருக்கும் போது, "ஒன்ரும் சோதி" என்று கூட்டி இவர் சமரசவாதம் செய்வது இப்பாசுரத்திற்கும் ஆழ்வாரின் மற்ற பாசுரங்களுக்கும் முரண்பட்டது. திருவரங்கத்தில் திருநெடுந்தாண்டகம் அரையர் சேவையில் மூன்று உருவங்களையும் விரிவாக விளக்கி "ஒன்று ஆம் சோதி—அல்லாதவையிரண்டும் அழியும் சோதி" என்று அரையர் ஸ்வாமிகள் தம்பிரான்படி வியாக்கியானம் ஸேவிப்பதை இந்த வித்துவான் கேட்டிருக்கமாட்டார் போலும்! "புகழும் நல் ஒருவன் என்கோ" என்னும் பதிகத்தை எடுத்துக்கொண்டு சமரசவாதம் செய்கிருர். ஆழ்வார் இப்பதிகத்தில பஞ்சபூதங்களும் சிவனும் பிரமனும் எம்பெருமானே என்கிருர். இது கொண்டு மும்மூர்த்திகளும் பரமாத்மாவே என்று சொன்னுல், பஞ்சபூதங்களும் பரமாத்மாவே என்று ஆகிவிடாதா? இவையனைத்தும் பரமாத்மாவான ஸ்ரீமந்நாராயணனின் சரீரம்என்ற கருத்திலேயன்ரோ ஆழ்வார் இப்படி அருளியிருக்கிருர். அப்படியிருக்கும்போது 'இதனுள் எந்த நெறியும் இறைவனையடைய வகுத்த நெறியே, எங்கும் நீக்கமற நிறைந்து ஒளிர்பவனும் அவனே. எதுவும் இழிந்தது, உயர்ந்தது என்று கருதலாகாது என்னும் ஆழ்வார்கள் திருவுள்ளம் எல்லோருக்

கும் தெள்ளிதின் புலனாகும் அன்றோ? சமயசமரசம் பொலி வுறும் அன்றோ?' என்று இவர் எழுதுவது மக்களை ஏமாற் றவும் மயக்கவும் என்றே புலனாகிறது. இத்தகைய குழப்ப வாதக் கட்டுரைகளை ஸப்தகிரி ஆசிரியர் வெளியிடாமல் இருப்பது நல்லது.

G ஸ்ரீநிவாசன், திருச்சி

**8 ஒரு ஸ்ரீவைஷ்ணவனுக்குத் தேவையான அடிப் படை குண நலன்கள் யாவை? புறத்தோற்றத்தினால் மட்டும் வைஷ்ணவத்வம் சித்திக்குமா?**

சாஸ்திரங்களிலும் பூர்வாசார்யக்ரந்தங்களிலும் பலபல ஆத்ம குணங்களும் சரீரலக்ஷணங்களும் விளக்கப்பட்டுள்ளன. அவைகளில் மிகவும் முக்கியமானது புறந்தொழாமையும், பஞ்சஸம்ஸ்காரமுமேயாகும். ஒரு வைஷ்ணவருக்கு நமக்குத் தோன்றும் சில காரணங்களால் வைஷ்ணவத்வம் இல்லை என்று நிர்ணயிப்பதற்கு நமக்கு அதிகாரமில்லை. அது பாகவதாபசா ரத்தில் முடிந்து நம்முடைய வைஷ்ணவத்வத்தையும் இழக்க வைக்கும். அவரவர் தமக்கு வைஷ்ணவத்வம் உண்டா என் பதைத் தாமே ஆத்ம பரிசோதனை செய்து கொள்ளலாம். சிலர் நாடறிந்த வைஷ்ணவர்களாகவும் இருப்பார்கள். நாராயண னறிந்த வைஷ்ணவத்வமே முக்கியமானது.

ஸ்ரீ மணவாளராஜஹம்ஸம், பவானி

**9. பெரியாழ்வார் திருமொழியில் 5-4-4 ல் 'சேவகனே' என்று எம்பெருமானை விளிப்பதாகவருகிறது. வேலைக்காரன் என்று பொருள்படும் அச்சொல்லால் நாம் எம்பெருமானை விளிக்கலாமா?**

தற்கால வழக்கில் 'சேவகன்' என்னும் சொல்லுக்கு 'வேலைக்காரன்' என்னும் பொருளே வழங்குகிறது. பழந்தமிழ் இலக்கியத்தில் 'சேவகன்' என்னும் சொல்லுக்கு 'வீரன்' என் னும் பொருளும் ,உண்டு. இப்பொருளிலும், 'அடியவர்களுக்குப் பரதந்த்ரன்' என்னும் பொருளிலும் ஆழ்வார்கள் அப்படி விளிப்பது உண்டு. அடியார்க்கடியவன் என்பது பெருமை யேயாகையால் நாம் அப்படி விளிப்பதிலும் தவறில்லை.

கி ராஜன். 14, வசந்திநகர், கோயம்புத்தூர் - 641 042

10 தங்கள் ஸேவையை எவ்வளவு பாராட்டினாலும் தகும். வருமானம் வரக்கூடிய வக்கீல் தொழிலையும் விட்டு, பகவத்கைங்கர்யபரராக வாழ்வதை எண்ணி மிகவும் பாராட்டுகிறேன். தங்களது கருத்துக்களில் ஆன்மீகத்துக்கு ஒவ்வாத ஒரு கருத்தும் உலவுகிறது. 'சிவன்' என்று ஒரு தனிக்கடவுள் இருப்பதாகவும், அவர் நாராயணனுக்கு ஆட்பட்டவர் அல்லது உட்பட்டவர் என்பது போலவும் எழுதிவருகிறீர்கள். இந்த விண் பிரமை எதற்கு? ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்திலேயே "சிவ:ஸ்தாணு:" என்ற சப்தம் வரவில்லையா! 'சிவதாத்யை' என்ற பெயர் பிராட்டிக்கு உண்டா இல்லையா? சிவன் ஒரு பிறமதஸ்தர் போலத் தாங்கள் எழுதிவரும் கருத்துக்கள் ஆழ்வாராதிகள் கருத்துக்களுக்கே எதிராகும். ஒன்றான பெரும் பொருள் பரம்பொருள்: அதன் நாமம் ஆயிரம் ஆயிரம், நாரணன் என்று தாங்கள் சொல்லுங்கள்; சிவன் என்று பிறர் சொல்லட்டும். இவை யாவும் அப்பரம்பொருளுக்கல்லவா உண்டான நாமங்கள். கற்றறிந்த தாங்கள் மதி மயங்கலாமா?

இக்கருத்துக்கள் விஷ்ணுசித்தவிஜயம், சங்ககாலத் தமிழர் சமயம், சாதிமத ஆராய்ச்சி, திவ்யப்ரபந்த வ்யாக்யானங்கள் முதலான பல்லாயிரம் பக்கங்கள் கொண்ட நமது நூல்களில் தலையெடுக்க முடியாதபடி கண்டிக்கப்பட்டுள்ளன. அவற்றைப் படிக்காமையால் இவ்வன்பர் இப்படிக் கடிதம் எழுதியிருக்கிறார். சுருக்கமாக இங்குபதில் கூறுகிறேன்.

வேதங்களையும் அவற்றை விளக்கவந்த ஸ்ம்ருதிகள், இதிஹாஸபுராணங்கள் முதலான நூல்களையும் ப்ரமாணங்களாகக் கொண்டது நம்முடைய வைதிகமதம். நம்முடைய வேதங்களும் உபநிஷத்துகளும் கணக்கற்ற பெயர்களையுடைய பரம்பொருள் இவ்வுலகைப் படைத்தபோது ஆகாசம் வாயு அக்னி முதலான தன் பெயர்களைச் சில அசேதனப் பொருள்களுக்கும், ஹிரண்யகர்ப்பன், ப்ரஜாபதி, சிவன், ருத்ரன், இந்த்ரன், யமன் முதலான தன்பெயர்களை தேவர்களான சில சேதனர்களுக்கும் அளித்ததாகக் கூறுகின்றன. அத்துடன் இந்த தேவர்களுக்கெல்லாம் தேவனான ஒரு தேவாதி தேவனே பரம்பொருள் என்றும, என்றுமிருப்பவன் என்றும், அவனிடம் அன்புசெலுத்துவதாலும் அவனையே



http://acharya.org

தஞ்சமாகக் கொள்வதாலும் ஸம்ஸாரி ஜீவர்கள் இவ்வுலகத் துன்பங்களிலிருந்து விடுபட்டு முக்தி நிலையை அடையலாம் என்றும் கூறுகின்றன. சுக்ல யஜுர் வேதத்தைச் சேர்ந்த சதபதப்ராஹ்மணம் ப்ரஜாபதியாகிற பிரமன் உஷஸ் என்னும் தேவியிடம் வீர்யத்தை விட்டதனால் ஒருவருடம் கர்ப்பவாசத்திற்குப் பிறகு குழந்தை பிறந்ததாகவும் அது அழுததாகவும், ஏன் அழுகிறாய்? என்று தந்தை கேட்டதற்கு, "என்னைப் பாபங்கள் பீடிக்கின்றன. அவை போவதற்குப் (பரமாத்மாவின்) நாமங்களைக் கொடும்' என்று அக்குழந்தை கேட்டதாகவும், அழுததனால் 'ருத்ரன்' என்ற பெயரையும் பவன், சர்வன், ஈசானன் முதலான மற்ற ஏழுபெயர்களையும் தந்தையான பிரமன் குழந்தைக்கு இட்டதாகவும் கூறுகிறது. நாராயணோபநிஷத் நாராயணனிடமிருந்து பிரமன், உருத்திரன், இந்திரன் முதலான அனைவரும் பிறக்கிறார்கள் என்று ஓதுகிறது. மஹோபநிஷத் "(ப்ரளயகாலத்தில) நாராயணன் ஒருவனே இருந்தான் பிரமனும் இல்லை, ஈசானனும் இல்லை" என்று ஓதுகிறது. மனுஸ்ம்ருதி முதலான ஸ்ம்ருதிகளும், ஸ்ரீராமாயணம் மஹாபாரதம் முதலான இதிஹாஸங்களும் ஸ்ரீ விஷ்ணுபுராணம் முதலான ஸாத்விக புராணங்களும், "நாராயணனே பரம்பொருள்; அவன் தன் நாபீகமலத்தில் பிரமனைப் படைத்தான். அப்பிரமன் உருத்திரன் எனப்படும் சிவனையும் மற்ற தேவர்களையும் படைத்தான். நாராயணன் ஒருவனே எவ்விதத்தாழ்வும் அற்று எல்லாக்கல்யாண குணங்களையும் உடைய பரமாத்மா. மற்ற தேவர்கள் சக்திமிக்கவர்களானாலும் பலதாழ்வுகளையுடைய ஜீவர்களே. அவர்களால் மோக்ஷமளிக்க முடியாது. நாராயணன் ஒருவனே மோக்ஷமளிக்கவல்லவன்" என்று பலவிடங்களில் முழங்குகின்றன. ஆழ்வார்களும் "நான்முகனை நாராயணன் படைத்தான் நான்முகனும் தான்முகமாய்ச் சங்கரனைத்தான் படைத்தான்" [நான்முகன் திருவ-1] "பேசநின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும் நாயகன் அவனே. கபால நன்மோக்கத்துக்கண்டு கொண்மின்" [திருவாய்மொழி 4-10-4] முதலான நூற்றுக்கணக்கான இடங்களில் இதை வலியுறுத்துகிறார்கள். சங்ககாலச் சான்றோர்களும் "திருமால் ஒருவனே பரம்பொருள்" என்றும், 'மோக்ஷமளிக்க வல்லவன்' என்றும், "பிரமன் சிவன் முதலான தேவர்கள் அவனால் படைக்கப்பட்ட ஜீவர்களே" என்றும் பரிபாடல் முதலான நூல்களில் மிகத்தெளிவாகக் கூறியிருக்கின்றனர். ஸ்ரீராமானுஜருடைய ஸ்ரீபாஷ்யம் முதலான நூல்களில் மாத்திரமல்

http://acharya.org

லாமல் சங்கருடைய பாஷ்யங்களிலும், மத்வருடைய நூல்களிலும் இவ்விஷயம் வலியுறுத்தப்பட்டுள்ளது. இப்படியிருக்கும்போது "நாராயணனுக்கு ஆட்பட்ட சிவன் என்ற ஒரு தனிக்கடவுளே இல்லை" என்று இவ்வன்பர் எழுதுவதே வீண்பிரமையாகும். நாராயணனுகிற பரம்பொருள் தன்னுடைய பெயர்களான சிவன், ருத்ரன், ஸ்தாணு முதலானவற்றைத் தன்னால் படைக்கப்பட்ட சிவனுக்குக் கொடுத்தான என்று வேதசாஸ்திரங்கள் கூறுவதால் விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தில் சிவன் ஸ்தாணு முதலான பெயர்கள் விஷ்ணுவின் பெயர்களாகப் படிக்கப்படுவதில் குறையில்லை. வேதசாஸ்திரங்கள் பல தெய்வங்கள் உண்டு என்றும், அவர்களில் ஒருவனே மோக்ஷமளிக்கவல்ல பரம்பொருள் என்றும், மற்ற தெய்வங்கள் மோக்ஷம் தவிர்ந்த அளவுபட்ட இவ்வுலகப் பலன்களையே கொடுக்கவல்லவை என்றும் ஆயிரக்கணக்கான இடங்களில் முழங்கியிருப்பதை எவராலும் மறுக்கமுடியாது. மோக்ஷத்தை விரும்பும் அனைவருக்கும் அந்தத் தேவாதி தேவன் யார் என்று ஆராய்ந்து நிர்ணயிக்கவேண்டிய கடமையும் பொறுப்பும் உண்டு. இவற்றை எவரும் தட்டிக் கழிக்க முடியாது. பேரறிவாளர்களான பூர்வாசார்யர்கள் அந்த தேவாதி தேவன் யார் என்பதை நிர்ணயிக்கும் முறையைக் காட்டியிருக்கிறார்கள். அதாவது (1) எந்த தேவனிடம் நாராயணன், விஷ்ணு, ஹிரண்யகர்ப்பன், ருத்ரன், சிவன், இந்த்ரன், யமன முதலான பெயர்கள் பொருந்தியிருக்குமோ அவனே பரம்பொருளாக இருக்கமுடியும். இப்படிப் பார்க்கும்போது "பூர்வபதாத்ஸம்ஜ்ஞாயாம அக" என்னும் பாணினி ஸூத்ரத்தின்படி நாராயண சப்தத்தில் 'ந' காரம் 'ண' காரமாக மாறியிருக்கிறபடியால் நாராயணன் என்று பிரசித்தனான தேவனிடமே நாராயண சப்தம் பொருந்தியிருக்கும். மற்ற தெய்வங்களுக்கு அது சிறிதும் பொருந்தாது. ஆகையால எல்லாநாமங்களையும் உடைய பரம்பொருள் நாராயணனே என்பது அசைக்கமுடியாமல் தேறிநிற்கிறது என்று நிர்ணயித்தார்கள். (2) வேதசாஸ்திரங்களில் காணப்படும் தெய்வங்களில் நாராயணன் ஒருவனுக்கே எந்தத் தாழ்வும் படிக்கப்படவில்லை. எல்லாக்கல்யாண குணங்களும் முழங்கப்படுகின்றன. பிரமன் சிவன் முதலான ஏனைய தெய்வங்களுக்கு வேதசாஸ்திரங்களில் பரம்பொருளால் படைக்கப்பட்டவர்களாயிருக்கை, ரக்ஷிக்கப்படுபவர்களாயிருக்கை ஸம்ஹரிக்கப்படுபவர்களாயிருக்கை முதலான பலபல தாழ்வுகள் காணப்படுகின்றன. ஆகையால் இவர்கள் பரம்பொருளின் சில நாமங்

http://acharya.org

களைப் பெற்றிருந்தபோதிலும் பரம்பொருளாக இருக்க முடியாது என்று பூர்வாசார்யர்கள் நிர்ணயித்தார்கள். இவ்விஷயங்களையெல்லாம் நாம் முற்கூறிய நமது நூல்களில் பலவாயிரக்கணக்கான பக்கங்கள் எழுதி நிலைநாட்டியிருக்கிறோம். ஸுதர்சனர் பதில்களிலும், பலவிடங்களில் 'எல்லா தெய்வங்களும் ஒன்று' 'அரியும் சிவனும் ஒன்று' முதலான வாதங்கள் பிரமாணங்களுக்குப் பொருந்தமாட்டா என்று நிர்ணயித்திருக்கிறோம். நம்மிடம் மறுப்பைப் பெற்ற பெரும்பாலானவர்கள் நமது இந்த நிர்ணயித்திற்குஇன்றவரை மறுப்பெழுதத் துணியவுமில்லை; மறுப்பெழுத முற்பட்ட ஒருசிலரும் நமது கேள்விகளுக்குப் பதிலெழுத இயலாமல் ஓய்ந்து நின்றனர். உண்மைநிலை இவ்வாறு இருக்கும்போது நம்முடைய வேதசாஸ்திரங்களில் சிறிதும் அறிவில்லாமல், "நாரணன் என்று தாங்கள் சொல்லுங்கள்; சிவன் பிறர்சொல்லட்டும், இவையாவும் அப்பரம்பொருளுக்கல்லவா உண்டான நாமங்கள்? கற்றறிந்ததாங்கள் மதிமயங்கலாமா?" என்று இவ்வன்பர் எழுதுவதே இவருடைய மதிமயக்கத்தின் உச்சநிலையாகும். "சிவதாத்யை" என்ற பெயர் பிராட்டிக்கு உண்டா இல்லையா? என்று நம்மைக் கேள்விகேட்கிறார். இக்கேள்வி இவருக்கு வடமொழியறிவில்லை என்பதை வெளிப்படுத்துகிறது. உண்மையில் இப்படியொரு பெயர் பிராட்டிக்கு எந்த நூலிலும் இல்லை. லக்ஷ்மீ ஸஹஸ்ரநாமத்தில் "ஶிவதா₃" என்று ஒருநாமம் உண்டு. நாமாவளியில் இந்த நாமத்தின் நாலாம் வேற்றுமை "ஶிவதா₃யை" என்று காணப்படுகிறது. அதையே இவர் 'ஶிவதாத்யை' என்று தவறாக எழுதுகிறார் போலும்! ஶிவதா₃ என்ற பிராட்டியின் திருநாமத்துக்கு 'மங்களங்களை அளிப்பவள்' என்று பொருள். லக்ஷ்மீ அஷ்டோத்தரத்தில் காணப்படும் 'ஶிவகரீ' என்னும் திருநாமத்திற்கும் இதுவே பொருள். இங்குள்ள 'ஶிவ' சப்தங்கள் சிவன் என்னும் பெயருள்ள தெய்வத்தைக் குறிக்கவில்லை. மங்களத்தையே குறிக்கின்றன. சிவன் பிறமதஸ்தர் என்பதுபோல் நாம் எழுதிவருவதாக இவர் கூறுவதும் தவறு. 'சிவன் நமது வேதசாஸ்திரங்களில் சக்திமிக்க ஒரு தெய்வமாகக் கூறப்படுகிறார். ஆனாலும் அவர் பரம்பொருளாக முடியாது" என்றே பிரமாணங்களைக் கொண்டு நிலைநாட்டி வருகிறோம். வேதசாஸ்திரங்களும், ஆழ்வார்களும் இவ்விஷயத்தை ஆயிரக்கணக்கான இடங்களில் உத்கோஷித்திருக்கின்றனர். நமது முற்கூறிய நூல்களில் சிலவற்றையாவது, ஸுதர்சனர் பதில்களில் சிலசதகங்களையாவது இவர் பெற்றுப் படித்தால் இவருக்குத் தெளிவு பிறந்து மதிமயக்கம் நீங்கும்.

http://acharya.org

B. K. வாசுதேவன், சென்னை-2.

11. தற்போது 'ஹிந்து, ஹிந்துமதம்' எனத் தீண்டத்தகாத, வெறுக்கத்தக்க மதம் மதத்தவர்கள் என்று எல்லா அரசியல் கட்சிகளும் ஒரு குறிப்பிட்ட மதத்தையும் மதத்தவர்களையும் அடியோடு அழிக்கக்கங்கணம் கட்டிக்கொண்டு முனைந்துள்ளார்கள். சிந்துநதி INDUS தீரத்தவரும் அதற்குகிழக்கேயுள்ளவருமான பரதகண்டத்தவர்களை ஜாதிமதபேதமின்றி (INDIANS) இந்தியர்கள் என ஒருமிக்க ஆங்கிலேயர் பெயர் சூட்டினர். (HINDUKUSH) ஹிந்துகுஷ் மலைக்குக்கிழக்கே உள்ளவர்களை ஹிந்துக்கள் என அழைத்தனர். எனவே அதே போல், இந்தியாவிலுள்ள முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் ஹிந்துக்களே. ஹிந்துமதம் எனஒருமதம் கிடையாது. அனாதியான வேதத்திலோ, உபநிடதங்களிலோ, இதிஹாஸபுராணங்களிலோ, பகவத்கீதையிலோ, பண்டை வடமொழி, தமிழ்மொழிக்காவியங்களிலோ, சங்ககால இலக்கியங்களிலோ, திருக்குறளிலோ ஹிந்து மதம் என்று ஒருமதம் குறிப்பிடப்படவில்லை. நாம் வேதக் கொள்கைகளை நடைமுறைகளைப் பின்பற்றுபவர். எனவே நாம் மறையவர். மறையவர் எனில் அந்தணர். பிராம்மணர் ஜாதிமாத்திரமன்று. வேதமாகிற வடமொழி மறை தமிழ்மறைகளை நாளும் நடைமுறையில் பின்பற்றி நடக்கும் மறையவர்கள் VEDICS. எனவே 'ஹிந்து' மதம் என்ற புரளிப்பெயர் எப்படி எப்பொழுது ஏற்பட்டது? அரசியல் வாதிகளின் புரளிபோல் அது ஒருமதமா? அதற்கு ஏதாவது ஆதாரம் உண்டா என்பவற்றிற்குக் கிருபை கூர்ந்து விளக்கம் அளிக்கப் பணிவன்புடன் பிரார்த்திக்கிறேன். ஸ்ரீதர்சனத்தில் இதற்குத்தக்க விளக்கம் வெளியிட்டால் நம் நாட்டில் ஏற்பட்டுள்ள பெரிய குழப்பத்திலிருந்து நாட்டை மீட்கும் தொண்டினைச் செய்ததாகும்.

இவ்வறிஞர் தம் கேள்வியில் இந்து மதத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கும் அத்தனையும் நூற்றுக்கு நூறு உண்மை.



http://acharya.org

இந்துமதம் என்ற பெயர் ஏற்பட்டதற்கு இவர் காட்டியிருக்கும் காரணமும் உண்மை. நம் நாட்டில் வெள்ளையர்கள் ஆட்சி புரிந்து வந்த காலத்தில் இந்தியர்களால் சிவமதம் விஷ்ணுமதம் ஆகிய இரண்டும் சிறப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. சொத்துக்கள் கிரய விக்ரயப் பத்திரங்களிலும் சிவமதம் விஷ்ணுமதம் என்றே விற்பவர் வாங்குபவர்களைப் பற்றிப் பதிவுசெய்யப்படும் வழக்கம் நிலவி வந்தது. 'இந்து மதம்' என்று எவரும் எழுதுவதில்லை. அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து மஹாத்மாகாந்தியடிகள் தலைமையில் நடைபெற்ற சுதந்திரப்போராட்டத்தின்போது சைவம் வைணவம் முதலான உட்பிரிவுகள் மக்களிடையே வேற்றுமைகளை விளைப்பதாகப் போராட்டக்காரர்களால் கருதப்பட்டது. எனவே 'எம்மதமும் சம்மதம்', 'அரியும் சிவனும் ஒன்று' என்பன போன்ற பிரசாரம் முடுக்கிவிடப்பட்டது. காலப் போக்கில் இந்தப் பிரசாரம் பெரும்பான்மையான சைவர்களால் வைணவக்கருத்துக்களை நலிவடையச் செய்வதற்குப் பயன்பட்டது. சமரசப்போர்வைக்குள் புகுந்துகொண்ட அத்வைதிகளும் தங்களுடைய சம்ப்ரதாயத்தை ஸ்தாபித்த ஆதிசங்கரரின் அத்வைதத்தை அடியோடு கைவிட்டு, விபூதி உருத்திராட்சம் போன்றவற்றைத் தாங்களும் தரிப்பதால் சைவர்களோடு ஒன்றி, பொதுஜனப்பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி, பொதுமேடைகள் போன்ற பிரசார சாதனங்களைப் பயன்படுத்திக்கொண்டு, 'அரியும் சிவனும் ஒன்று' என்ற வைணவ விரோதப் பிரசாரத்தைச் செய்யத் தொடங்கினார்கள். இந்தப் பிரசாரம் படிப்படியாக வளர்ந்து உச்சக்கட்டத்தை அடைந்து வைணவ இளைஞர்களே 'இந்தப் பிரசாரங்கள் ஒருகால் உண்மையோ' என மயங்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. இந்த இந்துமதக் கற்பனை நம் சைவ வைஷ்ணவ ஆலயங்களுக்குப் பெருத்த அநீதிகளை விளைத்து வருகிறது. இக்கற்பனையின் அடிப்படையிலேயே, ஆகமங்கள் நடைமுறைகள் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றில் மிகவும் வேறுபட்ட சைவ ஆலயங்களும் வைஷ்ணவ ஆலயங்களும் 'இந்து ஆலயங்கள்' என்று ஒன்றுபடுத்தப்

http://acharya.org

பட்டு இந்து அறநிலையச்சட்டம் இயற்றப்பட்டது. இதன் விளைவாக நாத்திகர்களான அரசியல்வாதிகளும், பெரும் பான்மையினரான சைவாத்வைதிகளும் வைணவ ஆலயங்கள், வைணவமடங்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையால் வைணவ ஆலயங்களுக்கு ஏற்பட்ட நலிவுகளைப் பல வருடங்களாக ஸுதர்சனத்தில் எடுத்துக் காட்டிவருகிறோம். இக்கற்பனையின் விளைவாகவே சைவவைணவ ஆலயங்களில் எவர்வேண்டுமானாலும் அர்ச்சகர்களாகலாம் என்றசட்டம்இயற்றப்பட்டு, அதை எதிர்த்துப் போராடி உச்சநீதி மன்றத்தில் அந்தந்த ஆலயங்களில் அந்தந்த சமூகத்தினரைத்தான் அர்ச்சகராக்கலாம் என்ற தீர்ப்புப்பெற்றதையும் எடுத்துக்காட்டியுள்ளோம். அண்மையில் ஆந்திர அரசு எல்லா ஆலயங்களிலுமுள்ள அர்ச்சகர்கள் மடாதிபதிகள் ஜீயர்கள் ஆசார்யபுருஷர்கள் முதலான அனைவருடைய உரிமைகளையும் பறித்துச் சட்டம் இயற்றியது. உச்சநீதி மன்றமும் அச்சட்டத்தில் சிலபகுதிகள் செல்லும் எனத் தீர்ப்பளித்துள்ளது. அதற்கு மேல் அப்பீல் செய்ய முயற்சிகள் நடைபெறுவதாக அறிகிறோம். இம்முயற்சிகள் வெற்றிபெறுவிட்டால் சைவ வைணவ ஆலயங்கள் வெறும் காட்சிப் பொருளாகும் நிலை தோன்றிவிடும்.

இனி இதற்குப் பரிகாரம் என்ன என்னும் கேள்வியெழுகிறது. 'இந்து' என்னும் மாயவலையிலிருந்து வைஷ்ணவர்கள் விடுபட்டுச் சென்று, ''வைஷ்ணவாலயங்களையும், மடங்களையும் வைஷ்ணவர்களே நிர்வகிக்கவேண்டும். அதில் அரசின் குறுக்கீடு கூடாது'' என்னும் நிலையைச் சட்ட பூர்வமாக விளைப்பதே இதற்குச் சரியான பரிகாரமாகும். இதே கருத்துக்களை வலியுறுத்தி நாம் ஸுதர்சனம் 40-1 [469] ல் ''இந்து(உ)ப்புக்கடலில் வைணவப் பெருங்காயத்தைக் கரைக்கவிடாதீர்'' என்னும் தலைப்பிலும், ஸுதர்சனம் 40-2 [470] ல் '''இந்து' மதத்தை விட்டுவெளியேறுவோம்'' என்னும் தலைப்பிலும் எழுதிய தலையங்கங்கள் காண்க. அதன்படி உபயஸம்ப்ரதாயத்திலும் உள்ள வைஷ்ணவ மடாதிபதிகள் ஆசார்யபுருஷர்கள் ஆலயங்களில் உரிமையுள்ள அர்ச்சகர்கள் முதலானோர் ஆகிய அனைவரும் ஒன்றுசேர்ந்து

http://acharya.org

மாநாடு கூட்டி "நாங்கள் இந்துக்களல்ல. இந்து மதத்துக்கு எத்தொடர்பும் இல்லாத வைஷ்ணவர்கள். எங்கள் அற நிலையங்களைத் தொன்றுதொட்டு நிலவிவரும் சம்ப்ரதாயப்படி நாங்களே நிர்வஹித்துக்கொள்ளுகிறோம்" என்று ஒருமனதாகத் தீர்மானம் இயற்றி அதைச் செயலாக்குவதற்குத் தொடர்ந்து போராடவேண்டும். இவ்வண்ணமாக ஏற்கனவே ராமகிருஷ்ணமடத்தார் தாங்கள் இந்துமதத்தைச் சார்ந்தவர்களல்ல என்னும் தீர்ப்புப் பெற்றிருப்பது இதற்கு முன் உதாரணமாகும். இவ்வாறு அனைவரும் இணைந்து செயல்படுவார்களா என்பது கேள்விக்குறியாகவுள்ளது. அன்பர் கேட்டுள்ளது போல் ஸுதர்சனம் ஆசிரியர் ஒருவரால் மட்டும் செய்யக்கூடிய செயலல்ல இது.

R. ரகுராமன், புத்தூர், திருச்சி-17.

12. அஹோபிலமடத்தின் சார்பில் வெளிவரும் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' பத்திரிகையில் ஸ்ரீராமாநுஜரின் சரித்திரம் படக்கதையாகத் தொடர்ந்து வெளிவருகிறது. அதில் ஸ்ரீ ராமாநுஜரின் ஆசார்யர்களான திருக்கோட்டியூர் நம்பியையும் திருமாலையாண்டானையும் அபரசிகையுள்ளவர்களாகச் சித்திரம் தீட்டப்பெற்றுள்ளது. "இது உண்மை நிலைக்கு முரணாயிற்றே. அவ்வாசார்யர்கள் பூர்வசிகையுடையவர்களாயிற்றே, இதற்குத்திருத்தம் வெளியிடவேண்டும்" என்று எழுதினேன். அதற்கு யாதொரு பதிலுமில்லை, திருத்தமும் வெளியிடவில்லை. விமர்சிக்கவேண்டுகிறேன்.

ஆழ்வார்களில் மதுரகவியாழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார் ஆகிய மூவரும், ஆசார்யர்களில் உய்யக்கொண்டார், திருக்கோட்டியூர்நம்பி, திருமாலையாண்டான், எங்களாழ்வான் முதலானவர்களும் பூர்வசிகையுடையவர்கள் என்பது உபயஸம்ப்ரதாயஸ்தர்களும் இன்றுவரை ஒருமனமாக ஏற்றுக்கொண்ட விஷயம். அந்தந்த திவ்ய தேசங்களிலும் இவர்களுடைய அர்ச்சாவிக்ரஹங்கள் பூர்வசிகையுடனேயே அமைந்திருக்கின்றன. சாஸ்த்ரஸம்ப்ரதாயசர்ச்சைகளிற்போல், புண்ட்ர விஷயத்திற்போல் கருத்துவேற்றுமைக்கு இடமேயில்லாத இவ்விஷயத்தில் உண்மைக்கு முரணாக அச்சிடுவதும், எடுத்துக் காட்டிய பிறகும் திருத்திக் கொள்ளாதிருப்பதும் மிகவும் வருந்தத்தக்கது.

http://acharya.org

K. ஜகந்நாதன், 112/9 ஸீவியூ அபார்ட்மெண்ட்ஸ், நாலாவது தெரு, கற்பகம் அவெனியூ, சென்னை—600028.

13. ஸுதர்சனர் பதில் 12 வது சதகம் 100 வது கேள்வியின் [ஸுதர்சனம் 49-1 (577)] பதிலில் "ஸ்ரீப₄ாஷ்யத்தைக் கூரத்தாழ்வானைப்போலே நடாதூராழ்வானும் பட்டோலை கொண்டிருக்கமுடியாது" என்பது பற்றி விளக்கம் அளிக்கப்பட்டிருந்தது. இதற்கு மறுப்பாக 'நடாதூராழ்வான் பெருமை' என்ற தலைப்பில் சிறிய புத்தகம் ஒன்று வித்வான் ஸ்ரீ உ வே V. S. கருணாகரன் ஸ்வாமியால் வெளியிடப்பட்டுள்ளது. அதில் அந்த ஸ்வாமி நடாதூராழ்வான் தனியன் முதலான சில காரணங்களைக் காட்டி, 'கூரத்தாழ்வானைப்போலவே நடாதூராழ்வானும் எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யம் அருளிச் செய்யும்போது திருவெழுத்துச் சாத்தினார்' என்று வாதம் செய்கிறார். அதை மறுத்து அடியேன் விரிவான கட்டுரை ஒன்றை அவருக்கும், தேவரீருக்கும் அனுப்பியிருக்கிறேன். தம் நூலில் 'ஆழ்வான் என்றால் நடாதூராழ்வானையும் குறிக்கலாம்' என்று அவர் எழுதியிருக்கிறார். "குருபரம்பராப்ரபாவத்தில் கூரத்தாழ்வான் ஒருவரே ஸ்ரீப₄ாஷ்யத்தைப் பட்டோலை கொண்டார் என்று தெளிவாகச் சொல்லியிருப்பதற்கு விரோதமில்லாமல் நடாதூராழ்வான் தனியனை நிர்வஹிக்கவேண்டுமேயல்லது, ஒவ்வொருவருடைய தனியனைக் காட்டி குருபரம்பரா சரித்ரத்தையே தமக்குத் தோன்றிய ஊகத்தின்படி மாற்றப்பார்த்தால் நமது பொக்கிஷமான குருபரம்பராப்ரபாவம் என்ற நூல் 'சின்னம் பின்னம்' என்ற கணக்கில் உருவிழந்துவிடும்" என்னும் அச்சத்தினாலேயே அடியேன் 'கூரத்தாழ்வான் ஒருவரே ஸ்ரீபாஷ்யத்தைத் திருவெழுத்துச் சாத்தினார்' என்னும் கருத்தை வலியுறுத்தி என் கட்டுரையில் நிரூபித்திருக்கிறேன். இதை ஸுதர்சனத்திலும் மீண்டும் உறுதிப்படுத்தி, அதே சமயம் நடாதூராழ்வானின் பெருமைக்கும் குறைவில்லை என்ற விஷயத்தையும் நிலைநாட்டும்படி கேட்டுக்கொள்கிறேன்.

"நடாதூராழ்வான் ஸ்ரீபாஷ்யத்தைப் பட்டோலை கொண்டாரா?" என்பதே இங்கு விவாதத்தில் முக்கியமான விஷயம்.



http://acharya.org

அதற்கு குருபரம்பராப்ரபாவம் முதலான ப்ராசீன க்ரந்தங்களில் எந்த ஆதாரமும் இல்லை. சில விரோதங்களும் வருகின்றன. இருவரும் திருவெழுத்துச் சாத்தியிருந்தால் பகவச்சேஷித்வத்திற்கு முரணான வார்த்தைக்கு ஒப்பாமல் கூரத்தாழ்வான் திருவெழுததுச் சாத்தாமலிருக்க, அப்போது எம்பெருமானார் கோபிக்க நேர்ந்த சமயத்தில் நடாதூராழ்வானும் கூடவே திருவெழுத்துச் சாத்துபவராக இருந்திருந்தால் அவர் எம்பெருமானாருக்கோ அல்லது கூரத்தாழ்வானுக்கோ சாதகமாக வார்த்தையருளியிருக்கவேண்டும். இப்படி எந்த நூலிலும் காணப்படவில்லையாகையால் நடாதூராழ்வான் திருவெழுத்துச் சாத்துபவராக இருந்திருக்க முடியாது. கூரத்தாழ்வான் பரமபதித்துவிட்டபடியால் ஸ்ரீபாஷ்யத்தில் திருவெழுத்துச் சாத்தாமலிருந்த எஞ்சிய பகுதியை, மேல்கோட்டை திருநாராயணபுரத்திலிருந்து எழுந்தருளியபின் பூர்த்திசெய்வதற்கு ஸ்ரீவிஷ்ணுசித்தரான எங்களாழ்வானைக்கொண்டு எம்பெருமானார் எழுதச்செய்தார் என்னும் ஐதிஹ்யத்தை ஸ்ரீ உ வே கருணாகரன் ஸ்வாமி ஒப்புக்கொண்டுள்ளார். கூரத்தாழ்வான் நடாதூராழ்வான் ஆகிய இருவர் பட்டோலை கொண்டிருந்தால் "ஸ்ரீபாஷ்யத்தின் எஞ்சியபகுதியை எழுதுவதற்கு நடாதூராழ்வான் ஒருவரே போதுமே. எங்களாழ்வானைக் கொண்டு எம்பெருமானார் பூர்த்தி செய்திருக்கவேண்டிய அவசியமில்லையே" என்னும் கேள்வி எழுந்தே தீரும். எம்பெருமானார் பரமபதிக்கும்போது அவருடைய ப்ரதான சிஷ்யர்களான கூரத்தாழ்வானும் முதலியாண்டானும் பரமபதித்துவிட்டார்கள். ஆகையால் ஸ்ரீபாஷ்யத்தை அருளிச்செய்யும்போதே உசாத்துணையாக இருந்தவரும், இனிய மருமகனுமான நடாதூராழ்வானுக்கு ஸ்ரீபாஷ்ய ஸிம்ஹாஸனத்தை அளித்தது மிகப்பொருத்தமே. அதுகொண்டு அவர் ஸ்ரீபாஷ்யத்தைப் பட்டோலை கொண்டார் என்று கல்பிக்கமுடியாது. இதற்காக "குருபரம்பராப்ரபாவம், பெரியவாச்சான்பிள்ளையருளிய மாணிக்கமாலை, திருமாலையாண்டான் வம்ஶஸ்தராகிய யாமுநாசார்யர் அருளிய ப்ரமேய ரத்னம் ஆகியவற்றிலே கூரத்தாழ்வான் என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கும் ஐதிஹ்யங்களில், லேகக ப்ரமாதத்தால் நடாதூராழ்வான் என்பது கூரத்தாழ்வான் என்று மாற்றப்பட்டு விட்டது" என்று கூறுவது

http://acharya.org

வலிந்து வாது செய்வதேயாகும். இப்படிக் கூறத்தொடங்கினால் பூர்வாசார்யக்ரந்தங்களைத்துமே தாறுமாருகத் திருத்தப்பட வழிவகுக்கும். "கூரத்தாழ்வானுக்குள்ள பெருமை நடாதூராழ்வானுக்கில்லை" என்று அடியேன் காரணம் காட்டி எழுதியதைப் பெரிய அபசாரம் என்கிருர் கருணாகரன் ஸ்வாமி. உண்மையில் "கூரத்தாழ்வானுக்குள்ள பெருமை முதலியாண்டான் முதலான எம்பெருமானாருடைய எந்த சிஷ்யருக்கும் இல்லை" என்று அடியேன் எழுதியிருந்தால் கூட அதில் எந்த அபசாரமும் இல்லை. "அக்ர்யம் யதீந்த்ர சிஷ்யாணாம்" [எம்பெருமானாருடைய சிஷ்யர்களுக்குள் முதலிடத்தை வகிப்பவர்] என்று கூரத்தாழ்வானுக்குத் தனியன் அமைந்திருப்பதிலிருந்தே கூரத்தாழ்வானுக்குள்ள பெருமை மற்ற எந்த ஸிஷ்யருக்கும் இல்லை என்று விளங்குகிறது. ஓர் ஆசார்யருக்குள்ள பெருமை மற்றவர்களுக்கில்லை என்று கூறுவது அபசாரம் என்று சொல்லத்தொடங்கினால், திவ்யப்ரபந்த வ்யாக்யானங்களில் ஒவ்வொரு ஆழ்வாருக்குள்ள பெருமை மற்றவர்களுக்கு இல்லை என்று நிரூபித்திருப்பது அபசாரமாம்படி நேரும். "உண்டோ சடகோபர்க்கொப்பொருவர்" என்று பதினைந்தாம் பாட்டில் அருளிய மாமுனிகளே, "உண்டோ பெரியாழ்வார்க்கொப்பொருவர்" என்று தம் உபதேச ரத்தினமாலையில் இருபதாம் பாட்டில் அருளிச்செய்கிருர். ஒவ்வொருவருடைய பெருமையையும் ஒவ்வொரு கோணத்தில் ஆராயும்போது ஒருவருக்குள்ள பெருமை மற்றவர்க்கில்லை என்று சொல்லுவதில் எக்குற்றமுமில்லை. கருணாகரன் ஸ்வாமி "எம்பெருமானார் தம் சரமதசையில் ஸ்ரீபாஷ்ய ஸிம்ஹாஸனத்தை நடாதூராழ்வானுக்கு அருளினார். இப்பெருமை அப்போதிருந்த வேறெந்த சிஷ்யருக்குமில்லை" என்று கூறினால் அது அபசாரமாகாது. உண்மையுரைத்தலேயாகும். நடாதூராழ்வானுக்குப் பெருமை உண்டாக்குவதற்காகக் கூரத்தாழ்வானுக்கே அஸாதாரணமான ஸ்ரீபாஷ்யத்தைப் பட்டோலைகொண்ட பெருமையை நடாதூராழ்வானுக்கும் ஏற்றிச் சொல்வது நடுநிலையாளர்களால் ஏற்கத்தக்கதல்ல என்பதே நம்முடைய கருத்து. இக்கருத்தை அன்பர் ஜகந்நாதன் நடுநிலை நின்று தம் கட்டுரையில் விளக்கியுள்ளார். ஸ்ரீஉ. வே.

http://acharya.org

கருணாகரன் ஸ்வாமி எழுதியுள்ள "நடாதூராழ்வான் பெருமை" என்னும் புத்தகம் தேவைப்படுவோர் "ஸ்ரீ உ வே V. S. கருணாகரன், R-15. Andrews Ganj Extension. NEWDELHI-110049" என்னும் விலாஸத்துக்கு நேரடியாக எழுதிப்பெறலாம்.

A. சத்யநாராயணன், திருக்கண்ணங்குடி.

**14.** இந்த சதகத்தின் பதினோராவது கேள்வியில் கூறியிருப்பதுபோல் வைஷ்ணவத்தை இந்து மதத்திலிருந்து பிரிக்கமுடியாது. இந்து மதத்தில் பொதுவேதநூலாக பகவத் கீதை உள்ளது. எல்லாராலும் வழிபடக்கூடிய கடவுளாகப் பரம்பொருளான திருமால் உள்ளார். மேலும் பிரித்தால் சைவர்கள் அத்வைதிகள் முதலானோரை விஷ்ணு கோவில்களில் சேவிக்கக்கூடாது, தேரிழுக்கக்கூடாது, வேதபாராயணம் முதலான கைங்கர்யம் செய்யக்கூடாது என்று சொல்லவேண்டிவரும். மற்றும் பல சிக்கல்களும் ஏற்படும். விளக்கவேண்டுகிறேன்.

சித்தாந்த சைவர்கள் கீதையை ப்ரமாணமாக ஒப்புக்கொள்வதில்லை. லிங்காயத்துக்கள் முதலான பல சைவர்களும் இந்து மதத்தைச் சேர்ந்த நாத்திகர்களும் விஷ்ணு கோவில்களில் வழிபடுவதில்லை. "வைஷ்ணவத்தைப் பிரிப்பது மிகவும் கடினம், மிகப்பெரிய போராட்டம் நடத்தவேண்டும்" என்று நானே உணர்த்தியிருக்கிறேன். எல்லா ஆலயங்களையும் இந்துக்களே நிர்வஹிக்க வேண்டுமென்னும் ஒரு கிளர்ச்சி நடைபெற்று வருகிறது. அது வெற்றிபெற்றால் சைவாத்வைதிகளை மிகுதியாகக் கொண்ட இந்துக்கள் விஷ்ணு கோயில்களைச் சிவன் கோயில்களாக மாற்றிவிடுவார்கள். அந்நிலைவரும்போது விஷ்ணுகோயில்கள் வைஷ்ணவமதத்தவர்களால் நிர்வகிக்கப்படவேண்டும் என்று மற்ற இந்துக்களை ஒப்புக்கொள்ளும்படி செய்யவேண்டுமென்பதே நம் நியாயமான கோரிக்கை. இதற்கு இசையாவிட்டால வைணவம் பிரிந்தே தீரும். நூற்றுக் கணக்கான வருடங்களுக்கு மேற்பட்ட பழக்கவழக்கங்களுக்கு முரணாக, சைவாத்வைதிகளை விஷ்ணுகோயில்களில் வழிபடக்கூடாது, கைங்கர்யம் செய்யக்கூடாது, தேரிழுக்கக்கூடாது என்று வைஷ்ணவர்கள் எவரும் சொல்லவில்லை, சொல்லவும் மாட்டார்கள். அப்படிச் சொன்னாலும் அது சட்டப்படி செல்லாது.

http://acharya.org

Dr S குலசேகரன், சென்னை.

15. நாதமுனிகளின் காலத்தையும் வாழ்க்கை வரலாற்றையும் விளக்கும் "நாதவைணவம்" என்னும் எனது நூலை விமர்சிக்கவேண்டுகிறேன்.

### புத்தக விமர்சனம்

நாத வைணவம்:— ஆசிரியர் டாக்டர் குலசேகரன்— பக்கங்கள் 240. விலை ரூ 40—00. கிடைக்குமிடம்— திருமகள் வெளியீடு—E 113, 16 வது குறுக்குத்தெரு. பெசண்ட் நகர், சென்னை-600090.

'வைணவத்தில் ஆழ்வார்கள் காலநிலை' என்று ஆழ்வார்களின் காலம் பற்றிய ஆராய்ச்சி நூல் எழுதிய இவர் ஆசார்யர்களுடைய காலத்தை ஆராய்ச்சி செய்யத் தொடங்கி முதல் வெளியீடாக இந்நூலை வெளியிட்டுள்ளார். இதில் இவர் நாதமுனிகளின் காலத்தை கி. பி. 913 முதல் 978 வரை பத்தாம் நூற்றுண்டில் 65 வயதே வாழ்ந்தவராகக் குறிப்பிடுகிறுர். இதையொட்டி ஆளவந்தார் காலத்தை 11-வது நூற்றுண்டாகவும், ஸ்ரீராமானுஜர் கி. பி. 1077 ல் பிறந்து 12 ம் நூற்றுண்டில் பெரும் பகுதி வாழ்ந்தவராகவும் குறிப்பிடுகிறுர். நம்முடைய ஆசார்யர்களில் நாதமுனிகள், ஆளவந்தார் ஆகியோரின் காலத்தை நிர்ணயிக்கக் கூடிய வரலாற்றுச் செய்திகள் மிகக்குறைவாகவே கிடைக்கின்றன. ஆனுல், ஸ்ரீராமானுஜரைப் பற்றி அச்செய்திகள் கர்நாடகத்திலும் தமிழகத்திலும் மிக அதிகமாகக் கிடைக்கின்றன. குருபரம்பரை முதலான எல்லா நூல்களிலும் ஸ்ரீராமானுஜர் கி. பி. 1017 ல் அவதரித்து 1137 வரை வாழ்ந்ததாகவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை சரித்திர ஆராய்ச்சியாளர் பலரும் இதை ஏற்றுக்கொண்டுள்ளனர். ஸ்ரீராமானுஜர் கர்நாடக தேசத்தில் சில அருஞ்செயல்களைச் செய்திருக்கிறுர். அவற்றிலிருந்து அங்குள்ள ஆராய்ச்சியாளர்கள் அவரது காலத்தை 1017 முதல் 1137 வரை என்றே நிர்ணயித்திருக்கிறுர்கள். Academy of Sanskrit Research, Melkote-571431, (Karnataka State) என்னும் ஆராய்ச்சி நிறுவனத்தின்செய்திப் பத்திரிகையில் (Volume 8—No 2 April-June Issue1996) இதுபற்றிய ஆராய்ச்சியாளர்கள் "ஸ்ரீராமானுஜருடையகாலத்தை கி.பி.

7

http://acharya.org

1137க்குட்பிறகு தள்ளினால் அவர் விஷ்ணுவர்த்தனனைச் சந்தித்தது, மேல்கோட்டை, பேளூர் கோயில்களைக் கட்டியது ஆகியவற்றின் காலத்தோடு பொருந்தி வராது'' என்று பேசியிருப்பது வெளியிடப்பட்டுள்ளது. இதிலிருந்து பாரததேசத்திலுள்ள வைணவர்கள் ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் ஸ்ரீராமானுஜருடைய காலம் 1017 முதல் 1137 வரை என்றே வரலாற்று நூல்கள் வரலாற்றுச் செய்திகளின் அடிப்படையில் நிர்ணயித்துள்ளார்கள் என்று விளங்குகிறது. இவ்வாசிரியரின் கருத்து இத்தோடு முரண்படுகையால், பல ஊகங்களைக் கொண்டு இவர் ஆளவந்தார் காலத்தைப் பதினோராம் நூற்றாண்டு என்றும் நாதமுனிகள் காலத்தைப் பத்தாம் நூற்றாண்டு என்றும் கூறுவது ஏற்கத்தக்கதல்ல. கர்நாடக மாநிலத்திலுள்ள ஸ்ரீராமானுஜர் பற்றிய வரலாற்றுச் செய்திகளைக்கொண்டு அவருடைய காலத்தை நிர்ணயித்த பின்பே அதற்கு முரண்படாமல் நாதமுனிகள் ஆளவந்தார் காலத்தை இவர் நிர்ணயிக்கவேண்டும். ஆக, இந்நூலில் இவர் தம்முடைய சில ஊகங்களின் அடிப்படையில் நாதமுனிகள் காலத்தை நிர்ணயித்திருப்பது நடுநிலையாளர்களால் ஏற்கத்தக்கதல்ல. நிற்க.

இந்நூலில் ஆசிரியர் நாதமுனிகளின் காலத்தை நிர்ணயிப்பதோடு நில்லாமல், நாதமுனிகள் தம்முடைய வாழ்க்கை வரலாற்றைத் தம் வாயாலேயே கூறுவதுபோன்ற பல கற்பனைகளை எழுதியிருக்கிறார். அவற்றில் பல தவறுகள் உள்ளன. ஒருசிலவற்றைக் காட்டுகிறோம். (1) (பக்கம் 27) "பதரிகாசிரமத்திற்கு முந்தியிருக்கும் திருப்பிரிதியை நாதமுனிகள் பதரிப்பதிகத்திற்கு முன்னமே வைத்திருப்பதால் அவர் பதரிப்பக்கம் செல்லவில்லை என்பது தெளிவு' என்கிறார். பெரிய திருமொழியை ஆழ்வார் எப்படிப்பாடினாரோ அப்படியே நாதமுனிகள் சேர்த்திருப்பாரேயொழிய மாற்றியிருக்கமாட்டார். தம் இஷ்டப்படி நாதமுனிகள் முன்பின் மாற்றிவிட்டதாக இவர் கூறுவது மிகவும் பொருந்தாது. திருப்பிரிதி பதரிக்கு வடக்கே மானஸஸரோவர்க்கரையிலிருந்தது என்பதைப் பலகாரணங்களைக் காட்டி நாம் நிரூபித்துள்ளது வைணவவுலகம் அறிந்தது. அதைப் பல பெரியோர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். எவரும் மறுக்க

http://acharya.org

வில்லை. (2) (பக்கம் 62) "தெய்வங்களுள் விநாயகரும், பக்தி வரலாறுகளில் துருவனுடையதும் ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் காணப்படாததைக்கண்டு அவர் (நாதமுனி) வியந்தார்" என்று எந்த ஒரு ஆதாரத்தையும் காட்டாமல் இவர் எழுதியுள்ளது வியப்புச்குரியது. விநாயகர் ஏழாவது நூற்றுண்டுக்கு முற்பட்ட எந்தத் தமிழ் நூலிலும் காணப் படவில்லை; அதனுலேயே ஏழாம் நூற்றுண்டுக்கு முற்பட்டவர் களான அனைத்து ஆழ்வார்களின் அருளிச்செயல்களிலும் காணப்படவில்லை. இது கொண்டே ஆழ்வார்கள் எவரையும் ஏழாவது நூற்றுண்டுக்குப் பிற்பட்டவராகக் கூறமுடியாது என்று முன்னமே நம் நிர்ணயித்திருக்கிறேம். புராணங் களிலுள்ள எல்லாச்சரிதத்திரங்களையும் விடாமல் ஆழ்வார்கள் பாடவேண்டுமென்று எதிர்பார்ப்பது தவறு. எனவே மோக்ஷத்தை விரும்பாத துருவன் சரித்திரம் ஆழ்வார்களின் அருளிச்செயல்களில் இடம்பெருதது ஒருகுறையல்ல. (3) (பக் கம் 69) "வேதங்களை மறைத்த கதையில் நாம் பிராம்மணர்கள் சிறைப்படுத்தப்பட்டதையே ஊகிக்க வேண்டும்" என்று இவர் எழுதியுள்ளது ஆதாரமற்றது. நகைப்புக்குரிய ஊகங்களைச் செய்வதில் இவர் வல்லவர் என்று காட்டுகிறது. (4) (பக்கம் 74) திருவெள்ளறை ஸ்ரீபுண்டரீகாக்ஷப்பெருமாள் இருந்த திருக்கோலத்தில் உள்ளதாக எழுதுவது தவறு. அங்கு பெரு மாள் நின்ற திருக்கோலத்தில் தான் ஸேவை சாதிக்கிருர். (5) (பக்கம் 86—87) பெரியாழ்வார் பாண்டியன் சபையில் பரதத்துவ நிர்ணயம் செய்ததை நாதமுனிகள் பேசும் போது "அந்த சபைக்கு ஜைனர்கள், (இலங்கைப்) பவுத்தர்கள், மலை நாட்டிலிருந்து யூதர்கள், சிரியன் கிறித்தவர்கள், தென் பாண்டியிலிருந்து சிலமுகமதியர்கள், சைவர்கள், ஸ்மார்த்த பிராமண அத்வைதிகள் —எல்லோரும் அங்கிருந்தனர். வைண வர்களுக்கு நடுவே விஷ்ணுசித்தரும் வீற்றிருந்தார்" என்று இவர் வெளிநாட்டவரைச் சேர்த்திருப்பதற்கு எந்த ஆதாரமும் கிடையாது. எனவே ஏற்கத் தக்கதல்ல. (6) (பக்கம் 119) 'ப்ரபத்தி என்ற கடைசி வழிக்கு முன்னதாக பக்தியும் இயன்றமட்டில் முயலத்தக்கதே" என்று திருக்கண்ணமங்கை யாண்டான் ஸ்ரீவில்லிபுத்தூரில் உபந்யாஸம் செய்ததாக இவர் எழுதுகிருர். தன் நன்மைக்கான தன்முயற்சிகள் அனைத் தையும் கைவிட்டவராக ஸ்ரீவசனபூஷணத்தில் கொண்டாடப் பட்டவரான திருக்கண்ணமங்கையாண்டானைப்பற்றி இவ் வாறு எழுதியிருப்பது இவரது ஆராய்ச்சியின் தரக்குறை வைக் காட்டுகிறது. (7) (பக்கம் 134) மஹாலக்ஷ்மியை "புருஷ

http://acharya.org

கார்யை'' என்றும், (பக்கம் 174) முதலான பல பக்கங்களில் 'அவதாரம்' என்பதை 'அவதாரிகை' என்றும், (பக்கம் 175)-இல் 'அபிநவ' என்பதை 'அபிநய' என்றும் இவர் எழுதுவது இவருக்கு வடமொழி யறிவு அடியோடு இல்லை என்பதைக் காட்டுகிறது. (8) (பக்கம் 175) ''பூதத்தார், திருமழிசைப்பிரான் தொண்டரடிப் பொடிகள், திருமங்கை மன்னர் மற்றும் குலசேகரப்பெருமாள்'' ஆகிய ஐவரும் ரஜோ குணத்தவராகக் காணப் படுகின்றனர். இவர்கள் பக்தியும் ஒருவகையினது அல்ல'' என்று இவர் எழுதியிருப்பது ரஜோகுணத்தின் தன்மையையும் பக்தியின் லக்ஷணத்தைப் பற்றியும் இவர் அறியாமையைக் காட்டுகிறது. (9) (பக்கம் 200) நாதமுனிகளுடைய சரம தசையைக் குறிப்பிடும்போது, ''வழிநடந்த களைப்பாலும், முடிவிற்கண்ட ஏமாற்றத்தாலும் மயங்கிப்போய் நாதமுனி மண்மேல் தடாலென விழுந்தார். வயோதிகரானபடியால் தலையில் பலமாக அடிபட்டுவிட்டது, அவர் 'கோமா' (COMA)என்ற பெருமயக்கத்தில் வீழ்ந்தார்'' என்றும், (பக்கம் 201) ''ஆளவந்தாரை சிம்மாசன அமிசராகப் பெரியதிருமுடி அடைவே குறித்துள்ளது. நாதமுனியை 'கஜாம்ஸர்' என்பதைக் காட்டிலும், யானையைப்போலப் பருத்த உடம்பு உடையவராக இருந்தார் எனக்கொள்வதே பொருத்தம். நாதமுனிகள் சிலைகள் நாடெங்கிலும் இப்படியே உள்ளன'' என்றும் எழுதிப் பரம யோகியாய், பரமாசார்யரான நாதமுனிகளிடம் அபசாரப் படுகிறார் இந்நூலாசிரியர். 'சிம்மாசன' என்பது அச்சுப் பிழை. ஆளவந்தார் 'சிம்மானன' அம்சர் என்பதே சரி. நாதமுனிகள் 'கஜாம்சர்' அல்ல; 'கஜாநந' அம்சர். பரம பதத்தில் விஷ்வக்ஸேநருடைய தளபதிகளில் ஒருவர் சிங்க முகம் பெற்றிருப்பதால 'ஸிம்ஹாநநர்' என்றும், மற்றொருவர் யானைமுகம் பெற்றிருப்பதால் 'கஜாநநர்' என்றும் பாஞ்சராதர சாஸ்திரங்களில் குறிக்கப்பட்டனர். இந்த 'கஜாநந'ரே விஷ்ணுகோவில்களில் காணப்படுகிறார். (இவரை ஏழாம் நூற்றாண்டிலிருந்து சைவம் தத்தெடுத்துக்கொண்டு சிவனின் பிள்ளை என்று புராணமும் எழுதிவைத்தது) பெரியதிருமுடியடைவில் ஆளவந்தார் 'ஸிம்ஹாநந'ரின் அம்சமாகவும் நாதமுனிகள் 'கஜாநந'ரின் அம்சமாகவும் குறிப்பிடப்படுகின்றனர். இப்படிப் பலபல ஆதாரமற்ற கற்பனைகள் இவருடைய நூலில் காணப்படுகின்றன. இனி இவர் எழுதும் நூலிலாவது தமக்கு நிலமல்லாத இத்தகைய விஷயங்களில் கைவைக்காமல், கால ஆராய்ச்சியோடு நிறுத்திக்கொள்ளுவார் என்று நம்புகிறோம்.

http://acharya.org

T. S. கிருஷ்ணஸ்வாமி, 5, மேயர் சம்பந்தம் தெரு-சென்னை-24.

16 ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவில் நீண்டநாளாகவெளிவரும் மஹா புராணத்தொடரில் வேதவ்யாஸர் பாரதம் சொல்லுவது போலவும் கணேசர் எழுதுவது போலவும் படம் தாத்ரு ஹூ வைகாசி மீ இதழில் வெளியிடப்பட்டிருந்தது. ஸுதர்சனர் பதிலில்—கணேசர் பாரதத்தை எழுதுவதாக உள்ள கதை ப்ரக்ஷிப்தம் என்று முன்னமே தேவரீர் எழுதியுள்ளதை எடுத்துக் காட்டி அவர்களுக்குக் கடிதங்கள் எழுதினேன். அவர்கள் வெளியிட மறுத்துவிட்டார்கள். தங்களுடைய ஸுதர்சனர் பதில்களின் ஸாரமாக ந்ருஸிம்ஹப்ரியாவிற்கு அனுப்பிய கட்டுரையின் நகலை இத்துடன் அனுப்பியிருக்கிறேன். அதை ஸுதர்சனத்தில் வெளியிட்டு, ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா இதை வெளியிட மறுப்பதற்கான காரணத்தையும் தெரிவிக்கவும்.

*திருவாலி க்ருஷ்ணஸ்வாமி அவர்கள் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவுக்கு எழுதிய 19-8-96 தேதியிட்ட கடிதம்:—*

"தங்களுடைய 29 7-96 ஸ்ரீமுகத்தைப் பார்த்தேன். இது விஷயமாக, திருச்சி புத்தூர் "ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்" ஆசிரியர் தமது ஸுதர்சனர் பதில்களில் 'விநாயகர் பாரதம் எழுதினார்' என்பது இடைச்செருகல் என்பதைத் தக்க ஆதாரத்துடன் நிருபித்திருப்பதை இக்கடிதத்தின் மூலம் எடுத்துக் காட்டுகிறேன். அவர் தமது ஸுதர்சனர் பதில் ஏழாவது சதகம் 30 வது கேள்வியின் பதிலில் இவ்விஷயத்தை நிருபித்துள்ளார்.

அவர் நிருபித்துள்ளவற்றின் சுருக்கம் பின்வருமாறு:- ஸ்ரீராமாயணம், மஹாபாரதம் என்னும் இரு இதிஹாஸங்களிலும் சிவகுமாரனை ஸ்கந்தனைப்பற்றிப் பலவிடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. புராணங்களில் அனைவராலும் ஒப்புக்கொள்ளப் பட்ட ஸாத்விகபுராணமான ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலும் அப்படியே. காளிதாஸர் ஸ்கந்தனைப்பற்றி எழுதியுள்ள குமாரஸம்பவத்தில் சிவனுடைய மூத்த பிள்ளையாகச் சொல்லப்படும் விநாயகரைப் பற்றி எக்குறிப்பும் இல்லை ஏழாவது நூற்றாண்டுக்கு முற்பட்ட எந்தவடமொழிக்காவியத்திலும் விநாயகர்பற்றி எக்குறிப்புமில்லை.

தமிழ் இலக்கியங்களுக்கு வந்தால், சங்க இலக்கியங்கள்சிலப்பதிகாரம் முதலான பழைய காப்பியங்கள், ஆழ்வார்களுடைய அருளிச்செயல்கள் ஆகியவற்றில் முருகனைப்பற்றி ஏராளமான


http://acharya.org

குறிப்புகள் உண்டு ஆனால் இவற்றில் விநாயகரைப்பற்றி ஒரு சிறு துணுக்குக்கூட கிடையாது,

இவற்றிலிருந்து விநாயகரைப்பற்றிப் பேசும் சம்பந்தர் முதலான கி பி ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த நாயன் மார்கள் காலத்திலிருந்தே விநாயகர் சிவகுமாரராகக் கற்பிக்கப் பட்டார் என்று விளங்குகிறது பாஞ்சராத்ரம் முதலான ஆகமங் களில் விஷ்வக்ஸேனரின் ஸேனாவீரர்களில் ஒருவராக கஜாநநர் என்னும் யானை முகத்தையுடைய நித்ய ஸூரி குறிப்பிடப்படுகிறார். பல விஷ்ணுகோயில்களில் இவர் காணப்படுகிறார்.

நாயன்மார்கள் காலத்தில் சைவர்கள் அரசாங்கபலத் தாலே பௌத்தர்களைத் தமிழ்நாட்டைவிட்டு விரட்டி விட்டார் களென்றும் அரசமரத்தடிகளில் அவர்கள் வைத்திருந்த புத்த விக்ரகங்களை அப்புறப்படுத்திவிட்டு, சிவகுமாரராகக் கற்பிக்கப் பட்ட யானைமுக உருவத்தை வைத்து விட்டார்களென்றும் பல ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்,

மஹாபாரதத்தில் ஏராளமான ப்ரக்ஷேப உத்க்ஷேபங்கள் (இடைச் செருகல்கள் — எறிதல்கள்) பிற்காலத்தில் ஏற்பட்டு விட்டன என்பது மஹாபாரதப் பதிப்புகளில் உள்ள ஏராள மான வேறுபாடுகளிலிருந்தே விளங்கும்.

திருக்குடந்தையில் வியாக்கியானத்தோடு வெளியிடப்பெற்ற மஹாபாரத க்ரந்தலிபிப் பதிப்பின் வியாக்கியானத்தில் 'விநாயகர் மஹாபாரதம் எழுதினார்' என்று கூறும் ஶ்லோகங்கள் இடைச் செருகல் என்று குறிக்கப்பட்டு, "இருந்தபோதிலும் வியாக் கியானம் செய்கிறோம்" என்று எழுதப்பட்டுள்ளது,

2-8-96 இந்தியன் எக்ஸ்பிரஸ் பேப்பரில் பாபுதீக்ஷிதரின் மஹாபாரத உபந்யாஸச் சுருக்கத்தில், மஹாபாரதத்தில் நிறைய இடைச் செருகல்கள் உள்ளதாக எழுதப்பட்டுள்ளது.

நூற்றுக்கணக்கான சுவடிகளை ஆராய்ந்து இவ்விடைச் செரு கல்கள்—எறிதல்களைக் களைந்து, மஹாபாரதத்துக்கு ஒரு சுத்த மான பதிப்பை வெளியிடும் முயற்சி 1933 ம் வருஷத்தில் "பூனா பண்டார்கார் ஓரியண்டல் ரிஸர்ச் இன்ஸ்டிடியூட்" என்னும் ஸ்தா பனத்தால் தொடங்கப்பெற்றது, அருமையான அப்பதிப்பில் ஆதிபர்வத்தின் முதல் அத்தியாயத்தில் பிள்ளையாரைப் பற்றிய பேச்சே இல்லை. அநுக்ரமணிகையை (அட்டவணையை) சொல்ல வந்த அத்தியாயத்தின் நடுவில் இந்தப் பிள்ளையார் கதையை சிலர் நுழைத்து விட்டார்கள் என்பது முன்-பின் ஶ்லோகங்களைப் பார்த்தாலே விளங்கும். மேலும் லக்ஷம் ஶ்லோகங்களுக்கும் மேற்

பட்ட மஹாபாரதத்தில் வேறு எங்குமே இந்த விநாயகரைப் பற்றிய பேச்சே இல்லை. முடிவிலும் இப்படிக் கஷ்டப்பட்டு பாரதம் முழுதும் எழுதிய விநாயகரை வியாஸர் கௌரவித்ததாகவோ ஸம்பாவனை செய்ததாகவோ இல்லை. இவற்றிலிருந்து விநாயகர் மஹாபாரதம் எழுதினார் என்று கூறும் ஶ்லோகங்கள் பிற்காலத்தில் புகுத்தப்பட்டவையே என்று தெளிவாக விளங்குகிறது.

ஆகவே இடைச்செருகல் என்று பலராலும் கொள்ளப்பட்டுள்ள இதை ஶ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா போன்ற வைணவப் பத்திரிகை உறுதியாக நம்பி வெளியிட்டால் ஶ்ரீவைஷ்ணவர்கள் இதைப்படிக்கும்போது அவர்கள் உள்ளம் மாசுபடலாம் என்பது என் எண்ணம்.

அடுத்துவரும் ப்ரியாவில் வாசகர்கள் உண்மையை உணரலாம்படி இக்கடிதத்தைப் பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு: இந்தக் கடிதம் யார்மனதையும் புண்படுத்தும் நோக்கத்துடன் எழுதப்படவில்லை. பல அறிஞர்களால் சொல்லப்பட்ட உண்மை நிலையை விளக்குவதற்காக எழுதப்பட்டது.

*ஸுதர்சனம் ஆசிரியரின் பதில்:— மஹாபாரதத்தில் பல இடைச் செருகல்கள் உள்ளன என்பதை 45ம் பட்டம் ஶ்ரீமதழகியசிங்கரே (சில வருடங்களுக்குமுன் ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியாவில் வெளிவந்த) தமது அருள்மொழியில் குறிப்பிட்டிருக்கிறார். அப்படியிருக்கும் போது இந்தப் பிள்ளையார் கதையைப் பற்றிய உண்மையை ப்ரியா வெளியிடத் தயங்குவதற்குக் காரணம் தமது வாசகர்களில் பிள்ளையார் பக்தர்களாக இருப்பவர்கள் ப்ரியாவை வாங்குவதை நிறுத்திவிடுவார்களோ என்னும் அச்சமே.*

P நரஸிம்மன், காஞ்சீபுரம்-3, மற்றும் பலர்.

17. துக்ளக் 18-9-96 இதழில் 'மகாபாரதம் பேசுகிறது' என்ற தொடரில் 'முக்கண்ணனின் மகிமை' என்ற தலைப்பில் வியாஸர் சிவனுச்குப் பரத்வம் சொல்லுவதாக எழுதியிருக்கிறார். துக்ளக் 25-9-96, 2-10-96 இதழ்களில் விநாயகர் பற்றிய முதல்வர் திரு கருணாநிதியின் கருத்தை மறுக்கும் கட்டுரைகளில் (மறைந்த) காமகோடிப் பெரிய பீடாதிபதியின் பலகூற்றுக்களையும், பல தலபுராணக் கதைகளையும் காட்டி விநாயகர் தமிழகத்தில் மிகப்பழைமையான தெய்வம் என்று கூறுகிறார். இதை விமர்சிக்கவும்.

சென்ற சேள்வியின் பதிலிலேயே கி பி ஏழாம் நூற்றிண்டிற்கு முற்பட்ட எந்த வடமொழி, தமிழ் மொழி இலக்

http://acharya.org

கியங்களிலும் விநாயகரைப் பற்றிய பேச்சே கிடையாது என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஒரு சில நூற்றுண்டுகளுக்குள் கற்பிக்கப்பட்ட தலபுராணங்கள் காமகோடி பீடாதிபதி எடுத்துக்காட்டியதால் மட்டும் பிரமாணமாகிவிடாது. நீண்டநாட்களாக நாம் எடுத்துக்காட்டிவரும் இவ் விஷயத்திற்கு இதுவரை எவராலும் பதிலுரைக்க இயலவில்லை. ஔவையார் எழுதிய விநாயகர் அகவல் நூல் மூலம் விநாயகர் மிகப்பழமையானவர் என்று தேறுவதாக 'சோ' எழுதுகிருர். சங்ககால ஔவையார் வேறு. ஆத்திசூடி முதலான நீதி நூல்களை எழுதிய ஔவையார் கி பி ஏழாம் நூற்றுண்டுக்குப் பிற்பட்டவர். விநாயகர் அகவல் போன்ற நூல்களை எழுதிய ஔவையார் அவருக்கும் பிற்பட்டவர் என்பது அவரவர் எழுதிய நூல்களின் நடையைப் பார்த்தாலே புலப்படும். இதை மொழி ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டுள்ளனர். விநாயகர் காக்கை உருவிலிருந்து கமண்டலத்தை கவிழ்த்த கதை எந்தப் பழைய நூலிலுமில்லை. ஆகையால் பெரியகாமகோடியின் கூற்றுகளைத் தவிர வேறு எந்தப் பிரமாணத்தையும் அறியாத சோவுக்கு இவ்வுண்மைகள் விளங்காததில் வியப்பில்லை.

மகாபாரதத்தில் பல்லாயிரக்கணக்கான ஶ்லோகங்களுக்கு முரணாக உபமந்யு உபாக்யானம் போன்றவற்றில் சிவனுக்கும் மற்ற தெய்வங்களுக்கும் பரத்வம் கூறுவது இடைச்செருகல் என்பதை ஸுதர்சனர் பதில்கள் 3-55, 5-38, 7-24, 7-30 முதலான பலபதில்களில் காட்டியிருக்கிறோம். சோவும் 18-9-96 துக்ளக்கில் இவை சிலமகாபாரதத் தமிழ்மொழி பெயர்ப்புகளில் ஓரளவிற்குத்தான் இடம் பெற்றிருக்கின்றன என்று எழுதுவதிலிருந்தும் இது விளங்குகிறது.

S, முரளி, அந்தணல்லூர்.

18. விநாயகர் ஊர்வலம் நகரந்தோறும் ஆயிரம் பதிணுயிரம் என்று வளர்ந்து வருகிறதே. இதன் முடிவு என்ன?

இப்படியே போனால் நாட்டில் வன்முறைகள் வளர்ந்து ரத்த ஆறுகள் ஓட நேரிடும். வைதிக மதம் 'இந்து', மதமாகி, இப்போது 'பிள்ளையார் மதம்' ஆகிவிட்டது!

http://acharya.org

அம்மாள் ஸ்ரீ திருவேங்கடாசாரியர், திருவெள்ளறை (கீழத்திரு மாளிகை) ஸ்ரீரங்கம்.

19. சமீபத்தில் சென்னையில் சிறப்பாக நடைபெற்ற உத்தமூர்ஸ்வாமி நூற்றாண்டு விழாவில் தாங்கள் கலந்து கொள்ளப்போவதாக ஸுதர்சனத்தின் வாயிலாக அறிந்தேன். அதில் கலந்து கொண்டபோது நடந்த சிறப்புக்களைத் தெரிவிக்கவேண்டுகிறேன்.

உத்தமூர்ஸ்வாமி நூற்றாண்டு விழாவில் நடந்த ஸ்ரீபாஷ்ய வாக்யார்த்த ஸதஸ்ஸில கலந்து கொள்ளும்படி அடியேனை அழைத்திருந்தார்கள். ஸ்ரீப்₄ாஷ்யத்திலுள்ள பராயத்தாதி₄ கரணத்திற்குப் பொருள் கொள்ளுவதில் ச்ருதப்ரகாஶிகாசாரியரோடு ஸ்ரீவேதாந்த தேசிகருக்கு விளைந்த கருத்து வேற்றுமையே நம்முடைய ஸ்ரீவைஷ்ணவ மதம் கொள்கையளவில் இரு ஸம்ப்ரதாயமாகப் பிரிவதற்கு அடிப்படையாக அமைந்தது என்னும் விஷயத்தை ஸ்ரீப₄ாஷ்யத்தில் தேர்ந்த வித்வான்கள் பலரும் உணராமலிருக்கிறார்கள். அதை அனைவர்க்கும் உணர்த்துவதற்காக அவ்விஷயத்தை எட்டு பக்கம் கொண்ட சிறு கட்டுரையாக அடியேன் அச்சிட்டு அங்கு எழுந்தருளியிருந்த வித்வான்கள் அனைவருக்கும் வழங்கினேன். ஸதஸ்ஸில் அடியேன் பேசுவதற்குமுன் ஒரு வயோவ்ருத்₃த₄ரான ஸ்வாமி அடியேன் விசிஷ்டாத்வைத ஸம்ரக்ஷணத்தில் கூறியிருந்த கருத்துக்களை மறுத்துச் சில வார்த்தைகள் பேசினார். அவர் பேசியதில் உள்ள தவறான விஷயங்களையும் உண்மை நிலை என்னவென்பதையும் விளக்கி ஸுதர்சனம் தாத்ரு மாசி [591] [25—2—97] இதழில் 'உத்தமூர் ஸ்வாமியின் நூற்றாண்டுவிழா' என்னும் தலையங்கத்தில் வெளியிட்டுள்ளேன். அத்தலையங்கமும், பராயத்தாதி₄ கரண விஷயமான கட்டுரையும் ஸுதர்சனர் பதில் 13 வது சதகத்தில் முதல் அநுபந்தமாக இணைக்கப்பட்டுள்ளன.

மணவாள ராஜஹம்ஸம், வெங்கட்ராமன், பவானி மற்றும் பலர்.

20. 22-1-97 'துக்ளக்' இதழில் ''மஹாபாரதம் பேசுகிறது'' பகுதியில் ''சிவனைக் காட்டிலும் மேலான தெய்வம் எதுவுமில்லை'' என்றும், ''கண்ணன்தான் தன்னுடைய சிறந்த பக்தன் என சிவபிரானே கூறுகிறார்'' என்றும், இது ''வியாச பு₄ாணத்திலேயே வருகிறது'' என்றும் துக்ளக் ஆசிரியர் ''சோ'' எழுதியுள்ளார். இது உண்மையா?

http://acharya.org

மஹாபாரதத்தைப்பற்றிய இத்தகைய கேள்விகளுக்கு ஏற்கனவே ஸுதர்சனர் பதில்கள் 3—55, 5—38, 7-24, 7-30 13-17 ஆகியவற்றில் விரிவாக விளக்கங்கள் கூறியிருக்கிறோம். இங்கும் சுருக்கமாகக் கூறுகிறோம்.

மஹாபாரதம் நம்நாட்டில் வடக்கில் ஒரு விதமாகவும் தெற்கில் ஒருவிதமாகவும் மற்ற பிராந்தியங்களில் ஒரு விதமாகவும் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இவற்றினிடையே ஏராளமான பாடபேதங்கள். அந்தந்தப் பிராந்தியத்திலுள்ளவர்கள் தங்கள் கைச்சரக்குகளை ஆங்காங்கே சேர்த்திருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான சுவடிகளை ஆராய்ந்து இவ்விடைச் செருகல்கள்—எறிதல்களைக் களைந்து மஹாபாரதத்துக்கு ஒரு சுத்தமான பதிப்பு 1933 ம் வருஷத்தில் "பூனா பண்டர்கார் ஓரியண்டல் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட்" என்னும ஸ்தாபனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. அந்தப் பதிப்பை வைத்துக் கொண்டு மஹாபாரததாத்பர்ய நிர்ணயத்தைச் செய்தால் தான் உண்மை விளங்கும். அதை விஷ்ணுசித்த விஜயத்தின் அடுத்தபாகத்தில் நாம் செய்வதாய் இருக்கிறோம். மற்றும் சில விஷயங்களையும் நாம் இங்கு கருத்தில் கொள்ள வேண்டும். ரிஷிகளுடைய இதிஹாஸ புராணங்களில் பல தெய்வங்களைப் பற்றிய ஸ்தோத்ரங்கள் வருகின்றன. அது ஒவ்வொன்றிலும் அந்த ஸ்தோத்ரங்களுக்கு விஷயமான அந்த தெய்வந்தான் பரம்பொருள் என்பது போன்ற உயர்வு நவிற்சிகள் காணப்படுகின்றன. ஆனால் அதே நூல்களில் அந்த தெய்வங்கள் படைக்கப்பட்டவர்கள், பிரளய காலங்களில் ஸம்ஹரிக்கப்படுகின்றவர்கள், பலதாழ்வுகளை உடையவர்கள் என்றும் சொல்லப்படுகிறது. சிவனைப் பற்றியும் பிரம்மாவால் படைக்கப்பட்டவன், பல தாழ்வுகளை உடையவன் என்று மஹாபாரதத்தில் பல இடங்களில் வருகிறது. நாராயணன் ஒருவனைப்பற்றியே மஹாபாரதத்தில் ஆயிரக்கணக்கான இடங்களில் அவனே பரம்பொருள் என்று சொல்லப்படுகிறது. படைக்கப்பட்டவன் முதலான தாழ்வுகள் சொல்லப்படவில்லை. ஆனால் அந்த நாராயணனே கண்ணனாக அவதரித்தபோது கைலாசத்திற்கு யாத்திரை சென்று சிவனிடம் பிள்ளைவரம் கேட்டான் என்றும் சொல்

http://acharya.org

லப்பட்டிருக்கிறது. இது ஏற்கனவே நாராயணன் "அவதார காலங்களில் நான் உன்னிடம் வந்து இவ்வுலகப் பலன்களை வரமாகக் கேட்கிறேன்" என்று சிவனுக்குக் கொடுத்த வரத்திருலே ஏற்பட்டது என்று ஆசார்யர்கள் நிர்வகிக்கிருர்கள். 'சோ' வே 22—1—97 துக்ளக்கில் "'மஹாவிஷ்ணு கிருஷ்ணராக வந்திருக்கிருர்' என்ருல் அவர் மனிதராக வந்திருக்கிருர் என்றுதான் ஆகிறது. அப்படி மனிதராக வந்துள்ளதால், அவர் ஈஸ்வரஞகிய பரமசிவனை ஆராதிக்கிருர் என்று எடுத்துக்கொள்ளலாம். மனிதராகிய கிருஷ்ணர், தெய்வமாகிய ஈஸ்வரனை வணங்குவதால் மஹாவிஷ்ணுவே பரமசிவனைவிட ஒருபடி கீழானவர் என்று அர்த்தம் வந்துவிடாது'' என்று இவ் விஷயத்தை ஒப்புக்கொண்டுள்ளார். இவையனைத்தையும் பார்க்கும்போது சிவன் முதலான மற்ற தெய்வங்களுக்குப் பரத்வம் கூறுவதுபோல் வரும் இடங்கள் அந்தர்யாமியான நாராயணனைக் கருதிச் சொல்லப்பட்டதாகவோ, உயர்வு நவிற்சியாகக் கூறப்பட்டதாகவோ, இடைச்செருகலாக இருக்க வேண்டும் என்றே எளிதில் நிர்ணயிக்கலாம். விஷ்ணு சித்த விஜயத்தில் மஹாபாரத நிர்ணயம் பகுதி வெளிவரும் வரை அன்பர்கள் பொறுத்திருக்க வேண்டும்.

அடுத்தபடியாக "ஏகம் ஸத்; விப்ரா ப₃ஹுதா₄ வத₃ந்தி" [பரம்பொருளாகிய 'ஸத்' ஒன்றே; அறிவாளிகள் அதைப்பல பெயரிட்டு அழைக்கின்றனர்.] என்னும் ரிக்₃வேத₃வாக்யமொன்றை எடுத்துக்கொண்டு சோ பல குழப்பவாதங்களைச்செய்கிருர். அத்வைதிகள் பலரும் இந்த வாக்யத்தை வைத்துக்கொண்டு "எல்லா தெய்வமும் ஒன்றுதான்; எல்லா ஆத்மாக்களும் ஒன்றுதான்" என்னும் தங்களுடைய குழப்பவாதத்திற்கு இதை ஆதாரமாகக் காட்டுகிருர்கள். இப்பொருள் இந்த வாக்கியத்திற்கு அடியோடு பொருந்தாது. 'விப்ரா:' என்னும் பதம் வேத₃ங்களை ஸாக்ஷாத்கரித்த மஹரிஷிகளையும் அவர்களைப் போன்ற மேதாவிகளையுமே குறிக்கும். "தத்₃ விஷ்ணோ: பரமம் பத₃ம் ஸதா₃ பஶ்யந்தி ஸூரய: | தத்₃விப்ராஸோ விபந்யவ: ஜாக்₃ருவாம்ஸ: ஸமிந்த₄தே||" [விஷ்ணுவின் அந்தப் பரமபதத்தை நித்ய ஸூரிகள் எப்போதும் காண்கிருர்கள் அப்பரமபதத்தில் மேதாவிகளாய், துதிப்பதையே இயல்

http://acharya.org

வாகக் கொண்டவர்களாய் (எம்பெருமானிடம் பொங்கும் பரிவாலே) எப்போதும் விழிப்புடன் இருப்பவர்களான நித்ய முக்தர்கள் விளங்குகிறார்கள்.] என்று மற்றொரு ரிக்வேத வாக்யத்தில் எல்லாமறிந்தவர்களான நித்ய முக்தர்களைக் குறித்து 'விப்ர' ஶப்₃த₃ம் வழங்கப்பட்டுள்ளதைக் காணலாம். 'விப்ர' ஶப்₃த₃த்தின் இந்தப் பொருட்பெருமையை நோக்கினால்— "ஏகம் ஸத்" என்று தொடங்கும் வாக்யத்திற்கு, என்றும் உள்ளதாகையாலே 'ஸத்' எனப்படும் பரம் பொருள் ஒன்றே; அப்பரம்பொருளை வேத₃ங்களைக் கண்ட (ஸாக்ஷாத்கரித்த) ரிஷிகள் அப்பரம்பொருளின் ஒவ்வொரு பெருமையைக் கருதி "ஸத்" (என்றும் உள்ளது). 'ஆகாஶம்' (எங்கும் பிரகாசிப்பது), "அக்₃நி" (மனிதனை உயர அழைத்துச் செல்வது), "வாயு" (எங்கும் பரந்திருப்பது), "ப்₃ரஹ்ம" (தானும் மிகப் பெரிதாய், பிறரையும் பெரிதாக்குவது),"இந்த்₃ரன்" (பரமைஶ்வர்யத்தை உடையவன்) "சிவன்" (மங்களமானவன்), "ஹிரண்யகர்ப்பன்" (சிறந்தவற்றைத் தன்னுள் அடக்கிக் கொண்டவன்) "நாராயணன்" (அனைத்துக்கும் ஆதாரமாய் அனைத்தையும் வியாபித்திருப்பவனாய், எல்லாவுயிர்களுக்கும் ப்ராப்யமாய் ப்ராபகமாய் எல்லா உறவுமாய் இருப்பவன்)] என்று எண்ணிறந்த திருநாமங்களாலே அப்பரம்பொருளைக் குறிக்கிறார்கள், என்பதே உண்மையான பொருள் என்று விளங்கும். 'விப்ர' ஶப்₃த₃த்திற்கு உள்ள உண்மையான பொருளை உணராமல் 'சோ'வைப் போன்ற குழப்பவாதிகள் "விப்ரர்கள் என்று மனப்பக்குவம் குறைந்தவர்களைச் சொல்லுகிறது" என்று பொருள் கொள்வது வேதத்தில் அப்பதத்திற்குக்கொடுக்கப்பட்டிருக்கும்பெருமையைஉணராமையால் ஆகும். "உலகிலுள்ள பெருமையைக் காட்டும் எல்லாப் பெயர்களும் பரம்பொருளின் பெயர்களே" என்றும், "அப்பரம்பொருள் தன்னால் படைக்கப்பட்ட பல பல பொருள்களுக்கு அப்பெருமைகளில் ஒரு சிறிது இருப்பதைக்கருதி, படைக்கும்போதே அவ்வப்பொருள்களுக்குத் தனனுடைய பெயர்களில் ஒவ்வொன்றைக் கொடுத்தது" என்றும் "வேறு எவருக்கும் பொருந்தாத நாராயண நாமமே அப்பரம்பொருளின் தனிப் பெயர்"என்றும்கூறும் விசிஷ்டாத்வைதிகளின் கொள்கைக்கே "ஏகம் ஸத்" என்று தொடங்கும் ரிக்வேத வாக்கியம் மிகப் பொருந்தியது என்பது நடுநிலையாளருக்கு நன்கு விளங்கும்.

http://acharya.org

K A. தேவராஜன், சென்னை, R. ஸ்ரீநிவாசன், தூத்துக்குடி. R K. வரதராஜன். ஸ்ரீரங்கம், R பட்சிராஜன், திருநெல்வேலி, பாலகிருஷ்ண ராமானுஜதாசர் முதலானோர், கரூர், K. ரகுநாதன், நாங்குனேரி மற்றும் பலர்

**21.** தூர்தர்சனில் (T. V.) ஒவ்வொரு திங்கட்கிழமையும் இரவு மணி 9-30 to 10-30 'ஓம் நம:சிவாய' என்னும் தொடர் இந்தியா முழுவதும் இந்தியில் ஒளி பரப்பப்படுகிறது. சென்னைத் தொலைக்காட்சி நிலையம் இதைத் தமிழாக்கத் தொடராக ஒளி பரப்புகிறது. இதில் சிவனே பரம்பொருள் என்றும், அவரே விஷ்ணு முதலானவர்களைப் படைத்தார் என்றும் சிவனுடைய அடியை விஷ்ணுவும், முடியை பிரம்மாவும் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றும், பல விஷ்ணு வைஷ்ணவ துவேஷபிரசாரங்கள் காட்டப்படுகின்றன. மதத்வேஷத்தைப் பரப்புகிறது என்னும் அடிப்படையில் இதைத் தடைசெய்ய முடியுமா?

தொலைக்காட்சியில் ராமாயணத்தையும், பாரதத்தையும், கண்ணன் கதையையும் ஹிந்தியிலும் தமிழிலும் பல வருடங்களாகக் காட்டிவருகிறார்கள். அதில் உள்ள கதைப்பகுதிகளைக்காட்டுவதோடு சைவர்களையும் ஸ்மார்த்தர்களையும் திருப்தி செய்வதற்காக ஆங்காங்கே சமரசவாதமும் செய்கிறார்கள். விஷ்ணுபக்தர் என்று பிரசித்திபெற்ற வேதவியாசர் முதலான ரிஷிகளையும் விபூதிப்பட்டையோடு காட்டுகிறார்கள். இப்போது தாமஸமான சைவபுராணங்களை ஆதாரமாகக்கொண்டு இந்த ஓம் நம:சிவாய' என்னும்தொடர் ஒளிபரப்பப்படுகிறது. இந்தப் புராணங்களிலுள்ள கதைகள் நம் நாட்டிலுள்ள பழைமையான வேதங்களிலோ, உபநிஷத்துக்களிலோ, ராமாயணம் மஹாபாரதம் முதலான இதிஹாஸங்களிலோ, பழைமையான காளிதாசன் முதலானவர்கள் இயற்றிய ஸம்ஸ்கிருதக் காவியங்களிலோ, இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட தமிழ்ச்சங்க இலக்கியங்களிலோ காணப்படவில்லை. பிற்காலத்தில் சைவர்களால் புனையப்பட்டவை என்பது தெளிவு. ...ார் 1300 வருடங்களுக்குட்பட்ட நாயன்மார்கள் காலத்திலிருந்து இக்கதைகள் புனையப்பட்டுவிட்டன. திருமா

http://acharya.org

லுடைய அவதாரங்களைப்போலே சிவனுல எந்த அருஞ்செயலும் செய்யப்படவில்லையாகையால், திருமாலைத் தாழ்த்துவதன் மூலமே சிவனுக்குப் பெருமைசேர்க்க நினைத்து இப்புராணங்கள் கற்பிக்கப்பட்டன. ஆகையால் இவை கடுமையான விஷ்ணு வைஷ்ணவ துவேஷ விஷத்தைக் கக்குகின்றன. இவற்றுக்குப் பண்டைய நூல்கள் எதிலும் ஆதாரம் கிடையாது. இவை பிற்காலத்தில் புனையப்பட்டவையே. "இப்பொய்க்கதைகளுக்கு வேதம் முதலிய பழைய நூல்களில் ஆதாரம் இல்லாமையாலும், விஷ்ணு வைஷ்ணவதுவேஷவிஷத்தைப் பரப்புகையாலும், பலர் உணர்ச்சிகளைப்புண்படுத்துவதாலும் இந்த அபத்தத்தொடரை ஒளிபரப்புவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும்" என்று "OM NAMASIVAYA, P. B. NO. 18483 JUHU Beach P. O. MUMBAI" என்னும் தயாரிப்பாளர் விலாசத்துக்கும், டில்லி தொலைக்காட்சிக்கும் ஆங்கிலத்திலும், சென்னைத்தொலைக் காட்சிக்குத் தமிழிலும் ஏராளமான கண்டனக் கடிதங்களும், தந்திகளும் அனுப்பவேண்டும். கடிதங்களைக் கண்டு அவர்கள் நிறுத்திவிடமாட்டார்களாகையால், நீதிமன்றங்கள் மூலம் தடை உத்தரவுபெற முயலவேண்டியது அவசியம். ஆனால் அதற்குத் தனிமனிதர்கள் முயற்சி செய்வதைவிட நிதி ஆதாரம் மிகுதியாகக் கொண்ட ஓர் அமைப்பை ஏற்படுத்தி அதன் மூலம் முயற்சி செய்வதே நல்லது. இப்படிப் பட்ட விஷ்ணு வைஷ்ணவ துவேஷப்பிரசாரங்களை நிறுத்துவதற்கும், விஷ்ணு வைஷ்ணவஆலயங்கள்மீது ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கும் நிலையான ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தவேண்டும் என்று ஸுதர்சனம் ஸ்தாபகர் நூற்றாண்டு விழாவின் போது ஸுதர்சனத்தில் நாம் வேண்டுகோள் விடுத்தது அனைவரும் அறிந்ததே. ஆனால் பணம் படைத்த எவரும் அதில் அக்கறை கொள்ளவில்லை. உச்சநீதிமன்றம் வரையில் சென்று சட்டபூர்வமாகப்போராடவேண்டுமென்றால் அதற்குஏராளமான பணம் தேவை. ஆகையால் அத்தகைய அமைப்பும் அதற்குத்தேவையான நிதி ஆதாரமும் உருவாக்கப்பட்டாலொழிய இதைத் தடைசெய்ய இயலாது.

http://acharya.org

P V சௌந்தரராஜன், சென்னை-91.

**22.** தாத்ரு ஐப்பசி ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவில் ஸ்ரீமதழகிய சிங்கர் திருக்கடிகையாத்திரையை விவரிக்கும்போது, "முன் காலத்தில் இந்த க்ஷேத்ரம் அமைந்துள்ள இடம் முழுவதும் ஆற்காடு நவாப்புக்கு வசமாக இருந்ததாம். திருக்கோயில் அமைப்பதற்கு இடம் கிடைக்கவில்லையாம். அப்பொழுது ஆற்காடு நவாப் அவர்கள் நல்ல மனம் கொண்டு இந்த ஊரையே தந்து உதவினாராம்." என்று வெளியாகியிருந்ததை விமர்சிக்கக் கோருகிறேன்.

16—11—95 'குமுதம்' இதழில் 'ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதர் கோயில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இடம் எங்கள் மூதாதையர் கொடுத்ததுதான்' என்று ஆற்காடு இளவரசர் திரு முகமது அசப்அலி பேசியது வெளிவந்தது. இந்தக்கூற்று மிகவும் அபத்தமானது என்பதை நாமும், "திருவரங்கன் உலா" எழுதிய திரு. ஸ்ரீ வேணுகோபாலனும் விளக்கியது 14—12—95 குமுதத்திலேயே வெளிவந்தது. இது நம்முடைய ஸுதர்சனர் பதில் 12 வது சதகத்தில் முதல் அநுபந்தமாக இணைக்கப்பட்டது. ஸ்ரீரங்கம் கோயில் நிர்மாணிக்கப்பட்ட இடமே தங்களுடையது என்று பொய்யாக அறிவித்தவர்கள் திருக்கடிகையைப் பற்றியும் அத்தகைய பொய்யைக் கூறியுள்ளது வியப்பிற்குரியது அல்ல. நவாப்புகள் அரசாட்சியே தென்னிந்தியாவில் உற்பத்தியானது கி. பி. 1698ல் தான் என்பது வரலாற்று உண்மை. இப்படி இருக்கும்போது ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முற்பட்ட நம்முடைய கோயில்களை அமைப்பதற்கு இடத்தை சமீபத்தில் வந்த ஆற்காடு நவாப் கொடுத்தார் என்று எவரோ ஒருவர் சொன்னதை வைத்துக்கொண்டு ஆராயாமல் ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா வெளியிட்டது மிகவும் வருந்தத்தக்கது.

V N பிரபுராஜ் திருச்சி 8.

**23.** ஸுதர்சனர்பதில்(13) 20, 21 கேள்விகளில் 'துக்ளக்' இதழில் வெளிவரும் மகாபாரதத்தொடர் பற்றியும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் 'ஓம் நம:சிவாய' தொடர் பற்றியும் எழுதியுள்ளதைக்கண்டேன். 'சோ'வைப் போன்ற தலைக்கனம் பிடித்தவர்களுக்கு எத்தனை கண்டனக் கடிதம் எழுதினாலும் துருப்பிடித்த மண்டையில் ஏறாது. (அவரே

http://acharya.org

கூறுவதுபோல அவருக்கு மண்டைக்கு வெளியிலும் ஒன்று மில்லை. உள்ளேயும் ஒன்றுமில்லை.) எனவே 'துக்ளக்' படிப்பதை வைணவர்கள் தவிர்ப்பது நல்லது. 'ஓம் நம:சிவாய' டி.வி.தொடருக்கும் மக்களிடையே வரவேற்புஇல்லை. இதைப் பார்ப்பவர்கள் இத்தொடரைக் கேலிசெய்வதையும் அறிந்தேன். எனவே கோர்ட்டின் மூலம் தடைபெறுவது என்று முயற்சிசெய்து இதைப்பிரபலப்படுத்தும் முயற்சியில்வைணவர்கள் ஈடுபடவேண்டாம்.

தங்களுடைய கருத்தை நாம் முழுவதும் ஏற்கிறோம்.

அம்மாள் ஸ்ரீ திருவேங்கடாசாரியர், (திருவெள்ளறை கீழத்திரு மாளிகை) ஸ்ரீரங்கம்.

24. "சங்ககாலத் தமிழர் சமயம்" "தமிழகத்தில் தத்துவ சமய வளர்ச்சி" முதலான நூல்களில் "சங்ககாலத்தில் விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவமதமே வைதிகமதமாகக் கொள்ளப்பட்டு வந்தது. சிவனுக்கு முதன்மை கூறும் சிவமதம் அக்காலத்தில் தோன்றவேயில்லை. சங்ககாலத்திற்குப் பிறத களப்பிரர் காலத்தில் காபாலிகர் காளாமுகர் முதலியவர்களாலே சிவனுக்குப்பரத்வம் கூறும் சைவமதம் தமிழ் நாட்டில் புகுத்தப்பட்டது" என்று தாங்கள் நிலைநாட்டியிருக்கிறீர்கள். இதை ஆராய்ச்சியாளர்கள் எவரேனும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா?

சங்ககாலத்தில் திருமாலுக்கு முதன்மை கூறும் வைஷ்ணவ மதமே வைதிக மதமாகச் சான்றோர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்னும் ஆராய்ச்சியைப் பேராசிரியர் சங்கரராஜு நாயுடு, கல்விக்கடல் கோபாலய்யர் போன்ற ஆராய்ச்சியாளர்கள் ஏற்றுக்கொண்டிருப்பதை முன்னமேயே எடுத்துக் காட்டியுள்ளோம். சமீபத்தில் (4–3–97) காலகதியடைந்த சைவ வெறியரான கலியுகசிசுபாலரும் 'வைஷ்ணவபுராணத்தில் இறங்கினரே' யொழிய ஸ்ரீவைஷ்ணவமத விஜயம்' 'விஜயத்வஜம்' ஆகியவற்றிலுள்ள கேள்விகளுக்குப் பதிலளிக்கத் துணியவில்லை. களப்பிரர் காலத்திலேயே காபாலிகர் காளாமுகர் முதலானவர்களால் சிவனுக்கு முதன்மை கூறும் சைவமதம் தமிழ்நாட்டில் புகுத்தப்பட்டது என்னும் விஷயம்

http://acharya.org

1997 மார்ச்சில் திருச்சி பெரியார்கல்லூரியில் வரலாற்றுத் துறையின் சார்பாக "தமிழகத்தில் மக்கள் குடிப்பெயர்வு; சிக்கல்களும் சிறப்புகளும்" என்ற தலைப்பில் நடைபெற்ற வரலாற்றுக் கருத்தரங்கில் ஆராய்ச்சியாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் கருத்தரங்கு பற்றிய செய்தி தினமலர் 4-3-97 இதழில் 12ம் பக்கத்தில் வந்துள்ளது. அதில் " 'மத்திபகாலத் தமிழ்நாட்டில் குடிப்பெயர்வு செய்தவர்கள்' என்ற தலைப்பில் பேசிய பூண்டி புஷ்பம் கல்லூரிப் பேராசிரியர் சி. க. சிவப்பிரகாசம் காளாமுகர்கள் காபாலிகர்கள் பாசுபதர்கள் ஆகிய இனத்தவர் எப்படித் தமிழ்நாட்டில் குடிபெயர்ந்தார்கள் என்பதையும் இவர்கள் உருவாக்கிய மையம் மடங்கள் குறித்தும், அவைகள் தமிழக வரலாற்றில் ஏற்படுத்திய திருப்புமுனைகள் குறித்தும் விளக்கினுர். கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர் இல. கு. சிவநேசன் தொகுத்துப் பேசும்போது ......... தக்காணத்திலிருந்து காளாமுகர்கள் காபாலிகர்கள் மற்றும் பாசுபதத்தினர் தமிழ்நாட்டுக்கு வந்து தங்கள் மதநெறிகளையும் வழிபாட்டு முறைகளையும் பரப்பியவிதம், இவர்கள் உருவாக்கிய மடங்களின் ஆக்கப் பூர்வமான செயல்கள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார்" என்னும் செய்தி நம்முடைய ஆராய்ச்சியை அசைக்கமுடியாதபடி உறுதிப்படுத்துவதாய் இருக்கிறது.

S முரளி அந்தணல்லூர்.

25. தினமலர் நாளிதழில் "ஆன்மிகம் அறிவோமா?" என்னும் தலைப்பில் அவைஷ்ணவர்களைக் கொண்டே பெரும்பாலும் வைணவத்தைப் பற்றிய கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன. அவை பெரும்பாலும் அபத்தமாயிருக்கின்றன. 26—2—97 கட்டுரையில் T K நாராயணன் என்பவர் கீதையின் 12ம் அத்தியாயத்தின் தொடக்கத்தில் பகவான் பரமாத்ம ஜீவாத்ம உபாஸநங்களைப் பற்றிப் பேசியிருக்கும் சுலோகங்களை விளக்கத்தொடங்கி, அவை சகுண நிர்க்குண வழிபாட்டினை விளக்குவதாகக் குழப்பிவிட்டு

http://acharya.org

"லக்ஷ்மணன் செய்தது சகுணவழிபாடு, பரதன் செய்தது நிர்க்குண வழிபாடு' என்று குழப்பத்தின் உச்சத்தில் நின்று எழுதுகிறார். 10—3-97 கட்டுரையில் டாக்டர் பிரணதார்த்திஹரன் 'எண்ணம் வேறு உணர்வுகள் வேறு" என்று ஒருவருக்கும் புரியாதபடி குழப்பமாக ஏதோ கூறிவிட்டு "பேசிற்றே பேசின் அல்லால் உண்மை ஒன்றும் உணரலாகாது' என்கிறார் நம்மாழ்வார்-ஆன்மிகத்திற்கு மொழிவேண்டாம்; மவுனம் போதும்" என்று ஆழ்வாரையே ஆதாரம் காட்டுகிறார். இவற்றை விமர்சிக்க வேண்டுகிறேன்.

தினமலர் போன்ற பத்திரிகைகளில் வரும் ஆன்மிகக்கட்டுரைகளிலிருந்து ஆத்மா உய்வதற்குரிய எந்தத் தெளிவையும் எவரும் பெறமுடியாது. 'லக்ஷ்மணன் அடிமையில் (சேஷத்வத்தில்) ஊன்றி நின்றவன். பரதன் இறைவன் இட்ட வழக்காயிருக்கும் நிலை (பாரதந்த்ரியம்) என்னும் பெருங்குணத்தில் ஊன்றி நின்றவன்' என்பதைப் புரிந்துகொள்ளும் அளவுக்குப் பக்குவமில்லாததால் 'சகுணம் நிர்குணம்' என்று குழப்புகிறார் நாராயணன். அத்வைதிகள் கூறும் நிர்க்குணத்திற்கும் பரதனுடைய நிலைக்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை என்பது எவர்க்கும் விளங்கும். டாக்டர் பிரணதார்த்திஹரன் 'எவருக்கும் எதுவும் புரியக் கூடாது' என்று உறுதி கொண்டே தாம பேசுவதையும் எழுதுவதையும் செய்கிறார் என்பது தினமலர்க் கட்டுரைகளைப் பார்த்தாலே தெளிவாகும். நம்மாழ்வார் வாக்காக அவர் எழுதியிருப்பது நாலாயிர திவ்யப்ரபந்தத்தில் எங்குமே கிடையாது. 'பேசிற்றே பேசல்லால் பெருமையொன்று உணரலாகாது" [திருமாலை 22] என்பது தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிய திருமாலைப்பாசுரம். "எவ்வளவுபேசினாலும் எம்பெருமானுடைய பெருமையை முழுவதும் உணர்ந்துவிடமுடியாது" என்பது இதற்குப்பொருள். இதைப்பாடத்தையும் மாற்றி அதையும் நம்மாழ்வார் பாடியதாகத்திரித்துக்கூறி அதற்கு அபத்தமாக விளக்கமளிக்கும் விந்தை தினமலர் போன்ற பொது ஜனப் பத்திரிகைகளுக்கே உரித்தானது. இத்தகைய கட்டுரைகளை வைணவர்கள் படிக்காமலிருப்பது நல்லது.

http://acharya.org

ஸ்ரீ ஸ்ரீநிவாஸராஜகோபாலன், சென்னை-600054.

26 "கணையாழி" [18, பி பி சி ஹோம், செவாலியர் சிவாஜிசாலை, தி நகர், சென்னை-600017] ஜூலை 1997 இதழில் மந்தமுத்து என்பவர் எழுதியுள்ள "சமநீதியும் சரணாகதி தத்துவமும்" என்னும் கட்டுரையில் ஸ்ரீராமானுஜரின் சரணாகதிதத்துவம் பற்றிய கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதை விமர்சிக்கக்கோருகிறேன்.

நம்மை ஆண்டுவந்த வெள்ளையர்கள் நாட்டைவிட்டுப் போய் ஐம்பதாண்டுகள் ஆனாலும் அவர்கள் நம்மைப் பிரித்தாளுவதற்காகப் பயன்படுத்திய ஆரியர் திராவிடர் போன்ற கருத்துக்கள் நம்நாட்டைவிட்டுப் போகவில்லை. நம் நாட்டிலுள்ள வேத சாத்திரங்கள், வடமொழி தென்மொழியிலுள்ள பண்டை இலக்கியங்கள் ஆகிய எவற்றையும் ஆராயாமல் வெள்ளைக்காரர்கள் விட்டுச்சென்ற பொய்க் கருத்துக்களைப் பற்றிக்கொண்டு கோயில்களைப்பற்றியும் ஸ்ரீராமானுஜரைப் பற்றியும் வரலாற்று இலக்கியங்களுக்கு முரணாகவும் எவ்வித ஆதாரமின்றியும் பல அபத்தமான கருத்துக்களை இக்கட்டுரையாசிரியர் எழுதியுள்ளார். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதான பகவத் கீதையைப் பற்றி "புத்தருக்கும் அசோகருக்கும் பதிலடிதர பகவத் கீதை படைக்கப்பட்டது" என்று மனம் போனபடி எழுதுகிறார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியங்களிலேயே திருமால் கோயில்கள் இடம் பெற்றுள்ளன. அங்கு எழுந்தருளியிருக்கும் திருமால் 'அந்தணர் ஓதும் அருமறை'யால் ஆராதிக்கப்படுகிறார் என்று பரிபாடலில் பறை சாற்றப்பட்டுள்ளது. விஷ்ணு கோயில்களின் ஆராதனத்திற்கு அடிப்படையான பாஞ்சராத்ர ஆகமம்—மஹா பாரதத்திலும் பிரம்மசூத்திரத்திலும் வியாசரால் குறிப்பிடப்பட்டிருக்கையால் மஹாபாரதத்திற்கும் முற்பட்டது என்பது தெளிவு. அதில் அந்தணர்களால் விஷ்ணுவாகிற திருமால் ஆராதிக்கப்படவேண்டுமென்று விதிக்கப்பட்டுள்ளது. இவை ஒன்றையும் அறியாமல் வெள்ளையர்களும் அவர்களுடைய அடிவருடிகளும் எழுதிவைத்த பிதற்றல்களைப் பற்றிக்கொண்டு இக்கட்டுரையில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது:—

http://acharya.org

I. "வரலாற்று வளர்ச்சியில் தாங்கள் தனிமைப்பட்டுப் போனதை உணர்ந்த வைதிகர்களில் ஒரு பிரிவினர் கோயில்களையும் கடவுள்களையும் கைப்பற்ற முனைந்தனர். இதற்கான முன் தயாரிப்பு நெடுங்காலமாகவே நடைபெற்று வந்திருந்தது. கோயிலைக் கைப்பற்றப் போர்க்குரல் எழுப்பிய வைதிகர் தலைமையிலான இயக்கம் இராமானுஜரின் வைணவமாகும்."

II. "ராமானுஜர் பழைய தர்ம சாத்திரங்களின் அணுகுமுறையைக் கைவிட்டார். வேள்வித்தீயின் இடத்தில் விஷ்ணு விக்ரகத்தைவைத்தார். வேதமந்திரங்களுக்குப்பதில்வைணவப் பாசுரங்களை முன்மொழிந்தார்."

III. "சூத்திரரைக் கோயிலுக்குள் அனுமதித்தார் அவர் என்று சொல்லுகிறார்கள் சிலர். இது முற்றிலும் தவறு. பார்ப்பனரைத்தான் கோயிலுக்குள் கூட்டிச் சென்றார் அவர்; அதுவும் சூத்திரர் வசமிருந்த கோயிலுக்குள். பிறகு அந்தச் சூத்திரர்களுக்குரியவையாக இருந்துவந்த கோயில்களில் அவர்களுக்குச் சில உரிமைகளை வழங்கினார்."

இத்தகைய ஆதாரமும் அடிப்படையுமற்ற அபத்தங்கள் இக்கட்டுரையில் நிறைந்துள்ளன. இத்தகைய பொய்யான கருத்துக்கள் கொண்ட கட்டுரைகளை வெளியிடுவதன் மூலம் நாட்டில் தலைவிரித்தாடும் வன்முறைகளை மேலும் வளர்க்கவே "கணையாழி" உதவுகிறது. நமது விமர்சனம் அப் பத்திரிகைக்கும் அனுப்பப்பட்டுள்ளது. நேர்மையிருந்தால் அது நமது மறுப்பை வெளியிட்டு, தன் கட்டுரைக்கு வருத்தம் தெரிவிக்கட்டும்.

**கீழத்திருமாளிகை அம்மாள் ஸ்ரீ திருவேங்கடாசார்யஸ்வாமி, ஸ்ரீரங்கம்**

**27.** தினமலர் - திருச்சி 23-7-97 இதழில் 'ஆன்மீகம் அறிவோமா' பகுதியில் 'ஏழ் நாகுழல்வார்கள் யார்? என்னும் தலைப்பில் மதுரையில் எஸ். வெங்கட்ராமன் பேசியதை ம. ராமகிருஷ்ணன் என்பவர் சுருக்கி எழுதியுள்ளார். அதில். "பரப்பிரமமாகிற நாணயத்தின் இருபக்கங்களை சிவனும்

http://acharya.org

திருமாலும். இதை உணராமல் ஹரிஹர பேதத்தை வளர்ப்பது விரும்பத்தகாதது ஆகும். அரனதிகன் அரிஅதிகன் என்று பேசி வாதிடுவோர் பரகதி அடைவது அரிது என்றார் கம்பர்'' என்றும், "வியாஸர் சிவபுராணத்தில் சிவனே முழுமுதற் கடவுள் என்றும், விஷ்ணு புராணத்தில் மூலப்பரம்பொருள் விஷ்ணுவே என்றும் பாடுகிறார். மற்ற புராணங்களில் அந்தந்தத் தெய்வமே முதல் என்று பாடுகிறார்'' என்றும், "கண்ணனைப் பூஜை செய்த மலர்களை சிவனின் பாதங்களில் அர்ஜுனன் கண்டான்' என்றும் இது போன்ற செய்திகள் தரப்பட்டுள்ளன. இவற்றை விமர்சிக்கக் கோருகிறேன்.

"தினமலரில் இந்துமதம் என்னும் பொதுப் பெயரில் அடைக்கப்பட்டுள்ள எல்லா மதங்களைப்பற்றியும் திரு ம. ராமகிருஷ்ணன் தினந்தோறும் தொகுத்துக்கொடுக்கிறார். அப்படியிருக்கும்போது "சிவபரத்துவ வாதம் செய்யும் சைவர்களும் விஷ்ணு பரத்துவவாதம் செய்யும் வைஷ்ணவர்களும் நரகத்திற்குப் போவார்கள்'' என்று ஒருவர் பேசியதை அனைவரும் படிக்கும் பொதுப்பத்திரிகையில் வெளியிட்டு வந்து மிகவும் தவறானது. வேத சாஸ்திரங்கள் விஷ்ணுவால் தன் நாபீ கமலத்திலிருந்து பிரமன் படைக்கப்பட்டான் என்றும். பிரமனிடமிருந்து உருத்திரன் உண்டானான் என்றும் பலவிடங்களில் முழங்குகின்றன. எல்லா தெய்வங்களுக்கும் மேலான தெய்வம் ஒன்று உண்டு என்றும், அவன் நாராயணனே என்றும், அவனை உபாசித்துச் சரணடைந்தால்தான் மோக்ஷம் கிடைக்கும் என்றும் பலவேதவாக்கியங்கள் முழங்குகின்றன. நாராயண ஸூக்தத்தில் நாராயணனே பரப்ரம்மம் என்றும், பரதத்வம் என்றும் பரஞ்சோதி என்றும் பரமாத்மா வென்றும் முழங்கி, இறுதியில் "ஸ ப்ரஹ்மா ஸ ஶிவ: ஸேந்த்ர:'' என்று பிரமன் சிவன் இந்திரன் ஆகிய மூவர்க்கும் அந்தர்யாமி அவனே' என்று பறை சாற்றப்பட்டது. வைஷ்ணவரல்லாத ஸாயணர், பட்டபாஸ்கரர் ஆகிய இருவரும் தம் வேதபாஷ்யங்களில் ஆதரித்தபாடம் இதுவே. இதைப்பொறுக்

காத சமரசவாதிகள் ஒவ்வொருபாதத்திலும் எட்டு எழுத்துக்கள் கொண்டமந்திரங்களின் அமைப்புக்கு முரணுக 'ஸடூர ஹ்மா ஸ ஶிவ: ஸேந்த்ர:' என்பதையொட்டி 'ஸ ஹரி:' என்ற மூன்றெழுத்தைச் சேர்த்தார்கள். இது வேதத்திற்குச் செய்யப் பட்ட மிகப்பெரிய துரோகமாகும். இந்த வேத துரோகிகளே பூர்வாசார்யர்கள் கையாண்டதற்கு மேல் பல உபநிஷத்துக் களைக் கற்பித்து '108 உபநிஷத்துக்கள்' என்னும் பொய்ச் சுவடியை அச்சிட்டார்கள். 'ஸ ஹரி:' என்னும் பொய்ப் பாடத்தை வைத்துக்கொண்டும், பிராசீநர்கள் எவராலும் கை யாளப்படாததாய் நவீனமாகக் கல்பிக்கப்பட்ட பொய் உப நிஷத்துக்களில் ஒன்ருன ஸ்கந்தோபநிஷத்தைக் கொண்டும் இவர் வாதம் செய்வது இவரும் அந்த வேத துரோகக் கூட் டத்தைச் சேர்ந்தவர் என்பதைத்தெளிவாக்குகிறது. வியாசர் 18 புராணங்களிலும் முன்னுக்குப்பின் முரணுக ஒவ்வோர் தெய்வத்தைப் பரம்பொருளாகக் கூறினுர் என்று இவர் கூறுவது வியாசரைப் பைத்தியககாரராக்குவதே ஆகும். "தீர்த்தன் உலகளந்த" [திருவாய்மொழி 2-8-6] என்னும் பாடடில் நம்மாழ்வார் "அர்ஜுனன் கண்ணன் திருவடிமேல் சாத்தின பூமாலைகளைச் சிவனுடைய முடிமேலே கண்டான்" என்று பாடியிருக்கிருர். இதற்கு ஆதாரமான ஶ்லோகத்தை யும் திருவாய்மொழி வ்ரிவுரைகளில் எடுத்திருக்கிருர்கள், அப்படியிருக்க ஒரு ஆதாரமும் காட்டாமல் இவ்வுண்மையை மாற்றிக் கூறுகிருர் இக்கட்டுரையில். நூற்றுக்கணக்கான பாடல்களில் 'அரனைக்காட்டிலும் அரி பெரியவன்'என்று காட் டிருக்கும் கம்பன்—'அரனதிகன்' என்னும் பாட்டில் "அரனும் அதிகன். உலகளந்த அரியும்அதிகன்" என்று முன்னுக்குப் பின் முரணுசச் சொல்லுபவர்களுக்குப் பரகதி கிடையாது. என்று பாடியுள்ளான் என்று கொள்வதே பொருத்தமாகும் இவ்விஷயங்களை விஷ்ணுசித்தவிஜயம், கம்பனின் சமயம் முதலான நூல்களில் ஆயிரக்கணக்கான பக்கங்களில் நிலை நாட்டியிருக்கிருேம். எல்லா மதங்களைப்பற்றியும் எழுதும் தின மலர் சைவர்கள் வைஷ்ணவர்கள் மனத்தைப் புண்படுத்தும் இத்தகைய குரங்கு மத்யஸ்தக் கட்டுரைகளை இனியாவது வெளியிடாது என்று நம்புகிருேம்.

http://acharya.org

ஆசுகவி கிடாம்பி கோவிந்தய்யங்கார் ஸ்வாமி, ஸ்ரீவில்லிபுத்தூர்
P. B ஸ்ரீநிவாஸன், சென்னை—88

28 ஸுதர்சனம் பத்திரிகையில் பிள்ளையார் கி. பி. 7 ம் நூற்றாண்டுக்குப்பிறகே தமிழ் வடமொழி இலக்கியங்களில் காணப்படுகிறார் என்றும், வேதங்கள் இதிஹாஸங்கள் பழைய புராணங்கள் ஆகியவற்றில் சிவ புத்திரரான பிள்ளையார் கிடையாது என்றும் எழுதியுள்ளீர்கள். இப்படிக் கொண்டால் பின்வரும் பாதகங்கள் ஏற்படுகின்றன. திருவரங்கத்தமுதனார் இராமாநுசநூற்றந்தாதியில் (22 ம் பாட்டு). சிவ புத்திரரான விநாயகரைக் கரிமுகத்தான் என்று குறிப்பிட்டிருக்கிறார். பிள்ளைப்பெருமாள் ஐயங்காரும் குறிப்பிட்டிருக்கிறார். கூர நாராயண ஜீயரும் ஸுதர்சன சதகத்தில் பாணாசுரன் கதையில் விநாயகரைக் குறிப்பிட்டிருக்கிறார். அமரசிம்மனும் அமரகோசத்தில் குறிப்பிட்டிருக்கிறான். ஸ்ரீமத் பாகவதத்தில் "ஶங்கராநுசராந்............ வேதாளான் ஸவிநாயகான்" என்று தசமஸ்கந்தம் 63 வது அத்தியாயத்தில் பாணாசுர விருத்தாந்தத்தில குறிப்பிடப்பட்டுள்ளது. ஔவையாரும் விநாயகர் துதி செய்திருக்கிறார். பாஞ்சராத்ரம் பாத்ம ஸம்ஹிதையில் (க்ரியாபாதம் 30—97) "விக்₄நராட்" என்று தொடங்கும் ஶ்லோகத்தில் விநாயகர், அவருடைய தகப்பனை சிவன், கருடன், துர்க்கை, முருகன் முதலான பரிவார தேவதைகளைப் பிரதிஷ்டை செய்யும்படி கூறப்பட்டுள்ளது. விநாயகருக்கு முறிக்கப்பட்ட தந்தத்தை ஒரு கையிலும், மற்ற கைகளில் விளங்கனி பாசாங்குசம் ஆகியவற்றை உடையவராகவும் பிரதிஷ்டை பண்ணும்படி கூறப்பட்டிருக்கிறது. போதாயனர்கள் உபாகர்மத்தில் விநாயகருக்குத் தர்ப்பணம் செய்துவருகிறார்கள். இவற்றை எப்படி நிர்வகிப்பது?

பிரசித்தமான ஶ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸங்களிலும், ஸ்ரீவிஷ்ணு புராணம் போன்ற அனைவராலும் கையாளப்பட்ட பழைய புராணங்களிலும், சங்க இலக்கியங்களிலும், கி. பி, ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட எல்லா வடமொழி தென்

http://acharya.org

மொழி இலக்கியங்களிலும் சிவபுத்திரரான பிள்ளையார் காணப் படவில்லை என்பது வெளிப்படை. ஸ்ரீபாகவதத்தில் விநாய கரை சிவனுடைய பூதகணங்களில் ஒருவராகக் குறிப்பிட்டி ருக்கிறதேயொழிய சிவபுத்திரராகக் குறிப்பிடவில்லை. அமரகோசம் முதலான வடமொழி நூல்களும், ஔவையார் நூலும், இராமாநுசநூற்றந்தாதியும், ஸுதர்சன சதகமும், பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் நூல்களும் எழுதப்பட்ட காலத் தில் பிள்ளையார் சிவபுத்திரராகப் பிரசித்தி பெற்றுவிட்டாரா கையால் அதை ஏற்றுக் கொண்டு அவர் குறிப்பிடப்பட்டுள்ள தாகக் கொள்ளவேண்டும். பாத்ம ஸம்ஹிதை / போதாயன ப்ரயோகங்கள் முதலானவற்றிலும் பிள்ளையார் பிரசித்தி பெற்றுவிட்ட பிற்காலத்தில் சிலர் இடைச்செருகலாகப் பிள்ளையாரைச் சேர்த்து விட்டார்கள் என்றே கொள்ள வேண்டும். பாரதத்திலேயே இடைச்செருகல்களைச் செய்தவர் கள், தைத்திரீய நாராயண வல்லியில் வேதபாஷ்யங்களில் இல்லாத கணபதி காயத்ரி முதலானவற்றைப் புகுத்தியவர்கள் இவற்றிலும் இடைச்செருகல்கள் செய்தது வியப்பல்ல. ஏழாவது நூற்றுண்டுக்கு முற்பட்ட எல்லா இலக்கியங்களிலும் முருகன் காணப்படுவதுபோலே பிள்ளை யார் காணப்படாததிலிருந்தே சிவகணங்களில் ஒருவராக இருந்த விநாயகரைப் பிற்காலத்தில் சிவனுடைய மூத்த புத்திரராகவும், ஒரு தந்தமுள்ளவராகவும் கற்பித்து அதற்குத் தகுந்தபடி புராணங்களையும் எழுதி, சிற்பங்களை யும் கோயில்களில அமைத்துவிட்டார்களென்றே கொள்ள வேண்டும்.

**கோம்பூர் R ராஜகோபாலய்யங்கார், ஸ்ரீரங்கம்**

29. 24-8-97 "கல்கியில்" 'பதிமூன்ருவது ஆழ்வார் பாரதியார்' என்னும் தலைப்பில் ஒருகட்டுரை வெளிவந்துள் ளது. அதை விமர்சிக்கவும்.

பாரதியாரை ஆழ்வாராக்கியது ஒரு அடாதசெயல். இதைக் கண்டித்து ஈஸ்வர ஹே புரட்டாசி [598] 25-9-97 இதழில் தலையங்கம் எழுதியிருக்கிறோம். இது ஸுதர்சனர் பதில் 13 வது சதகத்திற்கு அனுபந்தமாகவும் இணைக்கப் பட் டுள்ளது.

http://acharya.org

மணவாள ராஜஹம்ஸம், பவானி

30. நக்கீரன் (செப் 9-97) இதழில் ரங்கராஜஸ்வாமிகள் என்பவர் 'லோகநாயகி சொல்லுகிருள்' என்னும் பேட்டியை அளித்துள்ளார். அதில், "ஸ்ரீராமசந்திரமூர்த்தி 14 வருடம் காட்டிலுள்ள மிருகங்களைக் காப்பாற்றுவதற்காக ஆரண்யவாசம் செய்ததாக ஆசார்ய ராமாயணத்தில் சொல்லியிருப்பதுபோல் தான் சந்தனக்கடத்தல் வீரப்பன்" என்றும், "சந்தன வீரப்பன் மிகவும் பெரிய கொள்ளைக்காரன் என்கிருர்கள். யார்தான் கொள்ளையடிக்கவில்லை? கொலை செய்யவில்லை? இன்று உலகமே வேஷமிக்கிறதே திருமாலிரும் சோலையில் குடிகொண்டிருக்கும் கள்ளழகர் அவர் யார்? பகலிலே வள்ளலாகவும் ராவிலே கொள்ளையனுகவும் வாழ்ந்தவர்தானே! திருமங்கையாழ்வார் ஒரு கொலைகாரர்தானே! ராமநாமத்தை நிலைநிறுத்திய வால்மீகி ஒருபயங்கரமான கொலைகாரன் தான், கொள்ளைக்காரன்தான்" என்றும் கூறியுள்ளார். இதை விமர்சிக்கக்கோருகிறேன்.

இன்று அரசியல்வாதிகள் பொதுமக்களின் வரிப்பணத்தைக் கொள்ளையடிப்பவர்களாக விளங்குகிருர்கள். அவர்களுக்கும் அவர்களை ஆதரிக்கும் நக்கீரன் பத்திரிகை போன்றவர்களுக்கும், ரங்கராஜஸ்வாமிகள் போன்ற போலித்துறவிகளுககும் சங்ககாலத்திலிருந்து பல்லாயிரம் வருடங்களாக சங்ககாலச்சான்ருேர்களாலும் ஆழ்வார்களாலும் திருமாலாகப் போற்றி வழிப்படப்படும் திருமாலிருஞ்சோலை அழகர் கொள்ளைக்காரராகத்தோன்றுவது ஒருவியப்பல்ல.கள்ளர்களால் வழிபடப்படும் தெய்வமாகையாலே "கள்ளழகர்" என்று அவருக்கு மக்கள் பெயர்வைத்துள்ளார்கள். அவரை இரவில் கொள்ளைக்காரராக வாழ்ந்த மனிதரெனப் பிதற்றியிருப்பதற்கு எந்த ஆதாரமும் கிடையாது. உலகம் போற்றும் ஸ்ரீராமபிரானேடும், திருமங்கையாழ்வாரோடும், வால்மீகியோடும் இன்றுய கொலைகாரனுகவும் கொள்ளைக்காரனுகவும் வாழும் சந்தனக்கடத்தல் வீரப்பனை ஒப்பிட்டிருப்பது இதைப் பேசியிருப்பவர் அச்சிட்டிருப்பவர் ஆகியவர்களுடைய மட்டரகமான மனப்பான்மையைக் காட்டுகிறது.

திருவெள்ளறை கீழத்திருமாளிகை அம்மாள் ஸ்ரீ திருவேங்கடாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்

31. துக்ளக் (24-9-97) இதழில் "நாலாயிர திவ்ய ப்ரபந்தம் திராவிடவேதம்' என்னும் கட்டுரையில் 'ஆழ்வார்கள ஆய்வுமையம்' அண்ணா விருது கலைஞர் விருது ராமானுஜ விருது ஆகிய விருதுகள் வழங்கியதைப்பற்றிய செய்திதொகுப்பில "நீதியரசர் இஸ்மாயில் தமிழ்இலக்கியங்களிலும் ராமாயணத்திலும் பெரும் புலமை கொண்டவர். எனவே அவருக்கு ராமானுஜர்விருது பொருத்தமானது"என்றுஒருவர் பேசியதாகவந்துள்ளது. முன்னாள் அமைச்சரும் ஆழ்வார்கள் ஆய்வுமையத்தின் தலைவருமான இராம. வீரப்பன் "கள்ளர்கள் தேவர்கள் பிராம்மணர்கள் பல ஜாதியினரும் ஆழ்வார்களாயிருந்தனர்." என்றும், "சிறுவயதில் சேரிப்பிள்ளைகளோடுவிளையாடிய இராமானுசர் தாழ்த்தப்பட்ட மக்கள் கோயிலுக்குள் நுழைய அரும்பெரும் போராட்டங்களை நடத்தியவர். தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்த நம்பியை குருவாக ஏற்றவர்" என்றும் பேசியதாக வெளிவந்துள்ளது. இவற்றை விமர்சிக்கவும்.

முன்னாள் தலைமை நீதிபதி மு. மு. இஸ்மாயில் தாம் நடத்திவரும் சென்னைக் கம்பன் கழகத்தின் மூலம் "ஆழ்வார்களும் கம்பனும் அரி, அரன், அயன் என்ற மூன்றும் சேர்ந்த ஒன்றையே பரம் பொருளாகக் கொண்டவர்கள்" என்னும் விதண்டாவாதத்தைச் செய்த முரு. பழ. இரத்தினம் செட்டியாரின் நூலை வெளியிட்டு ஆழ்வார்களும இராமானுசரும் நிறுவிய விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்தையே தகர்க்க முயன்றவர். நம்மிடமிருந்து ஆணித்தரமான மறுப்பைப் பெற்று இன்றளவும் வாய்திறவாமல் இருப்பவர். இத்தகையவருக்கு ஆழ்வார்கள் ஆய்வுமையம் 'இராமானுசர் விருது' கொடுத்தது கசாப்புக்கடைக்காரருக்குத் திருவள்ளுவர் விருது கொடுப்பதை யொக்கும். இராம வீரப்பன் இராமானுசர் சிறுவயதில் சேரிப்பிள்ளைகளோடு விளையாடினார் என்று பேசியிருப்பதும் '(திருக்கச்சி) நம்பி தாழ்த்தப்பட்ட குலத்தைச்சேர்ந்தவர்' என்று பேசியிருப்பதும் வரலாற்று நூல்களுக்கு முரணானது இது ஆதாரமும் அடிப்படையுமற்ற பேச்சாகும். எல்லா வரலாற்று நூல்களும் திருக்கச்சி நம்பி வைசிய குலத்தைச் சேர்ந்தவர் என்றே கூறுகின்றன. அவர் தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்தவரென்று எந்தவொரு நூலும் கூறவில்லை. இவர் சொல்லியிருப்பதுபோல் தேவர் குலத்தில் எந்த ஆழ்வாரும் அவதரித்ததாக வரலாற்றுநூல்களில் காணவில்லை.

http://acharya.org

ஸ்ரீ "ஸ்வாமி" எழுத்தாளர், சென்னை (32 முதல் 77 கேள்விகள்) (இக்கேள்விகள் "புதியபார்வை" (தமிழ் அரசி மாளிகை, தபால் பை எண். 1073, 84, டி.டி.கே. சாலை, சென்னை - 600 018.) என்னும் பத்திரிகையில் நேர்காணல் (பேட்டி) கண்டபோது கேட்கப்பட்டவை. இவற்றில் பெரும்பகுதி அப்பத்திரிகையில் 16.10.97 இதழில் புகைப்படங்களுடன் வெளியிடப்பட்டன.)

32. கேள்வி: கடவுள் உண்மையில் இருக்கிறாரா? கடவுள் என்பது மனித நன்மைக்காகவும் உலக நன்மைக்காகவும் கூறப்படும் மனோதத்துவக் கருத்து மட்டுமே (Psycological Conception) என்று சிலர் கூறுவதற்குத் தங்களுடைய பதில் என்ன?

பதில்: கடவுள் இல்லையென்றும் அது ஒரு கற்பிக்கப்பட்ட மனோதத்துவக்கருத்து மட்டுமேயென்றும் கூறுகிறவர்கள் அண்டவெளியில் மிக ஒழுங்காக நடைபெறும் மிகப்பெரிய ஆச்சரியமான நிகழ்ச்சிகளைக் காணத்தவறி விடுகிறார்கள். வலிமை குறைந்த நம்முடைய புலன்களாலேயே சூரியன் சந்திரன் கிரகங்கள் எண்ண முடியாத நட்சத்திரங்கள் முதலானவை ஒரு ஒழுங்குக்குக் கட்டுப்பட்டு இயங்குவதைக் காண்கிறோம். ஒரு ஒழுங்குக்குக் கட்டுப்பட்டு நடைபெறும் சிறு காரியங்களும் ஒருவர் அல்லது சிலருடைய முயற்சியினாலேயே இவ்வுலகில் நடைபெறுவதை நாம் அனைவரும் கண்கூடாகக் காண்கிறோம். அப்படியிருக்கும் போது அண்ட வெளியில் மிக ஒழுங்காக நடக்கும் இந்த ஆச்சரியமான நிகழ்ச்சிகள் ஒரு ஆச்சரியமான சர்வ சக்தியுள்ள பரம்பொருளாலேயே நடத்திவைக்கப்படுகின்றன என்பதை எளிதில் உணரலாம். இத்தகைய கடவுளைப் பற்றிய நம்பிக்கை மனித நன்மைக்காகவும் ஆகிறதேயொழிய அதற்காகக் கற்பிக்கப்பட்ட கருத்தல்ல அது என்பதும் எளிதில் விளங்கும்.

33. கேள்வி: இப்படி அனுமானத்தைக் கொண்டே கடவுள் இருப்பதை நிறுவலாமானால்சாத்திரங்களைக் கொண்டே கடவுளை அறிய வேண்டுமென்று கூறுவது எப்படிப் பொருந்தும்?

பதில்: அனுமானத்தைக் கொண்டு கடவுள் இருப்பதை அறியலாமானாலும், அந்தக் கடவுள் எத்தகையவர், அவருக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பு எத்தகையது, ஜீவன் இவ்வுலகத் துன்பங்களிலிருந்து விடுதலை பெற்றுக் கடவுளையடைய வழி என்ன முதலான பல விஷயங்களை அனுமானத்தால் முழுவதும்

http://acharya.org

அறிந்துவிட முடியாது. இவற்றை வேதம் முதலான சாஸ்திரங்களைக் கொண்டே அறிய முடியும். பிரம்ம சூத்திரத்தில் இதை வேதவியாசர் "சாஸ்த்ர யோநித்வாத்" என்னும் சூத்திரத்தில் கூறினார்.

34. கேள்வி: மனிதன் பாவம் செய்தால் தண்டனை கிடைக்கும் என்னும் பயத்தை விளைத்து அதனால் மனிதர் பாவம் செய்யாமல் இருப்பதற்காகவே சாத்திரங்கள் சிலரால் கற்பிக்கப்பட்டன என்பது பற்றித் தங்கள் கருத்து யாது?

பதில்: கிறிஸ்தவர்களின் வேதமாகிற பைபிள், முஸ்லீம்களின் வேதமாகிய குரான் ஆகியவை ஒவ்வொருவரால் சொல்லப்பட்டதாகவே அவர்களே ஒப்புக்கொள்கிறார்கள். எனவே அந்த நூல்களைப் பொறுத்த வரையில் கற்பிக்கப்பட்டவை என்று கருதுவதற்கு இடமுண்டு. நம்முடைய நாட்டில் வழங்கிவரும் வேதங்கள் சிலரால் சொல்லப்படாமல் அநாதிகாலமாக அவ்வப்போது தோன்றிய ஆசார்யர்களுடைய வாய்மொழி மூலமும் கேட்கும் சீடர்களுடைய செவி வழியாகவும் பரவி வருகின்றனவேயொழிய ஏட்டுச் சுவடிகளில் எழுதிப் பரவி வருகின்றவையல்ல. அத்துடன் ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்னும் நாலு வேதங்களிலும் பலபல சாகைகளும் உள்ளன. அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விதமான ஸ்வரங்களும் உண்டு. இவையெல்லாம் பாரத தேசமெங்கும் செவி வழியாகவும், வாய்வழியாகவுமே நினைவு தெரிந்த நாள் முதல் பரவி வருகின்றன. அந்த வேதங்களிலேயே அந்த வேதங்கள் எவராலும், அனைத்தையும் படைத்த இறைவனாலும் கூடச் செய்யப்பட்டவையல்ல என்றும், இறைவனால் தன் நினைவில் என்றும் கொள்ளப்பட்டிருப்பவையென்றும், அவனால் முதன்முதலில் தன் உந்தித் தாமரையில் படைக்கப்பட்ட நான்முகனுக்கு உபதேசிக்கப்பட்டனவென்றும், அவனிடமிருந்து இப்படி உபதேசமூலமாகவே பரவி வருகின்றன என்றும் சொல்லப்பட்டுள்ளது. வேதத்திலுள்ள நூற்றுக்கணக்கான பல சாகைகள் (பிரிவுகள்) வழக்கொழிந்துபோன இக்காலத்திலும் வழக்கில் உள்ள வேதங்கள் இவ்வாறே பரவி வருவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். இது எவராலும் கற்பிக்கப்பட்டு நடக்கக்கூடிய காரியம் அல்ல. ஆகையால் ஒருவராலும் இயற்றப்படாததாகையாலே 'அபௌருஷேயம்' என்றும், என்றும் உள்ளதாகையாலே 'அநாதி' என்றும் 'நித்யம்' என்றும் பல்லாயிரம் வருடங்களாகப் பாரத தேசத்தில் புகழ்பெற்ற

http://acharya.org

வேதங்கள் விஷயத்தில் கற்பிக்கப்பட்டது என்னும் வாதம் எழுவதற்கு இடமேயில்லை.

35. கேள்வி: சநாதன மதம் எது? அந்த மதத்தின் ஒரே கடவுள் அல்லது பிரம்மம் யார்?

பதில்: சநாதனமான அதாவது தோன்றிய காலம் இல்லாத வேதத்தில் சொல்லப்படுவதே சநாதன மதம் (என்றுமுள்ள மதம்). அந்த வேதத்தில் பல கடவுளர் குறிக்கப்படுகின்றனர். அவர்களுக்கெல்லாம் தலைவன் ஒருவன் இருக்கிறான் என்றும் பலவிடங்களில் முழங்கப்பட்டுள்ளது. யஜுர்வேதம் ஸம்ஹிதையில் (5 - 5) "அக்நிரவமோ தேவதாநாம் விஷ்ணு: பரம:", (தேவதைகளுக்குள் அக்னியானவன் மிகத் தாழ்ந்தவன். விஷ்ணுவானவர் மிக உயர்ந்தவர்) என்று ஓதப்படுகிறது. ரிக் வேதத்தில் ஐந்தாம் அஷ்டகம் ஆறும் அத்தியாயம் 24வது வர்க்கம் (அல்லது மண்டலம் 7.6.99) இரண்டாவது மந்திரம், "நதேவிஷ்ணோ ஜாயமாநோ ந ஜாதோ தேவ மஹிம்ந: பரமந்தமாப" (தேவனான விஷ்ணுவே! பிறக்கிறவனும், பிறந்தவனும் உன்னுடைய பெருமையின் மேல் எல்லையை அறியவில்லை.) என்று ஓதப்படுகிறது. யஜுர் வேதத்தில் தைத்திரீய ஆரண்யகத்தில் எட்டாவது பிரச்னத்தில்

''அநவர்ணே இமே பூமீ இயம் சாஸௌ ச ரோதஸீ
கிம்ஸ்விதத்ராந்தரா பூதம் யேநேமே வித்ருதே உபே
விஷ்ணுநா வித்ருதே பூமீ இதி வத்ஸஸ்ய வேதநா''

('பூமீ' என்றும், 'ரோதஸீ' என்றும் சொல்லப்படும் இங்குள்ள பிருதிவியும், அங்குள்ள தேவலோகமும் மிக அழகியவை; இவற்றினிடையிலிருந்து இவையிரண்டையும் தரித்திருப்பது எது? இவ்விரண்டும் விஷ்ணுவினாலே தரிக்கப்பட்டு நிற்கின்றன என்று வத்ஸர் என்னும் ரிஷி கண்டறிந்தார்.) என்று ஓதப்படுகிறது. ரிக் வேதத்திலுள்ள விஷ்ணு ஸூக்தங்களிலும், எல்லா வேதங்களிலும் காணப்படுவதாய் உலகைப் படைக்கும் பரம் பொருளைக் கூறுவதான புருஷ ஸூக்தத்திலும் லக்ஷ்மீநாதனான திருமாலே இவ்வுலகைப் படைத்தல், காத்தல், அழித்தல் முதலானகாரியங்களைச் செய்யும் பரம் பொருள் என்று தெளிவாக ஓதப்பட்டுள்ளது. உபநிஷத்துக்கள் பலவற்றிலும் இவ்விஷயம் வலியுறுத்தப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து ஸநாதன மதத்தில் திருமாலே பரப்பிரம்மமாகவும், பரமாத்மாவாகவும் சொல்லப்படும் ஒரே கடவுள் என்று விளங்குகிறது.

http://www.acharya.org

36. கேள்வி : பாரத தேசத்தில் அநாதி காலமாகவுள்ள அனைவர்க்கும் வேதமே பொதுவான பிரமாணம் எனில்; அதை அடிப்படையாகக் கொண்டு த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என்று வேறுபட்ட வேதாந்தக் கொள்கை களையுடைய மூன்று மதங்களும், வேறுபட்ட கடவுட் கொள்கைகளையுடைய சைவம், வைஷ்ணவம் ஆகிய இரு மதங்களும் எப்படி எழுந்தன?

பதில்: 1. வேதத்தில் பிரம்மத்தையும் உலகத்தையும் வெவ்வேருகக் கூறும் வாக்கியங்கள் பல உள்ளன. இவை பேதவாக்கியங்கள் எனப்படும். சில வாக்கியங்கள் உலகமும் பிரம்மமும் ஒன்றே என்று கூறுகின்றன. இவை அபேத வாக்கியங்கள் எனப்படும். இவ்விரண்டு வகை வாக்கியங் களிடையே மேலெழத் தோன்றும் முரண்பாட்டை எப்படி நீக்குவது என்னும் கேள்விக்கு மூன்று மதத்தினர்களாலே மூன்று வகையான விளக்கங்கள் கொடுக்கப்பட்டதால் இந்த மூன்று மதங்களும் ஏற்பட்டன. த்வைதமதத்தை நிறுவிய மத்வர் பேத வாக்கியங்கள் மிகுதியாக இருக்கையால் பேதமே உண்மை என்றும், மிகச்சிலவான அபேத வாக்கியங்கள் பிரம்மத்தால் உலகம் ஆளப்படுவதையிட்டு இரண்டும் ஒன்றென்று கூறுவதாகக் கொள்ள வேண்டும் என்றும் கூறினுர். அத்வைத மதத்தை நிறுவிய ஆதிசங்கரர் பேதவாக்கியங்கள் உலகில் காணப்படும் பொய்த் தோற்றத்தைச் சொல்லுகின்றனவென்றும் அறிவுமாத்திரமான ஒன்றே உண்மையென்று சொல்லும் அபேத வாக்கியங்களே உண்மை நிலையைக் கூறுபவையென்றும், உண்மையைக்கூறும் அபேத வாக்கியங்களால் பொய்த்தோற்றத்தைக் கூறும் பேத வாக்கியங்கள் தள்ளப்படுகின்றன என்றும் கூறினுர். ஆக மத்துவர் பேத வாக்கியங்களுக்கு முக்கியப் பொருளையும் அபேத வாக்கியங்களுக்கு அமுக்கியப் பொருளையும் கொண்டார். சங்கரர் அபேத வாக்கியங்களுக்கு முக்கியப் பொருளையும் பேத வாக்கியங்களுக்கு அமுக்கியப்பொருளையும் கொண்டார். விசிஷ்டாத்வைத மதத்தை நிறுவிய ஸ்ரீராமானுஜர் வேத வாக்கியங்களில் எதற்குமே அமுக்கியப்பொருள் கூருமல் பொருள் கொள்ளும் வழியைக் காட்டினுர். வேதவாக்கியங்களில் சில பிரம்மம் உலகை உள்நுழைந்து ஆளும் உயிராக இருக்கிறது என்றும், உலகம் அதன் உடலாகவிருக்கிறது என்றும், அதனுலேயே கடவுளும் அதைவிட்டுப் பிரிக்க முடியாதபடி இணைந்து நிற்கும் உலகமும் ஒன்ருகக் கூறப்படுகின்றன என்றும் முழங்குவதை எடுத்துக் காட்டினுர். இந்த மூன்ருவது வகையான வாக்கியங்கள்

http://acharya.org

பேத வாக்கியங்களுக்கும் அபேத வாக்கியங்களுக்கும் மேலெழத் தோன்றும் முரண்பாட்டை நீக்குகையாலே இவை கடகச்ருதிகள் (பேத அபேத வாக்கியங்களை சமரசப்படுத்தும் வாக்கியங்கள்) எனப்படுகின்றன. இவ்வண்ணமாக வேதவாக்கியங்களுக்குப் பொருள் கொள்ளுவதில் வேறுபாட்டாலேயே இம்மூன்று மதங்களும் விளைந்தன. இம்மூன்று மதாசார்யர்களில் ஆதிசங்கரர் கி.பி.எட்டாவது நூற்றாண்டிலும், ஸ்ரீராமானுஜர் கி.பி 11வது நூற்றாண்டிலும், மத்துவர் கி.பி 12வது நூற்றாண்டிலும் தோன்றியவர்களானாலும், இம்மூன்று மதக்கொள்கைகளுமே இவர்களுக்கு முன்னால் இருந்திருக்கின்றன. இம் மதங்களைப் பரப்பியவர்கள் இம்மூன்று ஆசார்யர்களும் என்று கொள்ளலாம்.

2. வேதங்களிலும், மிகப்பழைய காலத்தில் வழக்கிலிருந்த உபநிஷத்துக்களிலும், மிகப்பழைய நூல்களான ஸ்ரீராமாயணம், மஹாபாரதம் ஆகிய இதிகாசங்களிலும், பழையபுராணமான விஷ்ணுபுராணத்திலும் திருமாலே உலகிற்குக் காரணமான பரம்பொருள் என்று சொல்லப்பட்டிருக்கின்றான். ஆயினும் அப்பரம் பொருள் எல்லையற்ற பெயர்களை உடையது என்று காட்டுவதற்காக அப்பரம்பொருளை வேதங்கள், ஸத் (உள்ளது), ப்ரஹ்ம (பெரியது), ஆத்மா (அறிவுடைய உயிர்ப்பொருள்), ஆகாசம் (எங்கும் பிரகாசிப்பது), வாயு (எங்கும் வியாபித் திருப்பது), அக்னி (உயர் நிலைக்கு அழைத்துச் செல்லுவது), இந்திரன் (செல்வத்தை உடையவன்), யமன் (அனைத்தையும் நியமிப்பவன்), ருத்ரன் (தீயவர்களை அழச்செய்பவன்), சிவன் (மங்களமானவன்), ஹிரண்யகர்ப்பன் (சிறந்த பொருள்களைத் தன்னுள் அடக்கியவன்), பிரஜாபதி (உயிர்களுக்குத் தலைவனாய் இருப்பவன்), விஷ்ணு (எங்கும் வியாபித்திருப்பவன்), ஹரி (பாபங்களை அழிப்பவன்), அநந்தன் (அளவில்லாதவன்), நாராயணன் (அனைத்தையும் வியாபித்து தரித்து நிற்பவன்) முதலான பல பெயர்களையிட்டுக் குறிப்பிடுகின்றன. அதே வேதங்கள் பரம் பொருளால் படைக்கப்பட்ட பல உயிரற்ற பொருள்களையும் உயிருள்ள பொருள்களையும் சில தேவர்களையும் முற்கூறிய பெயர்களால் குறிப்பிடுகின்றன.

இவர்களில் உயிரற்ற பொருள்களும் இவ்வுலகில் துன்பங்களை அனுபவிக்கும் ஜீவர்களும் பரம்பொருளாயிருக்க முடியாது என்பதை அனைவரும் எளிதில் உணரலாம். தேவர்களிலும் இந்திரன், யமன் வாயு, அக்னி போன்றவர்களுக்கு வேதங்களில் பல தாழ்வுகள் கூறப்பட்டிருக்கையால் அவர்களைப்

http://acharya.org

பரம்பொருளாகப் பலரும் நினைப்பதில்லை. பிரஜாபதி ஹிரண்ய கர்பன் என்று சொல்லப்படும் பிரமனும் திருமாலின் உந்தித் தாமரையில் பிறந்ததாக வேதங்களில் கூறப்படுவதால் அவனையும் பரம்பொருளாகப் பெரும்பாலோர் நினைப்பதில்லை. எஞ்சி நிற்கும் சிவனைப் பற்றியும் விஷ்ணுவைப் பற்றியுமே பரம் பொருள் யார் என்னும் விஷயத்தில் சங்ககாலத்திற்குப்பிறகு விவாதம் ஏற்பட்டது. வேதங்களில் பரம்பொருளை ருத்ரன் சிவன் முதலான நாமங்களாலும் குறித்திருப்பதைக் கொண்டு சிவனையே பரம் பொருளாகக் கருதும் சைவமதம் பிற்காலத்தில் வலுப்பெற்றது. தமிழ்நாட்டில் சங்ககாலம் வரையில் சிவனைப் பரம்பொருளாகக் கொண்ட சைவ மதம் தோன்றவில்லையென்பதும், களப்பிரர்கள் காலத்திலேயே அது தோன்றியது என்பதும் அறியத்தக்கது. வேதங்களில் படிக்கப்படும் கணக்கற்ற பெயர்களை சிவனுக்கு உரியதாக்குவதா விஷ்ணுவுக்குரியதாக்குவதா என்பதிலேயே பிற்காலத்தில் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. நாராயணன் என்னும் நாமம் பாணினியின் இலக்கண வழக்கின்படி வேறெந்த தெய்வத்துக்கும் ஆக்கமுடியாதென்பதையும், சிவனுக்குப்போல் நாராயணனுக்கு எந்தத்தாழ்வும் வேதங்களில் சொல்லப்பட வில்லை என்பதையும்; பண்டைக்காலத்திலிருந்த வால்மீகி, வியாசர், பராசரர் முதலிய இதிஹாஸபுராணம் எழுதியவர்களும், தமிழ்நாட்டில் சங்ககாலப் புலவர்களும் திருமாலையே பரம்பொருளாக முழங்கியிருக்கிறார்கள் என்பதையும் கொண்டு வைஷ்ணவர்கள் திருமாலே வேதங்களில் கூறப்படும் பரம் பொருள் என்று நிலை நாட்டினார்கள். சிவனுக்குப் பல தாழ்வுகள் வேதங்களில் கூறப்பட்டிருப்பதை மறுக்க இயலாமையால் மும்மூர்த்திகளில் ஒருவனான சிவனிலும் வேறுபட்ட பரமசிவன் என்று ஒன்றைக் கற்பித்து அவனையே பரம்பொருளாகக் கொண்டனர் சைவசித்தாந்திகள். மும்மூர்த்தி சிவனுக்கும் பரமசிவனுக்கும் வெவ்வேறு கோயில்கள் இல்லாத நிலையும் இருவருக்கும் ஒரே இலக்கணங்கள் அமைந்திருக்கும் நிலையும் பரமசிவன் என்பது ஒரு கற்பனையே என்று காட்டித்தருகிறது.

37. கேள்வி: வேதம் கடவுளால் தான் வெளிப்படுத்தப்பட்டது என்பதற்கு என்ன சான்று?

பதில்: வேதமே சான்று. அந்த வேதத்திலேயே பரம்பொருள் நான்முகனை முதலில் படைத்து அவனுக்கு வேதத்தை உபதேசித்தான் என்று முழங்கப்பட்டுள்ளது.

http://acharya.org

38. கேள்வி: கடவுளால் மொழியப்பட்டதால் வேதம் சான்றுடையதாகிறது. வேதம் கூறுவதால் கடவுள் இருக்கிறார் என்று விளங்குகிறது என்று கூறுவது ஒன்றையொன்று ஆச்ரயித்ததாய் வேலிக்கு ஓணான் சாட்சி என்பது போல் ஒரு தலைச்சார்பான சான்றாக இல்லையா?

பதில்: வேதங்கள் கடவுளால் மொழியப்பட்டவை என்று கூறுவதே தவறு. கடவுளைப் போல் வேதங்களும் நித்யமானவை என்பது முன்பே சொல்லப்பட்டது. ஆகவே ஒன்றையொன்று ஆச்ரயித்திருக்கிறது என்னும் குற்றம் இல்லை. உலகினர் உய்வதற்காக, தன்னாலும் இயற்றப்படாததாய், அனைவருக்கும் நன்மையைத் தெரிவிப்பதான வேதத்தை எப்போதும் தன் நினைவில் கொண்டிருந்து அவ்வப்போது அதை வெளிப்படுத்தி உலகினரை உய்வு பெறச்செய்கிறான் எம்பெருமானாகிற கடவுள். வேதம் பற்றிய இக் கருத்து நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது.

39. கேள்வி: வேதத்தைக் கடவுள் வெளிப்படுத்தியிருக்கும் போது மாறுபட்ட கருத்துக்களைக் கொண்ட பல மதங்கள் அந்த வேதத்தின் அடிப்படையிலேயே உண்டாகும்படி ஏன் செய்தார்? தெளிவாகக் கூறியிருக்கலாமே?

பதில்: மனிதர்கள் அநாதியான கர்மம் காரணமாகப் பற்பல நிலைகளில் இருக்கிறார்கள். அவர்கள் படிப்படியாக முன்னேறுவதற்குப் பல மதங்கள் அவசியம் என்பதால் அப்படி மாறுபட்ட கருத்துக்கள் உண்டாகும்படி வேதம் அமைந்திருக்கிறது.

40. கேள்வி: மகத்திற்கும் மகத்தாக, அணுவிற்கும் அணுவாக உள்ள பிரம்மம்(கடவுள்) ஒரு குறிப்பிட்ட வடிவத்துள் அடங்கியிருக்கிறார் என்று கூறுவது எப்படிப் பொருந்தும்? 'பரம்பொருள்' அர்ச்சை வடிவத்துள் எப்படி முழுமையாக இருக்கிறார்?

'எங்கும் பரந்த பரம்பொருள் ஒவ்வொரு அணுவிலும் நிறைவாகவே அடங்கியிருக்கிறார் என்று பரம்பொருளைக் கூறும் வேதம் ஓதுகிறது. இத்தகைய சக்தி பரம்பொருளுக்கே உரித்தானது என்று வேதவியாசர் பிரம்ம சூத்திரத்தில் ஒரு பிரிவில் கூறுகிறார். 'பரந்த தண்பரவையுள் நீர்தொறும் பரந்துளன் பரந்த அண்டமிது என [திருவாய் 1-1-10] (பெரிய கடலில் ஒவ்வொரு திவலையிலும் அண்டத்தில் வியாபித்திருப்பது போல் இறைவன் நிறைவாகவே வியாபித்திருக்கிறான்) என்று நம்மாழ்வாரும்

http://acharya.org

இதைக் கூறியிருக்கிறார். வேதத்தில் நம்பிக்கையை அடிப்படை யாகக் கொண்டது இது.

41. கேள்வி : இந்த உலகம் படைக்கப்பட்ட ஒன்றுதான் என்பதற்கும் கடவுளால் படைக்கப்பட்டது என்பதற்கும் என்ன சான்று?

பதில்: வேதம் தான் சான்று.

42. கேள்வி : ஜீவர்கள் வினைகளை (புண்ய பாபங்களைத்) தீர்த்துக்கொள்ள ஒரு கர்ம பூமியாக உலகம் படைக்கப்பட்டது என்று கூறலாமா?

பதில் : இது சரியல்ல. ஜீவர்களும் அநாதி, கர்மமும் அநாதி, உலகப்படைப்பும் மீண்டும் மீண்டும் அநாதி காலமாக இறைவனால் செய்யப்படுகிறது. இதில் இறைவனுக்குப் பயன் என்னவெனில் - சில மனிதர்களாவது உண்மையை உணர்ந்து தன்னையடைந்து பேரின்ப வாழ்ச்சி பெறலாம் என்பதே முக்கியமான பயன். ஆனால் பெரும்பாலான ஜீவர்கள் விஷயத்தில் அவர்கள் செய்திருக்கும் தீவினைகள் காரணமாக இறைவனை அடைவதில் விருப்பமே உண்டாவதில்லையாகையால் அவர்கள் விஷயத்தில் இறைவனுக்கு (தன்னையடைவதாகிற) இப்பயன் கிடைப்பதில்லை. ஆகையால் பெரும்பாலான ஜீவர்கள் விஷயத்தில் இறைவனுடைய படைப்பிற்கு லீலையாகிற விளையாட்டு ஒன்றே பயனாக அமைகிறது.

43. கேள்வி : இறைவனுக்கு லீலை ஜீவர்களுக்குத் துன்பம். இது நரிக்குக் கொண்டாட்டம் நண்டுக்குத் திண்டாட்டம் என்பது போல் இல்லையா?

பதில்: ஜீவர்கள் இவ்வுலகத்தில் படும் துன்பங்களைக்கண்டு இன்பமடைவதே இறைவனுக்கு விளையாட்டு என்று கொள்வதில்லை. 'நாம் இவர்களுக்கு உடல்களையும் புலன் களையும் கொடுத்து இம்மனிதர்கள் திருந்தி நம்மையடைவார்கள் என்று எண்ணி இவர்களைப் படைத்தோம். ஆனால் அந்த உடல்களையும் புலன்களையும் கொண்டே எதையெதையோ விரும்பி அவற்றை அடைந்து நம்மை விட்டுவிலகிச் செல்கிறார்களே' என்று இறைவன் ஆச்சரியப்பட்டுச் சிரிக்கிறான். இதுவே அவனுக்கு லீலை எனப்படுகிறது. எப்போதாவது ஒரு சில ஞானிகள் அவனுக்குக் கிடைப்பதால் அவன் இப்படைப்புத் தொழிலை விடாமல் செய்து கொண்டேயிருக்கிறான்.

**44. கேள்வி : இறைவனின் லீலை என்பதும் ஜீவனின் வினை என்பதும் ஒன்றே என்னலாமா?**

**பதில்: லீலை என்பது படைப்பினால் இறைவனுக்கு ஏற்படும் பயன். வினை என்பது தான் செய்யும் செயல்களால் ஜீவன் அடையும் பயன். இவையிரண்டும் மிகவும் வேறுபட்டவை.**

**45. கேள்வி : இறைவன் அனைத்துக்கும் காரணமாயிருப்பவன் என்று சொல்லப்படுகிறது. 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்றும் கூறுகிறீர்கள். அப்படியானால் நாம் செய்யும் நல்வினை தீவினைகளுக்கும் அவனே காரணமாயிருப்பவன் என்று ஏற்படுகிறது. இறைவன் ஒரு மனிதனை நல்வினையைச் செய்யும்படி தூண்டிவிட்டு அந்தப் புண்ணியத்துக்குப் பலனாக அவனுக்கு இன்பத்தைக் கொடுப்பதும், மற்றொரு மனிதனைத் தீவினையைச் செய்யும்படி தூண்டிவிட்டு அந்தப் பாபத்துக்குப் பலனாக அவனுக்குத் துன்பத்தைக் கொடுப்பதும் எப்படி நியாயமாகும்? இறைவன் கருணையில்லாதவன் பக்ஷபாதம் (ஒரு தலைச்சார்பு) உள்ளவன் என்றல்லவோ தேறும்?**

பதில் : வேதவியாசர் தம்முடைய பிரம்ம சூத்திரத்தில் 'பராயத்தாதிகரணம்' என்னும் பிரிவில் இதற்கான விடையை அளித்துள்ளார். அதாவது-இறைவன் மனிதனுக்குத் தான் விரும்பியபடி செயல்புரிவதற்கு உடலையும் புலன்களையும் அளித்திருக்கிறான். 'நல்ல செயல் எது தீய செயல் எது என்பதைச் சாத்திரங்களில் காட்டியிருக்கிறான். இப்படி இறைவன் அளித்த பகுத்தறிவைக் கொண்டு ஜீவன் ஒரு நல்ல செயலையோ தீய செயலையோ தொடங்கும் போது இறைவன் அவனைத் தூண்டுவதில்லை. நல்ல செயலைத் தொடங்கினால் அதன் பயனாக மேலே மேலே அவனைத் தூண்டுகிறான். கெட்ட செயலைத் தொடங்கினால், 'நாம் நல்லது எது கெட்டது எது என்று காட்டியிருந்தும் இவன் தீய செயலைப் புரிகிறான். இவன் வழியிலேயே இவன் செல்லட்டும். பின்னால் இவனைத் தண்டனை கொடுத்துத் திருத்துவோம்' என்று தான் தலையிடாமலே இருந்து விடுகிறான். இறைவன் தனக்குக் கருணையின்மையும் ஒரு தலைச் சார்பும் நேராமலிருப்பதற்காக இத்தகைய சுதந்திரத்தைத் தானே ஜீவனுக்குக் கொடுத்திருக்கிறானகையாலே இறைவன் அனைத்துக்கும் காரணமாகிறான் என்னும் கொள்கைக்கும் குறையொன்றுமில்லை.

http://acharya.org

46. கேள்வி : ஜீவர்களுக்கு நல்ல செயல்களையோ தீய செயல்களையோ புரிவதாகிற புண்யபாப கர்மங்கள் படைப்பின் போதே தொடங்குகிறதா?

பதில்: ஜீவன் அநாதி. அவன் செய்திருக்கும் புண்யபாபங்களாகிற கர்மங்களும் 'இப்போதுதான் தொடங்கிற்று' என்று சொல்ல இயலாது. பத்தி உழவனுகிய (பக்தியாகிற பயிரை விளைப்பவனுகிற) இறைவன் ஜீவனைத்திருத்துவதற்காக ஜீவர்களடங்கிய இவ்வுலகை உண்டாக்கிப் பலகாலம் நடத்தி, மறுபடியும் தன்னுள் ஒடுக்குவதாகிற செயலை அநாதி காலமாக மீண்டும், மீண்டும் செய்து வருகிறுன். ஒரு விவசாயி தனக்குக் கண்டு முதல் குறைவாகக் கிடைத்தாலும் மிகுதியாகக் கிடைத்தாலும் தளராமல் மறுபடியும் மறுபடியும் பயிர் செய்வது போன்றது இது. "ஒன்றி ஒன்றி உலகம் படைத்தான்". (திருவாய்மொழி 3-9-10) "சோம்பாது இப்பல்லுருவையெல்லாம் படர்வித்த வித்தா" (பெரிய திருவந்தாதி -18) என்று நம்மாழ்வார் இவ்விஷயத்தை அருளியிருக்கிறுர். ஆகையால் ஜீவர்களுக்குக் கர்மங்கள் ஒரு காலத்தில் தொடங்குகின்றன என்னும் நிலையே இல்லை. ஒவ்வொரு ஜீவனும் அநாதி காலமாக எண்ண முடியாத கர்மங்களோடு கூடவே பிறப்பெடுக்கிறுன். அக்கர்மங்களில் பெரும்பகுதியைப் பிற்காலத்தில் பயனளிக்கக் கூடியவையாக ஒதுக்கி வைத்துவிட்டு, இறைவன் ஒரு சிறு பகுதிக்குப் பலனுக ஒவ்வொரு பிறவியைக் கொடுக்கிறுன். இப்படிக் கர்மங்களை அநுபவித்துக் கழிப்பதற்காக எடுக்கப்படும் ஒவ்வொரு பிறவியிலும் மனிதன், மேன்மேலும் அவற்றைச் செய்து அவற்றை வளர்த்துக்கொண்டே போகிறுன். பகுத்தறிவு படைத்த மனிதனுக்கு மட்டுமே இந்நிலை. பாபங்களைப் பிறவி யெடுத்துக் கழிப்பதற்காகவே பிறந்திருக்கும், பகுத்தறிவற்ற விலங்குகளுக்கும் தாவரங்களுக்கும் மேலும் மேலும் கர்மங்களைச் சேர்த்துக்கொண்டு போகும் நிலையில்லை ஆகையால் ஜீவனுக்குக் கர்மம் தொடங்கும் காலம் என்று ஒன்று கிடையாது.

47. கேள்வி: கருணை மிக்க இறைவன் துன்பம் மிக்க உலகைப் படைத்து ஜீவர்களைத் துன்புறுத்துவதேன்?

பதில்: அநாதி காலமாயிருக்கும் ஜீவர்கள் இன்பத்தையோ, துன்பத்தையோ அடைவது அவர்கள் செய்திருக்கும் நல்வினை தீவினைகளாகிற செயல்களாலேயேயொழிய இறைவனுலே அல்ல. இறைவன் தன்னுடைய பரம கருணையினுல் மறுபடியும் மறுபடியும் உலகைப்படைத்து ஜீவர்கள் தம் துன்பங்களிலிருந்து

http://acharya.org

விடுபடுவதற்கு வழிவகுக்கிறுணுகையால் அவனுடைய கருணைக்கு எக்குறைவுமில்லை.

48. கேள்வி: வைகுண்டத்தில் வாயில் காப்பவர்களான ஜயவிஜயர்களாகிய நித்ய ஸூரிகள் ஸநகர் ஸநந்தனர் ஸனத்குமாரர்களாகிய ரிஷிகளைத் தடுத்ததால் அவர்களால் சபிக்கப்பெற்று மூன்று பிறவிகளில் ஹிரண்யாக்ஷ ஹிரண்யகசிபுக்களாகவும், ராவண கும்பகர்ணர்களாகவும், சிசுபால தந்தவக்கிரர்களாகவும் இறைவனுக்குப் பரம விரோதிகளாகப் பிறவியெடுத்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. தமோகுணம் நடையாடாத பரமபதத்தில் இது எப்படி நடக்கமுடியும்? நித்யஸூரிகளுக்கு எப்படி சாபம் ஏற்பட்டு அவர்கள் விரோதிகளாகப் பிறக்கமுடியும்?

பதில்: இது நடந்த இடம் பரமபதமல்ல. இவ்வுலகிலுள்ள எவரும் பரமபதத்திற்குப் போகவும் முடியாது. அங்கு சென்றவர்கள் திரும்பி வரவும் இயலாது. ஆகையால் இது நடந்த இடம் இவ்வுலகத்திற்குள் திருப்பாற்கடல் போலே இறைவன் எழுந்தருளியிருக்கும் இடங்களில் ஒன்றென்றே கொள்ள வேண்டும். இதைக் 'காரிய வைகுண்டம்' என்று சொல்லுவார்கள். அங்கு வாயிற்காப்பவர்களாக இருந்தவர்களும் சாபத்திற்கு இலக்கானவர்களாகையாலும் பரம விரோதிகளாகப் பிறந்தவர்களாகையாலும் நித்யஸூரிகளான ஜய விஜயர்களின் அம்சம் பெற்ற ஜீவர்களே என்று கொள்ள வேண்டும்.

49. கேள்வி: திருக்குறள், மனிதர்களை ஒன்று சேர்க்க நினைத்துத் திருவள்ளுவரால் சொல்லப்பட்டது; ஸ்ரீமத் பகவத் கீதை மனிதர்களை வர்ணாசிரம தர்மத்தைக் கூறிப் பிரிக்கிறது என்று சிலர் கூறுவதற்குத் தங்களின் பதில் என்ன?

பதில்: திருக்குறள் இவ்வுலகில் மனிதன் வாழ்வதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய நீதிகளைச் சொல்லும் நூல். ஸ்ரீமத் பகவத் கீதை அத்துடன், மனிதன் உலகத் துன்பங்களிலிருந்து விடுபட்டு மோட்சமடையும் வழிகளையும் கூறும் நூல். ஆகையால் மனிதர்களை ஒன்று சேர்க்க நினைத்துத் திருக்குறள் பாடப்பட்டதாகவும், மனிதர்களைப் பிரிப்பதற்காக பகவத் கீதை அவதரித்ததாகவும் கூறுவது அடிப்படையிலேயே தவருனது. வர்ணாசிரம தர்மத்தின் அடிப்படையில் மனிதகுலம் அமைந்திருக்கிறதை ஸ்ரீமத் பகவத் கீதை கூறுகிறதேயொழிய,

http://acharya.org

வர்ணாசிரம தர்ம அடிப்படையில் மனிதர்களைப் பிரிக்கிறது கீதை என்று கூறுவதும் தவறு.

50. கேள்வி: வர்ணாசிரம தர்மம் மனிதகுல மேம்பாட்டிற்காக ஏற்பட்டது என்பது எப்படி உண்மையாகும்?

பதில்: இங்கிலாந்து தேசத்தில் சென்ற நூற்றாண்டில் டாக்டர். ஜான்சன் என்னும் பேரறிவாளர் ஒருவர் வாழ்ந்தார். அவருடைய சீடரான பாஸ்வெல் என்பவர் அவருடைய சரிதத்தை எழுதினார். BASSWELL'S "LIFE OF JOHNSON" என்று அந்நூல் இன்றும் அனைவராலும் கொண்டாடப்படுகிறது. அதில் பாஸ்வெல், "இந்தியாவில் நிலவி வரும் நாலு வர்ணங்களைப்பற்றிய உங்கள் கருத்தென்ன ?" என்று கேட்டதாகவும், அதற்கு ஜான்சன், "குதிரை நாய் முதலான விலங்குகளிலும், மரங்கள் செடிகள் முதலான தாவரங்களிலும் உயர்ந்த ஜாதிகளும் தாழ்ந்த ஜாதிகளும் இருப்பதைக் காண்கிறோம்; மனிதர்களிலும் அப்படி ஜாதிகள் இருப்பதாகக் கொள்வதில் தவறில்லை. நாய்களில் Mastiff என்னும் இனம் மிக உயர்ந்ததாயிருப்பது போல மனித குலத்தில் பிராம்மணன் மிக உயர்ந்த ஜாதியாய் இருக்கிறான். (Brahmin is the Mastiff of Mankind)" என்று பதில் கூறியதாகவும் உள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில் பிராம்மணன் இருந்த நிலை இது. பல காரணங்களால் பிராம்மண சமூகம் தன் பெருமைகளை இழந்து நிற்கும் இன்று இதுபற்றிச் சர்ச்சை செய்வது பயனற்றது.

51. கேள்வி: நம்மாழ்வாரின் காலம் முற்பட்டதா? திருவள்ளுவரின் காலம் முற்பட்டதா? நம்மாழ்வாரின் அருளிச்செயலுக்கும், திருவள்ளுவரின் திருக்குறளுக்கும் உள்ள ஒற்றுமையைக் கூறுங்களேன்?

பதில்: திருவள்ளுவரின் காலமே முற்பட்டது. நம்மாழ்வார் அவருக்கு ஒரு சில நூற்றாண்டுகள் பிற்பட்டவர். ஒரு சில ஒற்றுமைகளைக் கூறுகிறேன். திருவள்ளுவர் தம் நூலைத் தொடங்கும்போதே "ஆதி பகவன்" என்று திருமாலுக்கேயுரிய "பகவன்" என்னும் சொல்லாலே பரம் பொருளைக் குறித்தார். நம்மாழ்வார் இதையே "கணக்கறு நலத்தனன் அந்தமில் ஆதிஅம் பகவன்" (திருவாய்மொழி 1– 3– 5) என்று விளக்குகிறார். திருவள்ளுவர் தம் கடவுள் வாழ்த்தில் பரம் பொருளை "அறவாழி அந்தணன்" (8) என்று குறிப்பிடுகிறார். நம்மாழ்வார் "அறவனை ஆழிப்படை அந்தணனை" (திருவாய்மொழி 1– 7– 1)என்று

http://acharya.org

அதை விளக்குகிறார். திருவள்ளுவர் பரம் பொருளை "வேண்டுதல் வேண்டாமையிலான் " (4) என்கிறார். நம்மாழ்வார் அதையே "கொள்கை கொளாமை இலாதான் – எள்கல் இராகம் இலாதான்"(திருவாய்மொழி 1– 6– 5) என்று விளக்குகிறார். திருவள்ளுவர் பரம்பொருளைத் "தனக்குவமை இல்லாதான்" (7) என்கிறார். நம்மாழ்வார் இதையே "ஒத்தார் மிக்காரை இலையாய மாமாயா" (திருவாய்மொழி 2– 3– 2) என்று விளக்குகிறார். திருவள்ளுவர் "படியளந்தான்" (610) என்று திருமால் உலகளந்த வரலாற்றைப் பேசுகிறார். நம்மாழ்வார், "இப்படி தான் நீண்டுதாவிய அசைவோ?" (திருவாய்மொழி 8– 3– 5) என்னும் பாசுரத்திலும், மற்றும் பலபல பாட்டல்களிலும் இவ்வரலாற்றை விளக்குகிறார். திருவள்ளுவர் திருக்குறளில் பரம் பொருளைத் "தாமரைக் கண்ணான்'' (1103) என்று குறிப்பிடுகிறார். நம்மாழ்வார் நூற்றுக்கணக்கான பாசுரங்களில் தாமரைக் கண்ணனாகப் பரம்பொருளைப் பாடியுள்ளார். "தாமரைக் கண்ணனை விண்ணோர் பரவும் தலைமகனை" (திருவாய்மொழி 2– 6– 3) முதலான பலபாடல்களில் அதை விளக்குகிறார். இப்படி மற்றும் பலவும் உண்டு.

52. கேள்வி: பாலேய் தமிழர்களான பன்னிரு ஆழ்வார்களில் எத்தனை பேர்கள் பிராம்மணர்? எத்தனை பேர்கள் பிற குலத்தார்?

பதில்: விஷ்ணுசித்தர் எனப்படும் பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப் பொடியாழ்வார், மதுரகவியாழ்வார் ஆகிய நால்வரும் அந்தணர் குலத்தில் அவதரித்தவர்கள். குலசேகராழ்வார் அரசர் குலத்திலும், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோர் அந்தணர் அரசரல்லாத குலங்களிலும், திருப்பாணாழ்வார் இராமானுஜரால் 'திருக்குலத்தார்' என்று கொண்டாடப்பட்ட ஐந்தாம் குலத்திலும் அவதரித்தவர்கள்.

53. கேள்வி: "சங்கத்தமிழர் சமயம் வைணவமே' என்பதைச் சிறிது விளக்குங்கள்.

பதில்: இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட எட்டுத்தொகை பத்துப்பாட்டு என்னும் சங்கநூல்களில், குறிப்பாக, கடவுள் வாழ்த்துக்கள் நிறைந்த பரிபாடலில் திருமால், சிவன், முருகன் காடுகாள் எனப்படும் சக்தி, இந்திரன், வருணன் முதலான பல தெய்வங்களைப் பற்றிய பல செய்திகள்

http://acharya.org

வருகின்றன. இவற்றில் அனைத்துலகையும் படைத்துக் காத்துத் தன்னுள் ஒடுக்குகை, எல்லா நற்குணங்களும் நிரம்பப்பெற்றுத் தாழ்ந்த குணங்கள் இல்லாமலிருக்கை, வீடு பேறளிக்க வல்லவனுயிருக்கை முதலான பரம்பொருளுக்கேயுரிய பெருமைகள் திருமால் ஒருவருக்கே சொல்லப்பட்டுள்ளன. மற்ற எந்த தெய்வத்திற்கும் இப்பெருமைகள் சொல்லப்படவில்லை. பிற்கால நூல்களில் திருமாலுக்குச் சொல்லப்படும் தாழ்வுகள் சங்கநூல்களில் காணப்படவில்லை. மற்ற தெய்வங்களுக்குப் பல தாழ்வுகள் சங்கநூல்களில் சொல்லப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து சங்ககாலத்தில் திருமாலையே பரம்பொருளாகக் கொண்ட வைணவமதமே நிலவி வந்தது என்பது தெளிவாகிறது. இவற்றை 'சங்க காலத்தமிழர் சமயம்', 'சாதிமத ஆராய்ச்சி' முதலான நூல்களில் விரிவாக விளக்கியுள்ளேன்.

54. கேள்வி: மூன்று வைதிக ஆசார்யர்களுள் இராமானுசர் தமிழராக இருந்தும், "தமிழ் தமிழ்" என்போர் அவரைக் கண்டு கொண்டதாய்த் தெரியவில்லையே; ஏன்?

பதில்: மூவரில் இராமானுசர் மட்டுமே தமிழகத்தில் அவதரித்தவர். ஆனாலும் அவர் தமிழ் வேதம் வடமொழி வேதம் இரண்டையும் ஆதாரமாகக் கொண்டு வடமொழியிலேயே வைதிக மதத்தை விளக்கி நிறுவினார். நம் நாட்டில் வடமொழி வெறுப்பு பல வருடங்களாகப் பரவிவிட்டது என்பது வருந்தத்தக்க நிலை. அத்துடன் இந்நாட்டில் பெரும்பான்மையினருக்குக் கசப்பாயிருக்கும் உண்மையான திருமாலின் முழு முதன்மையை அவர் நிலை நாட்டினார். இக்காரணங்களால் "தமிழ் தமிழ்" என்போர் அவரைக் கண்டு கொள்வதில்லை.

55. கேள்வி: கோயில்களில் தமிழைக் குடியேற்றியது வைஷ்ணவம் என்ற கருத்தை விளக்கவும்.

பதில்: இராமானுசருக்குப் பல்லாயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பிருந்தே விஷ்ணுகோயில்களில் பாஞ்சராத்ரம் வைகாநஸம் என்னும் வடமொழி ஆகமங்களில் சொல்லப்பட்ட முறையிலேயே வழிபாடுகள் நடைபெற்று வந்தன. வடமொழி வேதங்களுக்கு இணையாகத் தமிழ் வேதங்களான திவ்யப்ரபந்தங்களும் விஷ்ணுகோயில்களில் ஓதப்படவேண்டும் என்னும் நடைமுறையை ஸ்ரீராமாநுஜர் ஏற்படுத்தினார். வைகுண்ட ஏகாதசியை நடுவாகக் கொண்ட இருபதுநாட்களில் நாலாயிரதிவ்யப்ரபந்தங்களை எம்பெருமான் கேட்பதற்காகவே

http://acharya.org

அத்யயன உத்ஸவத்தை ஆண்டுதோறும் விஷ்ணு கோயில்களில் கொண்டாடுமாறு ஏற்பாடு செய்தவர் ஸ்ரீராமாநுஜர். அந்த நடைமுறை இன்று வரை நடந்து வருவதால் கோயில்களில் தமிழைக்குடியேற்றியது வைஷ்ணவமே என்பது தவறல்ல.

56. கேள்வி: இராமாநுசரின் தமிழார்வத்தைப்பற்றிக் கூறவும்.

பதில்: இராமாநுசர் காலத்தில் வாழ்ந்திருந்த திருவரங்கத்த முதனார் அவரைப்பற்றிப் பாடிய இராமாநுச நூற்றந்தாதியில், "சொல்லார் தமிழொரு மூன்றும், சுருதிகள் நான்கும் எல்லையில்லா அறநெறி யாவும் தெரிந்தவன்" (44ம் பாட்டு) என்று, வடமொழி வேதங்களுக்கு முன்பாக இயல் இசைநாடகம் ஆகிய முத்தமிழில் அவரது வல்லமையைக் குறிப்பிட்டுள்ளார். இதைக் காட்டிலும் இராமாநுசருடைய தமிழார்வத்தை விளக்குவதற்கு வேறு சான்று தேவையில்லை. இராமாநுசரின் திவ்யாஜ்ஞையால் விஷ்ணு கோயில்களில் அறையர் ஸேவை, அத்யாபகர்கள் ஸேவை முதலானவற்றில் முத்தமிழும் மணம் வீசுவதை இன்றும் காணலாம்.

57. கேள்வி: இராமாநுசரின் மனிதநேயத்தைப் பற்றிக் கூறுங்கள்.

பதில்: இராமாநுசருக்கு முற்பட்ட காலம் வரையில் அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நாலு வர்ணங்களில் முன்வர்ணத்தைக் காட்டிலும் பின்வர்ணம் தாழ்ந்ததாகவே கருதப்பட்டு வந்தது. ஸ்ம்ருதிகளில் இக்கொள்கை வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அந்தணர்களில் ஒரு பிரிவினர் ஸ்ம்ருதிக்கே முக்கியத்துவம் கொடுத்து இக்கருத்தை இன்றளவும் கொண்டுள்ளதாலே ஸ்மார்த்தர்கள் எனப்படுகின்றனர். வர்ணத்தையிட்டு ஏற்றத்தாழ்வுகளைக் கூறும் ஸ்ம்ருதிகளாகிற பொதுவிதிக்கு விலக்கைக்காட்டும் வைஷ்ணவ சாஸ்திரங்களை எடுத்துக்காட்டி, ஒருவன் விஷ்ணு பக்தனாகிவிட்டால்அவனுக்கு வர்ணத்தையிட்டு வரும் தாழ்வுகள் நீங்கி அவன் தொண்டக்குலம் என்னும் உயர்குலத்தவனாகிவிடுகிறான் என்று நிலைநாட்டினார் இராமாநுசர். அதைத் தம் அநுஷ்டானத்திலும் காட்டினார். நாலாவது வர்ணத்தைச் சேர்ந்த பிள்ளையுறங்கா வில்லிதாசரைப் பிடித்துக் கொண்டே அவர் நீராடியபின் மடத்துக்குத் திரும்பினார் என்பது முதலான வரலாறுகள் இதை மெய்ப்பிக்கின்றன. "குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழிழிந்து – எத்தனை நலந்தானிலாத சண்டாள சண்டாளர்களாகிலும் – வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற்காளென்று உள் கலந்தார்,

http://acharya.org

அடியார் தம் அடியார் எம் அடிகளே" (திருவாய்மொழி 3– 7– 9) என்று நம்மாழ்வார் அருளிச் செய்ததைப் பின்பற்றி அவருடைய திருவடியாகக் கருதப்படும் இராமாநுசர் பஞ்சமர்களுக்குத் 'திருக்குலத்தார் ' என்று பெயரிட்டதும், மேல்கோட்டை திருநாராயணபுரத்தில் கோயிலுக்குள் அக்காலத்திலேயே வழிபட அவர்களுக்கு அனுமதி வழங்கியதும் இராமாநுசருடைய மனிதநேயத்தைப் பறைசாற்றுகின்றன.

58. கேள்வி: 'உபயவேதாந்தி' என்றால் என்ன?

பதில்: இராமாநுசர் அவதரித்த காலத்தில் வடமொழி வேதாந்தம் ஒன்றையே பற்றி நின்ற சங்கரரின் அத்வைத வேதாந்தமே மிகவும் பரவியிருந்தது. வடமொழி வேதாந்தத்திற்கு இணையானதொரு இடத்தை நாலாயிரதிவ்யப்ரபந்தங்களாகிற தமிழ் வேதாந்தத்திற்கும் கொடுத்து, "சங்க காலத்தமிழர் சமய"மான வைணவத்தை வடமொழி வேதம் தென்மொழி வேதம் ஆகிய இருமொழி வேதங்களின் அடிப்படையில் அமைத்தார் இராமாநுசர். வடமொழி வேதம், தமிழ் வேதம் ஆகிய இரண்டு வேதங்களுக்கும் இணையான மதிப்புக் கொடுப்பதாலே இராமாநுசனடியார்கள் 'உபயவேதாந்திகள்' எனப்படுகின்றனர்.

59. கேள்வி: வடகலைதென்கலைப் பிரிவு எதனால் ஏற்பட்டது. அதுபற்றி எமது வாசகர்களுக்கு விளக்குங்களேன்?

பதில்: வேதாந்த தேசிகரை அடுத்துத் தோன்றிய மணவாள மாமுனிகள் வாழ்ந்த கி.பி.பதினைந்தாம் நூற்றாண்டு வரையில் வைணவர்களிடையே இப்பிரிவுகள் இல்லை. அக்காலம் வரையில் இராமாநுசனடியார்களிடையே திருமண் காப்பில் வேறுபாடு இருந்ததற்கு எந்த நூலிலும் ஆதாரம் இல்லை. இராமாநுசர், பட்டர் முதலான ஆசாரியர்கள் யஜ்ஞ மூர்த்தி, வேதாந்தி ஆகிய அத்வைதிகளை வாதம் செய்து வென்று விசிஷ்டாத்வைதிகளாகத் திருத்தியபோது அவர்கள் தங்கள் உறவு முறைகள் அனைத்தையும் விட்டு சந்நியாசிகளாகி முறையே அருளாளப் பெருமாள் எம்பெருமானார் என்றும் நஞ்ஜீயர் என்றும் பெயர் பெற்று வைணவத்திற்குப் பெருந்தொண்டு புரிந்தனர். பட்டர் காலம் வரையில் திருந்திய அத்வைதிகள் ஸ்மார்த்த சமூகத்திலிருந்து பிரிந்து வந்துவிட்டார்களாகையாலே அவர்களாலே பிரச்சினைகள் ஏதும் ஏற்படவில்லை. ஸ்ரீவேதாந்த தேசிகர் தம் காலத்தில் பல்லாயிரக்கணக்கான ஸ்மார்த்தர்களை வாதம் செய்து அத்வைத மதத்திலிருந்து விசிஷ்டாத்வைத

மதத்திற்குத் திருத்தினர். அவர்களனைவரும் தத்தம் உறவு முறைகளை விட்டுவர இயலவில்லை. ஆகையால் அவர்களால் ஸ்மார்த்தர்கள் கடைப்பிடித்து வந்த பல ஆசாரங்களை விட இயலவில்லை. உதாரணம் : வடமொழி வேதத்திற்கும் ஸ்மிருதிகளுக்கும் தமிழ் வேதத்தைக் காட்டிலும் முக்கியத்துவம் கொடுப்பது, பல முறை ஸேவிப்பது, விதவைகள் தலையை மழித்துக்கொள்வது முதலானவை. இவர்களும் தாங்கள் ஸ்மார்த்தர்களாயிருந்தபோது தரித்திருந்த வடிவிலேயே வெள்ளைத் திருமண்காப்பையும் நடுவில் ஸ்ரீ சூர்ணத்தையும் தரித்துக்கொண்டு வாழத்தொடங்கினார்கள். வேதாந்த தேசிகரையே தங்களுடைய முக்கிய ஆசாரியராகக் கொண்டார்கள். இவர்களுடைய பரம்பரையே 'வடகலை' சமூகமாக வளர்ந்தது. தமிழ் வேதத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தவர்கள் 'தென்கலையினர்' எனப்பட்டனர். பூர்வாசார்யர்கள் காலத்திற்குப்பின்பே இப்பிரிவுகள் இவ்வண்ணமாக ஏற்பட்டிருக்க வேண்டும்.

60. கேள்வி: காபாலிகம், காளாமுகம் என்ற இரு சைவப் பிரிவுகளுக்குள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்ளாமல் ஆளவந்தாரும், இராமாநுசரும் எழுதியிருப்பதாக, 'இரு சைவப் பிரிவுகள்' என்னும் ஆங்கில நூலில் படித்தேன். இதன் உண்மை என்ன? ஸ்ரீ பாஷ்யம் இரண்டாம் அத்தியாயம் இரண்டாம் பாதம் 35– 37 சூத்திரங்களில் கூறப்பட்டுள்ளது என்ன? இதே சூத்திரங்களுக்கு ஆதிசங்கரர் தம் பாஷ்யத்தில் கூறியுள்ளது என்ன?

பதில்: இராமாநுசர் 'பசுபத்யதிகரணம்' (பிரம்ம சூத்ரம் 2– 2– 35,36,37) எனப்படும் பிரம்ம சூத்ரப் பிரிவில் பின் வரும் பொருளுள்ள வாக்கியங்களை எழுதியிருக்கிறார்: "இந்த அதிகரணத்தில் பசுபதியாகிய சிவனைப் பரம்பொருளாகக் கூறும் மதம் வேதத்தோடு முரண்பட்டிருக்கையாலும், முன்னுக்குப்பின் முரணாயிருக்கையாலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்று சொல்லப்படுகிறது. அந்த மதத்தைப் பின்பற்றியவர்கள் 1.காபாலர்கள் 2.காளாமுகர்கள் 3.பாசுபதர்கள் 4.சைவர்கள் என்று நாலுவகைப்பட்டவர்கள். இந்த நால்வருமே வேதத்தோடு முரண்பட்ட தத்துவங்களின் (உண்மைப்பொருள்களின்) கணக்கையும், இம்மை மறுமை நலன்களைப் பெறுவதற்கு வழிகளையும் கற்பிக்கின்றனர். வேதத்திற்கு முரணாக 'இவ்வுலகத்திற்கு நிமித்த காரணமும் உபாதாந காரணமும் வேறு'

http://www.acharya.org

என்றும், 'நிமித்த காரணமாக மட்டும் உள்ளவன் பசுபதி' என்றும் கூறுகிறார்கள். 'ஆறு முத்திரைகளைத் தரிப்பதே மோக்ஷத்திற்கு சாதநம்' என்றும் கூறுகிறார்கள். காபாலிகர்களின் ஆகமத்தில், (1)கண்டிகை 2)ருசகம்(இவையிரண்டும் கழுத்தில் அணியும் ஆபரணங்கள்) 3) குண்டலம் 4)தலையிலணியும் சிகாமணி 5) பஸ்மம் 6)பூணூல் ஆகியவை ஆறு முத்திரைகள் என்று சொல்லப்படுகின்றன. ஆறு முத்திரைகளின் தத்துவத்தை அறிந்தவனாய், பரமுத்திரையில் வல்லவனாய், (ஆண் அல்லது பெண்) குறியாகிற ஆசனத்தில் இருப்பவனாகத் தன்னை தியானிப்பவன் மோக்ஷமடைகிறான். இந்த ஆறுமுத்திரை களையும் தரிப்பவன் மறுபடியும் இங்கு பிறப்பதில்லை' என்று கூறப்பட்டுள்ளது. காளாமுகர்களும் மனித மண்டையோடாகிற பாத்திரத்தில் புசிப்பது, பிணத்தை எரித்த சாம்பலில் குளிப்பது, அதை உட்கொள்ளுவது, கள்குடத்தை ஸ்தாபித்து அதில் சிவனைப் பூசிப்பது முதலானவற்றை இம்மை மறுமைப் பலன்களனைத்துக்கும் சாதனமாகக் கூறுகின்றனர். உருத்திராட்ச கங்கணம், தலையில் சடை, மனித மண்டையோட்டுப் பாத்திரம், சாம்பலில் குளிப்பது ஆகியவை சைவாகமங்களில் கூறப்பட்டிருப்பது பிரசித்தம்". இவ்வளவும் இராமாநுசர்அருளிய ஸ்ரீ பாஷ்யத்தில் முற்கூறிய அதிகரணத்திலுள்ளது. ஆளவந்தாரும் தம்முடைய ஆகமப்ரமாண்யத்தில் இவ்வண்ணமாகவே எழுதியிருக்கிறார். மகேந்திர பல்லவன் எழுதிய 'மத்தவிலாஸ ப்ரஹஸநம்' என்னும் நாடகத்திலும் அவ்வரசன் காலத்திலேயே காபாலிகர்கள் முதலானவர்களுக்கு இத்தகைய ஒழுக்கங்கள் இருந்தன என்று பொறித்து வைக்கப்பட்டுள்ளது. அக்காலத்தைப் பின்னணியாகக் கொண்டு 'கல்கி' எழுதிய சிவகாமியின் சபதம் என்னும் நாவலிலும் காபாலிகர்களுக்கு இத்தகைய ஒழுக்கங்கள் இருந்ததாகச் சொல்லப்பட்டுள்ளதைக் காணலாம். ஆதி சங்கரரும் இவ்வதிகரணத்தின் பாஷ்யத்தில் காபாலர் காளாமுகர்களுக்கு இத்தகைய ஒழுக்கங்கள் இருந்ததைக் குறிப்பிடுகிறார். ஆகையால் "ஆளவந்தாரும் இராமாநுசரும் புரிந்து கொள்ளாமல் எழுதினர்" என்பது தவறு.

61. கேள்வி: இராமேசுவரத்தில் இராமன் லிங்கப் பிரதிஷ்டை செய்தார் என்னும் கதைக்கு இராமாயணங்களில் ஆதாரம் உண்டா?

பதில்: வால்மீகி ராமாயணம், கம்பராமாயணம் முதலான புகழ்பெற்ற ராமாயணங்களில் எந்த ஆதாரமுமில்லை. இதுபற்றி

http://acharya.org

எனது நண்பரும் ராமேசுவரம் தேவஸ்தான வக்கீலுமான இராமநாதபுரம் திரு. சடகோபன் அவர்கள் எழுதிய 'ராமலிங்கப் பிரதிஷ்டை' என்னும் நூலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

62. கேள்வி: ஆதிசங்கரர் ஒப்புக்கொண்ட சகுணப் பிரம்மம் யார்? அவர் ஆறுமதங்களை ஸ்தாபித்தார் என்று கூறுவது உண்மையா?

ஆதிசங்கரருடைய நூல்கள் என்று அனைவரும் ஒப்புக்கொள்ளக்கூடியவை அவருடைய பாஷ்யங்களே. 1. பிரம்ம சூத்திரம் 2. கீதை 3. உபநிஷத்துக்கள் 4. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமம் ஆகிய நாலு நூல்களுக்கும் அவர் பாஷ்யங்கள் எழுதியிருக்கிறார். இவற்றுக்கு உரைகள் முதலானவை எழுதி அவருக்கு அண்மைக் காலத்திலிருந்த சீடர்களே பரப்பி வந்துள்ளனர். ஸ்ரீராமாநுஜர், மத்வர், பராசர பட்டர் முதலானவர்கள் இந்த பாஷ்யங்களின் பல கருத்துக்களை மறுத்துள்ளார்கள். இந்த நாலு பாஷ்யங்களிலும், "நாராயணனே உலகனைத்தையும் படைத்துக் காத்துத் தன்னுள் ஒடுக்குகின்ற பரம்பொருள்; மோட்சமளிக்க வல்லவன் அவனே. மற்ற தெய்வங்கள் அவனுக்கு அடங்கியவர்களே. அவர்களால் மோக்ஷமளிக்க இயலாது" என்று பலவிடங்களில் தெளிவாகக் கூறியுள்ளார். இந்த உண்மையை மறைப்பதற்காக ஆதி சங்கரருக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு அவர் பெயரில் பல துதி நூல்கள் கற்பிக்கப்பட்டன. சிவனைப்பற்றிய சிவானந்த லஹரி, சக்தியைப்பற்றிய ஸௌந்தர்ய லஹரி, முருகனைப்பற்றிய ஸுப்ரமண்ய புஜங்கம் முதலானவற்றில் அந்தந்த தெய்வங்களே பரம்பொருள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இத்துதி நூல்களை ஆதிசங்கரர் காலமான கி.பி.எட்டாம் நூற்றாண்டுக்கு ஐந்நூறு வருடங்களுக்குள்ளிருந்த எவரும் உரை செய்யவுமில்லை. மேற்கோளாகக் காட்டவுமில்லை. இதிலிருந்து ஆதி சங்கரருக்கு ஐந்நூறு வருடங்களுக்குப் பின்னிருந்த சங்கர மடாதிபதிகள் இயற்றிய இத்துதி நூல்களை ஆதிசங்கரரே செய்ததாகக் கற்பித்துவிட்டார்கள் என்று விளங்குகிறது. அவர் காலத்திற்கு ஐந்நூறு வருடங்களுக்குப் பின் எழுதப்பெற்ற சங்கர விஜய நூல்களிலும் 1. விஷ்ணு 2. சிவன் 3. சக்தி 4. கணபதி 5. முருகன் 6. சூர்யன் என்னும் ஆறு கடவுள்களைப் பரம் பொருளாகக் கொண்ட ஆறு மதங்களை சங்கரர் ஸ்தாபித்தார் என்று எழுதியிருப்பதும் பிற்காலக் கற்பனையே. உண்மையில் ஆதிசங்கரர் 'உலகம் பொய்'; ஜீவனும் பரம் பொருளும் ஒன்று'

http://acharya.org

என்னும் அத்வைத மதம் ஒன்றையே ஸ்தாபித்தவர். அத்தகையவர் அத்வைதத்தோடு முரண்பட்டதாய், ஒன்றோடொன்று முரண்பட்ட ஆறுமதங்களை எப்படி ஸ்தாபிக்க முடியும்? எனது "சங்கரரும் வைணவமும்" என்னும் நூலில் இதை விரிவாக விளக்கி நிலைநாட்டியிருக்கிறேன்.

63. கேள்வி: திருப்பதியிலுள்ள கடவுள் திருமால் தான் என்பதற்கு ஆதாரமுள்ளதா?

பதில்: சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முந்தியதான சிலப்பதிகாரத்தில் சமணரான இளங்கோவடிகள், திருமலையில் திருமால் சங்கு சக்கரம் ஏந்தி நிற்கும் நிலையைப் பாடியுள்ளார். ஆழ்வார்களில் ஒன்பது பேரும் ஆண்டாளும் திருவேங்கடவனைத் திருமாலாகவே நூற்றுக்கணக்கான பாடல்களில் பாடியுள்ளார்கள். நாயன்மார்களில் எவருமே திருவேங்கடவனைச் சிவனாகப் பாடவில்லை. இதைவிடத் திருவேங்கடவன் திருமாலே என்பதை நிலைநாட்ட வேறு என்ன ஆதாரம் வேண்டும்?

64. கேள்வி: ஆரியர் திராவிடர் என்று இரண்டு இனங்கள் உள்ளதாகக் கூறுகிறார்களே; அதற்கு ஆதாரம் உண்டா?

பதில்: வேதங்கள், இதிஹாஸபுராணங்கள், வடமொழி தென்மொழி இலக்கியங்கள் முதலான அனைத்திலும் 'ஆரியன்' என்னும் பதம் 'நல்லவன்' என்னும் பொருளிலேயே வழங்கப்பட்டுள்ளது. அதற்கு எதிர்ப்பதம் அநார்யன் (தீயவன்) என்பதேயொழிய திராவிடன் என்பதல்ல. வடமொழியில் "த்ராவிட" என்னும் சொல் "தமிழ்தேசத்தைச் சேர்ந்த" என்னும் பொருளிலேயே வழங்கப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து வெள்ளையர் நம்மைப் பிரித்தாளுவதற்காக உண்டாக்கிய கற்பனையே ஆரிய திராவிட இனக் கற்பனை என்று விளங்குகிறது.

65. கேள்வி: போலி ஆன்மிக வாதிகளைப்பற்றி எச்சரித்துத் தங்களுடைய "ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்" பத்திரிகையில் தலையங்கம் எழுதினீர்கள் இதுபற்றி விளக்கவும்?

பதில்: நம்நாட்டில் 'கல்கி' பகவானின் அவதாரம் என்று சொல்லிக்கொண்டு அவ்வப்போது சிலர் தோன்றிமறைகிறார்கள். இப்போது ஒருவர் அப்படி வந்துள்ளார். அவரும் மற்றும் சிலரும் தாங்களே கடவுள் என்று பத்திரிகைகளிலும் தொலைக் காட்சிகளிலும் தங்களை விளம்பரப்படுத்திக்கொள்கின்றனர். அவர்களுடைய செயல்களும் பேச்சும் அதை உறுதிப்படுத்துவதாக

http://acharya.org

இல்லை. 3.9.97, 10.9.97, 17.9.97 "துக்ளக்" இதழ்களில் இப்படித் தங்களைக் கடவுளாகக் கூறிக்கொள்ளும் யாகவா முனிவர், சிவசங்கர் பாபா ஆகிய இருவருடைய மோதல் வெளிவந்துள்ளது. அவர்களுடைய பேச்சும் உருவமும் அவர்கள் சாதாரண மனிதர்களேயொழியக் கடவுளல்லர் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. இதையே எனது தலையங்கத்தில் எடுத்துக்காட்டி எச்சரித்திருந்தேன்.

66. கேள்வி: திருக்குறளுக்கும் கீதைக்கும் உள்ள பொருள் ஒற்றுமையைக் கூறுங்கள்?

பதில்: பகவத்கீதையில் கண்ணன் தான் பரம்பொருள் என்பதை விளக்குவதற்குச் சொன்ன பெருமைகளனைத்தும் திருவள்ளுவருடைய கடவுள் வாழ்த்தில் காணப்படுகின்றன. பகவத்கீதையைத் தான் பின்பற்றியவர் என்பது தொனிக்கும்படி முதல் குறளிலேயே 'ஆதிபகவன்' என்கிறார் திருவள்ளுவர். "ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்ட:" (நான் எல்லா ஜீவர்களுடைய இருதயத்திலும் இருக்கிறேன்) என்று கண்ணன் கீதையில் (கீதை அத்.15 சுலோகம் 15) அருளியதை நினைவிற்கொண்டு அவனை "மலர்மிசையேகினான்" (இதயக் கமலத்தில் இருப்பவன்) என்று கூறுகிறார் திருவள்ளுவர்.

"ஸமோஹம் ஸர்வபூதேஷு ந மே த்வேஷ்யோஸ்தி நப்ரிய:" (கீதை 9–29) (நான் எல்லா உயிர்களிடத்திலும் சமமாயிருப்பவன். எனக்கு வேண்டாதவனோ வேண்டியவனோ இல்லை) என்று கண்ணன் அருளியதை "வேண்டுதல் வேண்டாமையிலான்" என்று திருவள்ளுவர் திருக்குறளில் மொழி பெயர்த்தார். "நமாம் கர்மாணி லிம்பந்தி நமே கர்ம பலே ஸ்ப்ருஹா! இதிமாம் யோபி ஜாநாதி கர்மபி: நஸ பத்யதே" (பகவத் கீதை 4–14) (என்னை வினைகள் கட்டுப்படுத்தமாட்டா. வினைகளின் பயனில் எனக்கு ஆசையில்லை. இந்த என் பெருமையை அறிபவன் வினைகளால் துன்புறமாட்டான்) என்று கண்ணன் அருளியதையே "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள் சேர் புகழ் புரிந்தார்மாட்டு". (5) என்று திருக்குறளில் திருவள்ளுவர் கூறினார். கண்ணன் கீதையின் இறுதியில் தன்னையே சரணமடையும் படியும் அப்படியடைந்தவர்களின் எல்லாப்பாபங்களையும் தான் நீக்குவதாகவும், நிலையான வீட்டுலகத்தைத் தருவதாகவும் உறுதியளிக்கிறான். இக்கருத்தையே

http://acharya.org

அறவாழி அந்தணன் தான் சேர்ந்தார்க்கு அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது. (8)
பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார் (10)

ஆகிய குறள்களில் திருவள்ளுவர் கூறியுள்ளார். திருவள்ளுவர் "அடியளந்தான்" "தாமரைக் கண்ணன்" என்று கண்ணனைக் குறிப்பிடுவதும் "தாமரைக் கண்ணன் உலகு" "வானோர்க்கு உயர்ந்த உலகம்" என்று வீட்டுலகைக் குறிப்பிடுவதும் திருவள்ளுவர் கீதையைப் பின்பற்றியவர் என்று தெளிவாகக் காட்டுகின்றன. மற்றும் பலவிடங்களும் உண்டு.

67. கேள்வி: பிரம்ம சூத்திரத்திற்கு சிவபரமாக எழுதப்பட்ட ஸ்ரீ கண்ட பாஷ்யம் பற்றித் தங்கள் கருத்து என்ன?

பதில்: ஸ்ரீராமாநுஜருடைய ஸ்ரீபாஷ்யம் பாரத தேசமெங்கும் வெற்றிக்கொடி நாட்டுவதைக் கண்டு சைவமதத்திற்கு அப்படியொரு பாஷ்யமில்லையே என்று சோர்வடைந்த அப்பைய தீக்ஷிதர் என்ற (கி.பி. பதினாறும் நூற்றாண்டிலிருந்த) அத்வைத பண்டிதர் தன் நண்பரான ஸ்ரீகண்டர் என்பவரைக் கொண்டு சிவபரமாக இந்த பாஷ்யத்தை இயற்றச் செய்தார். அது ராமாநுஜ பாஷ்யத்தைப் பெரும்பாலும் தழுவி விஷ்ணுவுக்குப் பதிலாக சிவனைப் பரம் பொருளாக வைத்து எழுதப்பட்டுள்ளது. அந்த பாஷ்யம் இராமாநுசருக்கும் முற்பட்டது போன்று தோற்றமளிக்கும் சில வாக்கியங்களும் அதில் அமைக்கப்பட்டது. அத்வைதியான அப்பைய தீக்ஷிதர் அதற்கு "சிவார்க்க மணி தீபிகை" என்ற உரை எழுதினார். ராமாநுஜருக்குப் பிறகு தோன்றிய சைவசித்தாந்திகளும் தங்களை விசிஷ்டாத்வைதிகளாக ஒப்புக்கொள்ளவில்லை. இந்த ஸ்ரீகண்ட பாஷ்யத்தைப் பின்பற்றி சைவ விசிஷ்டாத்வைதியாக வாழும் சைவர் எவரும் இருப்பதாகத் தெரியவில்லை. அந்த பாஷ்யத்திற்கு உரை செய்த அப்பைய தீக்ஷிதரே ஒரு அத்வைதி. இவற்றிலிருந்து ஸ்ரீ ராமாநுஜருடைய மதத்திற்குப் போட்டியாக சைவ விசிஷ்டாத்வைதம் என்ற ஒரு மதத்தை அத்வைதிகள் உண்டாக்க முயன்று அதில் தோல்வியடைந்தனர் என்று விளங்குகிறது.

68. கேள்வி: அழகர் மலையும் பழமுதிர் சோலையும் ஒன்று என்று முருக பக்தர்கள் கூறுகிறார்கள். இது உண்மையா?

www.pillailokacharya.org

பதில்: இளம் பெருவழுதியார் என்னும் சங்ககாலப் புலவர் பதினைந்தாம் பரிபாடலில் "மாலிருங்குன்றம்" என்று திருமாலிருக்கும் இடமாக அழகர்மலையைப் பாடியுள்ளார். பத்துப்பாட்டில் ஒன்றான திருமுருகாற்றுப் படையின் இறுதியில் நக்கீரர் "பழமுதிர்சோலை மலைகிழவோனே" (பழம் உதிரும்படியான சோலைகளையுடைய மலைகளில் வீரவிளையாட்டுக்களைப் புரிபவன்) என்று முருகனைப் பாடியிருக்கிறார். முருகனிடத்து மக்களை ஆற்றுப்படுத்தும் நூலாகையாலே அதற்கு 'திருமுருகாற்றுப்படை' என்னும் பெயர் வந்தது. 'பெரும்பாணாற்றுப்படை' முதலான மற்ற ஆற்றுப்படை நூல்களும் இவ்வண்ணமே பெயர் பெற்றன. முருகபக்தர்கள் முருகனுக்கு ஆறுபடை வீடுகள் சொல்லப்படுகையாலே இது திருமுருகாற்றுப்படை என்று பெயர் பெற்றது என்று கற்பித்தார்கள். பழம் உதிரும் சோலைகளையுடைய மலைகளைப் பொதுவாகக் கூறும் பழமுதிர்சோலையையும் ஆறுபடை வீடுகளில் ஒன்றாகக் கற்பித்தார்கள். ஆக்கிரமிப்பு மனப்பான்மையாலே அழகர் மலையே அது என்று பிரசாரம் செய்யத் தொடங்கினார்கள். "திருமாலிருஞ்சோலை", 'பழமுதிர்சோலை' என்னும் பெயர்களே இவையிரண்டும் வெவ்வேறு என்று காட்டித்தருகிறது. ஆழ்வார்களால் பாடப்பெற்ற திருமாலிருஞ்சோலையில் முருகன் கோயில் இருந்ததாகக் கூறுவதற்கு எந்தவிதமான அடிப்படையோ ஆதாரமோ இல்லை.

69. கேள்வி: அழகர் மலையில் பழமுதிர்சோலை என்னும் புதியதொரு முருகன் கோவில் கட்டப்பட்டது பற்றி விளக்குங்கள்.

பதில்: 1960களில் அழகர் கோயில் ஆலய நிர்வாக அதிகாரியின் ஒத்துழைப்போடு, இரவோடு இரவாக ஒரு புதிய முருகன் கோயில் அழகர் மலையில் பெருமாள் மண்டபத்தில் கட்டப்பட்டது. பல வருடங்கள் நீதிமன்றங்கள் வாயிலாக வைணவர்கள் போராடிய பிறகு, அத்துமீறிக் கட்டிய கோயிலை இடிக்க வேண்டாம் என்னும் பெருந்தன்மையுடன் "அங்கு பழமுதிர்சோலை என்று புதிதாக வைக்கப்பட்டிருந்த பெயர்ப் பலகைகளை எடுக்க வேண்டும்; கோயிலை விரிவு படுத்தக்கூடாது" முதலான பல நிபந்தனைகளுடன் சென்னை உயர்நீதி மன்றத்தில் வைணவர்களின் இசைவோடு ஒரு தீர்ப்பு பெறப்பட்டது. அதற்குப் பின் அழகர் மலையில் சிலம்பாறு எனப்படும் நூபுரகங்கைக்கு அருகிலேயே ஒரு பெரிய இடத்தைக்

http://acharya.org

காட்டிலாகாவிடமிருந்து பெற்று 'பழமுதிர்சோலை' என்ற பெயரில் புதிய முருகன் கோயிலைக் கட்டுவதற்கு சைவர்கள் முயற்சிகள் மேற்கொண்டனர். அதை எதிர்த்து "அழகர் மலை அழகருக்கே சொந்தமானது" என்று தீர்ப்புப் பெறுவதற்காக மதுரை நீதிமன்றங்களில் தொடுத்த வழக்கு இன்னும் முடிவுக்கு வராமலிருக்கிறது. இந்நிலையில் "விரிவு படுத்தக்கூடாது" என்னும் நிபந்தனையுடன் கட்டப்பட்ட முருகன் கோயிலைச் சுற்றி அழகர் கோயில் நிர்வாக அதிகாரிகள் ஒரு மண்டபத்தைக் கட்டினுர்கள். இந்த அடாத செயலை எதிர்த்து மதுரை ஸ்ரீதரன் என்னும் அன்பர் தேவஸ்தானத்தின் மீது தொடுத்த வழக்கு இன்னும் நிலுவையிலுள்ளது. இந்நிலையில் அந்த முருகன் கோயிலுக்குச் சைவர்களால் அழகர் கோயில் நிர்வாக அதிகாரிகளின் ஒத்துழைப்போடு ஷஷ்டி மண்டபம் என்ற ஒரு மணடபம் கட்டப்பட்டதையும், அமைச்சர்களின் ஆதரவோடு அந்த முருகன் கோவிலுக்கு ஒரு ராஜகோபுரம் புதிதாகக் கட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளையும் எதிர்த்து அந்தநல்லூர் எஸ்.முரளி என்பவர் திண்டுக்கல் கோர்ட்டில் ராஜகோபுரம் கட்டுவதற்குத் தடையுத்தரவு வாங்கினுர். அத்தடையை உடைக்க அழகர் கோவில் தேவஸ்தானத்தார் உயர்நீதி மன்றத்தில் தொடுத்த வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டு தடையுத்தரவு உறுதி செய்யப்பட்ட செய்தி 27.6.1997 ஹிந்துவில் வெளிவந்துள்ளது.

70. கேள்வி: உங்களுடைய குடும்பப் பின்னணியையும் உங்களுடைய பத்திரிகை தோன்றியதின் காரணத்தையும் விளக்குங்கள்.

பதில்: காடாயிருந்த தென்னுட்டில் வடநாட்டிலிருந்து ராமனுடைய முன்ஞேரான சிபி சக்கரவர்த்தி காலத்தில், அந்தச் சக்கரவர்த்தியால் பிரதிஷ்டை செய்யப்பெற்ற திருவெள்ளறைக் கோயிலில் கைங்கர்யம் புரிவதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் இங்கு குடியேற்றப்பட்டனர் என்று திருவெள்ளறை வரலாறு கூறுகிறது. சோழ தேசத்தில் முதன்முதலில் குடியேறினவர் களாகையாலே இவர்கள் "சோழியர்கள்" எனப்பட்டனர். இவர்களில் அந்தணராயிருந்தவர்கள் சிகையை (குடுமியை) தலையின் முன்பகுதியில் வைத்துக் கொண்டிருந்த படியால் இவர்கள் பூர்வசிக பிராம்மணர் (முன் குடுமி அந்தணர்) என்று வழங்கப்பட்டனர். ஆழ்வார்களில் அந்தணர்களாயிருந்த நால்வரும் இந்த வகுப்பைச் சேர்ந்தவர்களே. பின் குடுமியுடைய அந்தணர்கள் வடநாட்டிலிருந்து ஆழ்வார்களுக்குப் பிற்காலத்தில்

http://acharya.org

வந்தவர்கள். வைணவ ஆசார்யர்களிலும் விஷ்ணு புராணத்திற்கு வடமொழியில் உரையெழுதிய விஷ்ணுசித்தர் என்ற எங்களாழ்வானும், நாலாயிர திவ்யப்ரபந்தங்களுக்கும் உரையெழுதிய கிருஷ்ணர் என்னும் பெரியவாச்சான் பிள்ளையும், ஸ்ரீராமாநுஜரின் ஆசாரியர்களான திருக்கோட்டியூர் நம்பியும், திருமாலையாண்டானும், மணவாள மாமுனிகளின் ஆசார்யரான திருவாய்மொழிப் பிள்ளையும் இந்த முன்குடுமி அந்தண வகுப்பைச் சேர்ந்தவர்கள். 'அர்த்தசாஸ்திரம்' எழுதிய விஷ்ணு குப்தன் எனப்படும் சாணக்கியனும் தென்னாட்டைச் சேர்ந்த முன்குடுமி அந்தணர் வகுப்பைச் சேர்ந்தவர் என்பது பிரசித்தமானது. இந்த வகுப்பைச் சேர்ந்த குடும்பமொன்று திருச்சிராப்பள்ளியில் புத்தூர் அக்ரஹாரத்தில் நெடுங்காலமாக வாழ்ந்து வருகிறது. அக்குடும்பத்தைச் சேர்ந்த எந்தையாரான ஸ்ரீ.கி.ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி சட்டப்படிப்புப் படித்து வழக்குரைஞராக வாழ்க்கை நடத்தியதோடு, வேதம் இதிஹாஸபுராணங்கள் திவ்யப்ரபந்தங்கள் அதன் உரைகள் முதலான மத நூல்களில் பெரும்புலமை பெற்றவராக இருந்தார். "ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு" (2.15) (உலக நன்மையை விரும்பும் பேரறிவாளனுக்குச் செல்வம் நிறைந்தால் அது ஊரிலுள்ள அனைவரும் தண்ணீர் எடுக்கும் குளத்தில் நீர் நிறைந்தது போலாகும்) என்னும் குறளைப் பின்பற்றி எந்தையார் தம் சொத்தில் பெரும் பகுதியை ஒரு அறக்கட்டளையாக (டிரஸ்ட்) நிறுவி அதன் மூலம் "ஸ்ரீநிவாஸம் அச்சகம்" என்னும் அச்சுக்கூடத்தையும் நிறுவி, "ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்" என்னும் மாதப் பத்திரிகையையும், பல மத நூல்களையும் தாமே ஆசிரியராகவும் பதிப்பாளராகவும் இருந்து அச்சிடத் தொடங்கினார். நம் நாடு சுதந்திரமடைவதற்கு முன் மக்களனைவரையும் ஒன்று படுத்துவதற்காக 'எம்மதமும் சம்மதம்' என்னும் பிரசாரம் அரசியல்வாதிகளாலும், அரசியல் பத்திரிகைகளாலும் மிகவலிமையுடன் செய்யப்பட்டது. பொதுஜனப் பத்திரிகைகளில் வைணவ விரோதப் பிரசாரங்களும் வைணவத்தைத் திரித்துக்கூறும் பிரசாரங்களும் மிகுதியாக வளர்ந்தன. இதனால் வைணவம் மிகவும் நலிவுற்றது கண்டு, "வைணவமே வேதமதமும் பாரதத்தின் தொன்மையான மதமும் ஆகும்" என்பதை நிலைநாட்ட இப்பத்திரிகையைத் தொடங்கினார். திவ்யப்ரபந்த வியாக்யானங்கள் முதலான பல நூல்களையும் வெளியிட்டார். தமக்குப் பின்னும் இப்பணிகள் இடையூறின்றித் தொடர்ந்து நடைபெறுவதற்காக எனக்கும் மத நூல்களில் பெரும்

http://acharya.org

புலமையை உண்டாக்கினார். சட்டமும் பயிலும்படி செய்தார். சிலவருடங்கள் அவருடன் வழக்குரைஞர் தொழிலும் செய்தேன். ஐந்தரை வருடங்கள் இப்பணிகளைத் தாமே செய்தபின் அவர் இவ்வுலகைவிட்டு மறைந்து பரமபதமடைந்தார். அவருக்குப் பின் சுமார் நாற்பத்தைந்து வருடங்களாக இப்பெரும் பணியைத் தொடர்ந்து நடத்தி வருகின்றேன். என்னுடைய நூல்களில் சிலவற்றை விளக்குகிறேன். 'பிரஸ்தானத்ரயம்' எனப்படும் பிரம்ம சூத்திரம், பகவத் கீதை, உபநிஷத்துக்கள் ஆகியவற்றுக்கு ஆயிரக்கணக்கான பக்கங்களில் எளிய தமிழ் நடையில் விளக்கங்கள் வெளியிட்டிருக்கிறேன். பகவத் கீதையின் விரிவுரை மட்டும் மூவாயிரம் பக்கங்கள் கொண்டது. திவ்யப்ரபந்தங்கள் பலவற்றுக்குப் பெரியவாச்சான் பிள்ளை வியாக்யானங்களை எளிய தமிழில் ஆக்கிக் கொடுத்திருக்கிறேன். இது தவிர அவருடைய 'ராமாயண தனிச்லோகம்' என்னும் நூலையும் எளிய தமிழில் ஆக்கிக் கொடுத்திருக்கிறேன். விஷ்ணுசித்த விஜயம் முதலான மற்றும் பல நூல்களையும் எளிய தமிழில் எழுதியிருக்கிறேன். பல்லாயிரம் பக்கங்கள் கொண்ட பூர்வாசாரிய கிரந்தங்களையும் அழகான பதிப்புக்களாக வெளியிட்டிருக்கிறேன். இதுவரை 108 வெளியீடுகள் நமது காரியாலயத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றின் மொத்தப்பக்கங்கள் 34000. இவற்றில் பல நூல்கள் பல பதிப்புக் களைக் கண்டுள்ளன. இந்த ஐம்பது வருடங்களாக 50000 பக்கங்களுக்கு மேல் உள்ள புத்தகங்கள் வெளிவந்துள்ளன. இவை ஒவ்வொன்றும் ஆயிரம் பிரதிகளுக்குக் குறையாமல் அச்சிடப்பட்டுள்ளன. இதுதவிர கடந்த ஐம்பது வருடங்களாக ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் பத்திரிகை சராசரியாக வருடம் 700 பக்கங்கள் வீதம் கடந்த ஐம்பது ஆண்டுகளில் 35000 பக்கங்களுக்கு மேலாக அச்சிடப்பட்டுள்ளது. இதைத் தவிர 600 பக்கங்கள் கொண்ட நாலாயிரதிவ்யப்ரபந்தம் மூன்று பதிப்புக்கள் ஒவ்வொன்றும் ஐயாயிரம் பிரதிகள் வீதம் வெளியிடப் பட்டுள்ளன. இவையெல்லாம் டிரஸ்டுகளின் (அறக்கட்டளைகளின்) ஆதரவுடன் வெளியிடப்பட்டதால் மிகக்குறைந்த விலைக்குத் தமிழ் மக்களுக்கு கடந்த ஐம்பது ஆண்டுகளாக அளிக்கப்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே. ஸுதர்சனத்தின் தோற்றம் வளர்ச்சி அதன் ஐம்பதாண்டு சாதனைகள் ஆகியவற்றை விரிவாக விளக்கும் "ஸுதர்சன விஜயம்" என்னும் நூல் ஜனவரி 97ல் நடைபெற்ற ஸுதர்சனம் ஸ்தாபகரும் எந்தையாருமான ஸ்ரீ.கி.ஸ்ரீநிவாஸ அய்யங்காரின் நூற்றாண்டு விழாவின் போது சென்னையில்

http://acharya.org

வெளியிடப்பட்டது. நம் வெளியீடுகளைப் பயன்படுத்தி ஏராளமானவர்கள் பல்கலைக் கழகங்களில் டாக்டர் பட்டம் பெற்றுள்ளனர். இப்படி எண்ணிறந்த சாதனைகளும் தமிழ்த் தொண்டும், வடமொழித் தொண்டும் நம் வெளியீடுகள் வாயிலாகச் செய்யப்பட்டிருந்த போதிலும், மத்திய அரசோ, தமிழகத்திலுள்ள சர்வ கலாசாலைகளோ, மாநில அரசோ இவற்றைக் கண்டுகொள்வதேயில்லை. காரணம் நாம் வெளியிடும் கசப்பான உண்மைகளேயாகும்.

71. கேள்வி : தங்களுக்கு மதச் சண்டைக்காரரென்று பெயர் உள்ளதே ஏன்? சைவத்தின் மீது தங்களுக்குக் கோபம் உண்டா?

பதில்: சைவம், வைணவம், கிறிஸ்துவம், இஸ்லாம் முதலான எல்லாமதங்களும் பரஸ்பர சகிப்புத் தன்மையுடன் பொதுமேடைகளில் ஒருவரையொருவர் தாக்காமல் வாழவேண்டும் என்னும் கொள்கையுடையவனே நான். இதை என்னுடைய 'சர்வசமய சமரசம்' (Toleration or Equalisation) போன்ற நூல்களில் விளக்கியிருக்கிறேன். இந்த சகிப்புத்தன்மைக் கொள்கையைச் சிறிதும் மதிக்காமல், கல்கி, கலைமகள், ஆனந்தவிகடன், இதயம், ஞானபூமி, தாய், தினமணி, குங்குமம், தினமலர், துக்ளக் முதலான பத்திரிகைகளில் காமகோடி சங்கராச்சாரியார், கிருபானந்த வாரியார், ராஜாஜி, ம.பொ.சி முதலான நாடறிந்த பிரமுகர்கள் விஷ்ணுவைத் தாழ்த்தியும், வைணவத்தைத் தாக்கியும், திரித்துக் கூறியும் எழுதிய பலபல கட்டுரைகள் கடந்த நாற்பதாண்டு காலமாக வெளிவந்தன. இதனால் மனம் புண்பட்ட எமது வாசகர்கள் எனக்கு இவற்றைச் சுட்டிக்காட்டி ஏராளமான கடிதங்கள் எழுதினர். தொடக்கத்தில் இக்கட்டுரைகளை ஸுதர்சனத்தில் நான் எழுதிய கட்டுரைகள் மூலம் ஆதாரத்துடன் மறுத்துவந்தேன். அதன் பிறகு இதற்காகவே ஸுதர்சனர் பதில் என்னும் பகுதியைத் தொடங்கினேன். இதில் 12 சதகங்களில் 1200 கேள்விகளும் அவற்றுக்கான பதில்களும் வெளியாகியுள்ளன. 13வது சதகம் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. எனது மறுப்புகளைப் பெற்றவர்களில் ராஜாஜி ஒருவர் தான் தனக்கு மத விஷயங்கள் தெரியாது எனக் கூறித் தனது தவறை ஒப்புக்கொண்டார். மற்றவர்கள் இத்தவறுகளை மேன்மேலும் செய்து கொண்டுதான் இருந்தனர். இருப்பினும் தற்போது பத்திரிகைகளில் வைணவ எதிர்ப்புப் பிரசாரம் ஓரளவு குறைந்திருப்பது நமது ஸுதர்சனர் பதில்களின்

http://acharya.org

விளைவேயாகும். ஆகையால் பிறர் செய்யும் சகிப்புத்தன்மையற்ற செயல்களுக்கு நான் பதிலெழுதவேண்டியிருப்பதால் நான் மதச் சண்டைக்காரனாகத் தோன்றுகிறேன். உண்மையில் அத்தோற்றம் தவறானது. நான் இஸ்லாம், கிறிஸ்துவம், சைவம், வைஷ்ணவம் முதலான எல்லா மதங்களைச்சேர்ந்தவர்களும் ஒருவரையொருவர் மதித்துத் தாங்களும் வாழ்ந்து மற்றவரையும் வாழவிடவேண்டும் என்றே வலியுறுத்துகிறேன். எல்லா மதத்தினரிலும் எனக்கு நண்பர்கள் உண்டு. என்னை நேரில் காண்பவர்கள் என்னுடைய இந்தக் கருத்து மிகச் சரியானதே என்று கூறுகிறார்கள்.

72. கேள்வி: 'எல்லா மதங்களும் ஒன்று' என்று பிரசாரம் செய்வதே மதச் சண்டைகள் வராமலிருக்கச் செய்யும் எனப் பலர் கருதிச் செயல்படுகிறார்களே. இது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: 'எல்லா மதங்களும் ஒன்று' என்று கூறுவது பொய்யானது. மதக்கொள்கைகளிடையே உண்மை உரைத்தல், பிறர்க்குத் தீங்கு நினையாமலும் செய்யாமலும் இருத்தல் முதலான பல ஒற்றுமைகள் இருந்த போதிலும், தத்துவக் கொள்கைகளிலும், மனிதன் உய்வதற்குக் காட்டும் வழிகளிலும் ஏராளமான வேற்றுமைகள் உள்ளன. உதாரணமாக "உலகம் பொய், ஜீவனும் பரம் பொருளும் ஒன்று, இதை உள்ளபடி அறிவதொன்றே மனிதன் உய்வதற்கு வழி" என்பது சங்கரரின் அத்வைத மதம். "உலகனைத்தும் உண்மையானது, நாராயணனாகிற பரம்பொருளுக்குச் சொத்தாகவும், அவனுக்கு உடலாகவும், அவன் உறையும் கோயிலாகவும் இருப்பது. உலகிலுள்ள உயிரினமனைத்தும் அவனுடைய குழந்தைகள். இதை உணர்ந்து அவனையே தஞ்சமாகக் கொண்டு அவனிடத்தும் அவனடியார்களிடத்தும் எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி வாழ்வதொன்றே மனிதன் உய்வதற்கு வழியாகும்" என்கிறது ஸ்ரீராமானுஜர் நிலைநாட்டிய விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவமதம். இவ்விரண்டு மதமும் எப்படி ஒன்றாக முடியும்? இது போலவே ஒவ்வொரு மதத்திலும் தத்துவக்கொள்கைகளிலும், மனிதன் உய்வதற்குக் காட்டும் வழிகளிலும் பலபல வேற்றுமைகள் உள்ளன. இவையனைத்தையும் அறவே மறைத்து, 'எல்லா மதங்களும் ஒன்று; என்று கூறுவது பொய்யின் அடிப்படையில் அமைந்த பிரசாரமாகையாலே ஒற்றுமையை விளைக்காது; தத்தம் மதங்களிலுள்ள பற்று குறைந்து மக்கள் விலங்கினமாக மாறுவதற்கே இது வழி வகுக்கும். ஆகையால் நாடறிந்த

http://acharya.org

பிரமுகர்கள் பொது ஜனப் பத்திரிகைகளிலும் வானொலி, தொலைக்காட்சி முதலான சாதனங்களிலும், மக்கள் எந்த மதத்தையும் தாக்காமல் அவரவர் மதத்தில் உறுதியான பற்றுடன் பிறமதங்களைச் சகிப்புத்தன்மையுடன் மதித்து நடக்கவேண்டும், என்று பிரசாரம் செய்வதொன்றே நம் நாட்டிலுள்ள வன்முறைகள் குறையவும் நன்னெறிகள் ஓங்கவும் வழிவகுக்கும். எனது நூல்களில் வைணவர்கள் உண்மையான வைணவர்களாகவும் சைவர்கள் உண்மையான சைவர்களாகவும் வாழ்ந்து பொது மேடைகளில் ஒருவரையொருவர் தாக்காமல், சகிப்புத் தன்மையுடன் மதித்து நடக்கவேண்டும் என்றே எழுதிப் பிரசாரம் செய்து வந்துள்ளேன். அதையே நான் கடைப்பிடித்தும் வருகிறேன். இவ்வுண்மையை என்னை நேரில் சந்திப்பவர்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள்.

73. கேள்வி: இந்து முன்னணி பிராம்மணர் சங்கம் முதலிய அமைப்புகளுக்குத் தாங்கள் கூறும் அறிவுரை யாது?

பதில்: ஒருமுறை ஸ்ரீரங்கத்தில் நடைபெற்ற பிராம்மணர் சங்கக் கூட்டத்தில் என்னைப் பேச அழைத்திருந்தார்கள். அப்பொழுது "பிராம்மணர்கள் குறிப்பாக இளைஞர்கள் அவரவர் மதக்குறிகளைத் தங்கள் நெற்றியில் அணியவேண்டும் என்று பிராம்மணர் சங்கம் வலியுறுத்தினால் அவர்களுடைய ஒழுக்கமும் உயரும்; அவர்களுக்குத் தெய்வ பலமும் கிட்டும்" என்று கூறினேன். அடுத்துப் பேசிய பிராம்மணர் சங்கக் காரியதரிசி 'நாங்கள் பிராம்மணர்களின் லௌகிக முன்னேற்றத்தைக் கருதிச் சங்கம் அமைத்திருக்கிறோமேயொழிய ஆன்மிக முன்னேற்றத்திற்காக அல்ல; ஆகையால் இதை வற்புறுத்த முடியாது' எனக்கூறிவிட்டார்; 'ஆன்மிக முன்னேற்றமும் தெய்வபலமும் இல்லாமல் பொதுவாக எவருக்குமே, குறிப்பாக அனைவராலும் ஒதுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பிராம்மணர்களுக்கு லௌகிக முன்னேற்றம் அமையாது' என்பது என்கருத்து. இந்து முன்னணிக்கு நான் கூறும் அறிவுரையாவது:– "நாட்டில் வன்முறையைத் தூண்டிவிடும் பிள்ளையார் ஊர்வலங்களை வளர்த்துக் கொண்டு போகாமல், இந்துக்கள் எனப்படும் அனைவரையும் திருமண், திருநீறு போன்ற அவரவர் மதக் குறிகளை அணிந்து கொள்ளுமாறு வலியுறுத்தி, தத்தம் மதக்கோட்பாடுகளில் உறுதியான நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும் வலியுறுத்தினால் இந்த மதத்தினரிடையே அடிப்படை

http://acharya.org

ஒற்றுமையும், பரஸ்பர சகிப்புத் தன்மையும், சமுதாய அமைதியும் விளையும்" என்பதேயாகும்.

74. கேள்வி: அத்வைதமும் சைவமும் ஒன்றா? ஆதிசங்கரர் காலத்திலிருந்து இன்றுள்ள அத்வைதம் எப்படி வேறுபட்டுள்ளது?

பதில்: "உலகம் பொய். ஜீவனும் பரம்பொருளும் ஒன்று. இதை உணர்ந்து ஜீவன் பரம் பொருளாக ஆவதே மோட்சம்" என்பது அத்வைதத்தின் முக்கியமான கொள்கை. "உலகம் உண்மையானது. மனிதன் சிவனிடம் அன்பு செலுத்தி சைவ நெறிகளைப்பின்பற்றி சிவலோகமடைவதே மோட்சம்" என்பது சைவம். இவை இரண்டும் ஒன்றல்ல என்பது வெளிப்படையானது. ஆதிசங்கரர் தன் பாஷ்யங்களில் விஷ்ணுவையே உலகனைத்தையும் படைத்துக் காத்துத் தன்னுள் ஒடுக்கும் பரம் பொருளாகக் கூறியிருக்கிறார். 'சிவன் முதலான மற்ற எந்தத் தெய்வத்திற்கும் இப்பெருமையில்லை' என்று கூறியிருக்கிறார். அவருடைய பாஷ்யங்களை நன்கு உணர்ந்தவராய், இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த அத்வைத மஹாபண்டிதரான திருவிசை நல்லூர் ராமசுப்பா சாஸ்திரிகள், தம் நூல்களில், "சங்கரர் விஷ்ணுவையே பரம்பொருளாகக் கொண்டவர். விபூதியைக் கையாலும் தொடாதவர் என்று அவருடைய சிஷ்யரே கூறியிருக்கிறார். அவர் சந்தனத்தாலேயே ஊர்த்துவ புண்ட்ரம் (நாமம்) அணிந்தவர்'' என்று நிலைநாட்டி யிருக்கிறார். இன்றும் விபூதியைக் கையாலும் தொடாமலும் சந்தனத்தாலே நாமமணிந்து விஷ்ணுவைத் தவிர்ந்த வேறு எந்தத் தெய்வத்தையும் பூசிக்காத அத்வைதிகள் ஆங்காங்கு பலர் உள்ளனர். ஆனால் சங்கரர் பெயரில் தென்னாட்டில் ஏற்பட்ட சிருங்கேரி மடத்தையும், அதற்குப்பின் தோன்றிய காமகோடி மடத்தையும் சேர்ந்த பீடாதிபதிகள் சில நூற்றாண்டுகளாகவே விபூதி (திருநீறு) அணிந்தவர்களாக மாறிவிட்டதால், அத்வைதிகளில் பெரும்பாலானவர்கள் நீறுபூசும் சைவர்களாக மாறிவிட்டனர். 'எல்லா ஜீவாத்மாக்களும் ஒன்றான பரம்பொருளே' என்ற அத்வைதக் கொள்கையை "அரியும் சிவனும் ஒண்ணு; அறியாதவன் வாயில் மண்ணு" என்று சொல்லு மளவுக்குக் குறுக்கிக் கொண்டுவிட்டார்கள்.

75. கேள்வி: இன்றைய அறநிலையத்துறை ஆன்மிகம் காக்கிறதா? சைவ வைணவக் கோயில்களில் அதிகாரிகள் எப்படியிருந்தால் நலம்?

http://acharya.org

பதில்: இன்றைய அறநிலையத்துறை 'திராவிடப் பாரம்பரிய'த்தில் வந்த நாத்திகர்களான பெரியார் சீடர்களால் ஆளப்படுகிறது. இவர்கள் ஆன்மிக நலத்தை எப்படிக் காக்கமுடியும்? நாம் சில வருடங்களுக்கு முன் வரை ஆலயப் பாதுகாப்புக் குழுவில் ஒரு உறுப்பினராயிருந்தோம். ஆலயப் பாதுகாப்புக் குழுவில் பெரும் பதவி வகித்து வந்த மறைந்த சேலம் எம்.ராமசாமியும், திருச்சி அ.வெ.ரா.கிருஷ்ணசாமி ரெட்டியாரும் நமது நண்பர்கள். அப்போது நடைபெற்ற ஆலயப்பாதுகாப்பு மாநாட்டில் நான் ஓர் தீர்மானம் கொண்டு வந்தேன். அதாவது "விஷ்ணு கோவில் நிர்வாக அதிகாரிகள் வைணவ மதத்தைக் கடைப்பிடிப்பவர்களாய், குறிப்பாக தினந்தோறும் நெற்றியில் திருமண்காப்பு அணிபவர்களாய் இருக்கவேண்டும். சிவன் கோவில் நிர்வாக அதிகாரிகள் சைவ மதத்தைக் கடைப்பிடிப்பவர்களாய் நெற்றியில் திருநீறு அணிபவர்களாய் இருக்கவேண்டும்" என்பதே அந்தத் தீர்மானம். இதைப் பிரேரணை செய்யவே ஆலயப்பாதுகாப்புக்குழுவினர் மறுத்துவிட்டனர். பல வருடங்களாக விஷ்ணு கோவில்களில் நிர்வாக அதிகாரிகளாய் இருப்பவர்களில் பெரும்பாலோர் அந்தக் கோவில் ஆசாரங்களை உணராதவர்களாய் 'எம்மதமும் சம்மதம்' என்னும் கொள்கை யுடையவர்களாகவே இருக்கின்றனர். அதன் விளைவாக விஷ்ணுவைத் தூஷிக்கும் திருவெம்பாவையைப் பிரசாரம் செய்யும் 'பாவை' மாநாடுகள் விஷ்ணு கோயில்களில் பல வருடங்கள் நடந்தன. வைணவர்கள் அறப்போராட்டம் நடத்தியபின் இப்போது அவை நின்றுவிட்டன. அழகர் மலை வழக்குகளும் அழகர் கோவில் அறநிலைய அதிகாரிகளின் வைணவ விரோத மனப்பான்மையாலே இன்றும் தொடர்கின்றன. விஷ்ணு கோவில்கள் வைணவர்களைப் பெரும்பான்மை யினராகக் கொண்ட ஒரு சுயாதிகாரம் படைத்த குழுவினராலும், சிவன் சக்தி முதலான கோயில்கள் சைவர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட ஒரு சுயாதிகாரம் பெற்ற குழுவினராலும் நடத்தப்பெற்றுல்தான் அனைத்துக் கோயில்களும் செவ்வனே நடைபெற்று ஆன்மிகம் தழைக்கும்.

76. கேள்வி: இன்றைய 'தலித்' எனப்படும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு எந்த மதம் ஏற்புடையது?

பதில்: ஆழ்வார்களும் ஸ்ரீராமாநுஜரைப் போன்ற தீர்க்க தரிசிகளும் தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்வதற்கு ஒரே வழி அவர்கள் ஒழுக்கத்தால் உயர்ந்தவர்களான வைஷ்ணவர்களாக மாறுவதே

http://acharya.org

என்று கண்டார்கள். இன்று தலித் மக்கள் பெரும்பாலும் சிறு தெய்வங்களை வணங்குகின்றவர்களாய், அத்தெய்வங்களுக்கு ஆடு, கோழி முதலானவற்றைப் பலி கொடுப்பவர்களாய், கள், இறைச்சி முதலானவற்றை உணவாக ஏற்பவர்களாய் உள்ளனர். பஞ்சஸம்ஸ்காரம் பெற்று வைணவத்தை ஏற்பவர்களுக்கு, சிறு தெய்வங்களை வணங்காமல் பரம் பொருளான திருமாலையே வணங்குதல், புலாலுண்ணாமை, கள்ளுண்ணாமை முதலான வள்ளுவர் கண்ட நெறிகளை வைணவம் ஒன்றே இன்றளவும் வலியுறுத்துகிறது. மாட்டிறைச்சி உண்டு கொண்டிருந்த லட்சக்கணக்கான மேல் நாட்டவர்கள் 'ஹரே கிருஷ்ண' இயக்கத்தினரால் கள்ளுண்ணாமை, புலாலுண்ணாமை முதலான உயர்ந்த ஒழுக்கத்தையடையவர்களாய், கண்ணன் ஒருவனையே பரம் பொருளாகக் கொண்டவர்களாக மாற்றப்பட்டிருப்பதையும், அவர்கள் தங்கள் ஒழுக்கத்தாலே மற்ற எல்லா மதத்தினரைக் காட்டிலும் உயர்ந்து நிற்பதையும் நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஆகையால் தமிழ் நாட்டில் வள்ளுவரும், ஆழ்வார்களும், இராமாநுசரும் கண்ட வைணவ நெறியையும் உயர்ந்த ஒழுக்கத்தையும் பின்பற்றச் செய்வதொன்றே தலித் மக்களை உயர்ந்தவர்களாகச் செய்யும் வழி என்பது நமது கருத்து.

77. கேள்வி: இலக்கியப் பத்திரிகையான "புதிய பார்வை"க்குத் தாங்கள் தனிச்சிறப்பாகக் கூறுவது என்ன?

பதில்: "மதச்சார்பற்ற (Secular) நமது நாட்டில் அரசியல்வாதிகளும், பத்திரிகைகள் வானொலி தொலைக்காட்சி ஆகிய பொது மக்கள் தொடர்பு சாதனங்களில் பணி புரிபவர்களும், எந்த மதத்தைச் சேர்ந்தவர்களையும் புண்படுத்தாமல் நடுநிலை நின்று அந்தந்த மதங்களைப்பற்றிய செய்திகளையும், கருத்துக்களையும் தரவேண்டும். 'எல்லா மதங்களும் ஒவ்வொரு சமூகத்தின் நிலைக்கேற்ப பரம்பொருளால் படைக்கப்பட்டவையே' என்னும் உணர்வுடன் கடவுள் நம்பிக்கையுடைய அனைவரும் சகிப்புத் தன்மையுடன் வாழவேண்டும்" என்று இலக்கியத்தரமுள்ள 'புதிய பார்வை' அனைவர்க்கும் எடுத்துச்சொல்ல வேண்டும் என்பதே நம் வேணடுகோள்.

❀ ❀ ❀

http://www.charas.org

## Dr. M A. வேங்கடகிருஷ்ணன், சென்னை-5
## (கேள்விகள் 78—90)

**["வைணவத்தை வளர்க்கும் மா உத்தமர்**

**புத்தக உலகிற்கு அருள் தொண்டு ஆற்றியவர்"**

என்னும் தலைப்பில் "ஆன்மீகம்" நவம்பர் 97 இதழில் வெளிவந்தவை]

### முன்னுரை

ஸ்ரீ வைஷ்ணவ சமயத்திற்கு ஒரு தூணாக விளங்கிவருபவர் திரு எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் எம். ஏ. பி. எல், அட்வகேட் அவர்கள். தமது தந்தையார் ஸ்தாபித்த "ஸ்ரீ-ரா—ஸ்ரீ-கி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் குடும்ப தர்ம டிரஸ்ட்" ஆதரவில் ஐம்பது ஆண்டுகளாகத் திருச்சியிலிருந்துவெளிவரும் "ஸ்ரீவைஷ்ணவஸுதர்சனம்" பத்திரிகையின் ஆசிரியராக இருந்து, வைணவ சமய நூல்கள் பலவற்றைப் பெரும் செலவில் அழகுற அச்சிட்டு அவற்றைக் குறைந்த விலையில் வழங்கி வருகிறார், அவரிடம் ஒரு பேட்டி.

78. தாங்கள் வைணவத்திற்கு இவ்வளவு அரும் பெரும் பணிகளைத் துணிவாகவும் ஆணித்தரமாகவும் ஆற்றிவருவதற்கு அடிப்படையாக அமைந்த காரணம் ஏதேனும் உண்டா? தங்களது குடும்பப் பின்னணி என்ன?

நாங்கள் ஸ்ரீவைஷ்ணவக் குடியில் பூர்வசிக வைஷ்ணவர்கள் (முன் குடுமிச் சோழியர்) இந்தக் குடும்பம் ஆழ்வார்கள் காலம் தொட்டே பண்டைக் குலமாகவும் தொண்டக் குலமாகவும் விளங்கி வருகிறது. மறந்தும் புறந்தொழா மாந்தர் நாங்கள். எங்கள் குல முன்னோர்கள் ஸ்ரீவைஷ்ணவ நெறி தவறாது வாழ்ந்து காட்டியதுடன் பற்பல நற்கைங்கர்யங்கள் தழைத்து ஓங்கிவளரவும் பாடுபட்டு வந்துள்ளனர். அன்னவர்களில் ஸ்ரீ உ வே ஸ்ரீரங்கராஜய்யங்கார் என்பவர் ஒருவர். அந்த ஸ்வாமி பெரியாழ்வார் தொண்டரடிப் பொடியாழ்வார் ஆகியோரின் வழிநின்று, ஏழ்மையான நிலையில் வாழ்ந்தபோதிலும் ஸ்ரீரங்கநாதனுக்கு ஒரு நந்தவனத்தினை அமைத்து, அதில் புஷ்பிக்கும் புஷ்பங்களை எல்லாம் தொடுத்து மாலை கட்டி தினசரி திருச்சி புத்தூரிலிருந்து ஸ்ரீரங்கத்திற்கு நடந்து வந்து அரங்கனுக்குப் புஷ்ப கைங்கர்யம் செய்து வந்தார், இக்குடும்பத்திற்கு "பூக்காரர் குடும்பம்" என்றே பெயர் ஏற்பட்டது. அந்த ஸ்வாமி அன்று வித்திட்ட இந்தக் கைங்கர்ய நிலை இன்றளவும் தொடர்கின்றது.

http://acharya.org

79. அவரது குமாரர் யார்?

ஸ்ரீ உ. வே. ராமய்யங்கார் என்று ஒரு திருக்குமாரர் அவதரித்தார். இவர் பின்னாளில் ஆற்காடு நவாபிடம் திவானாக விளங்கி, பெரும் செல்வத்தினராக விளங்கியதுடன் ஏராளமான பொன்னும் பொருளும் பற்பல நற்பணிகளுக்கு வாரி வழங்கினார். அவருக்கு ஒரே குமாரரான ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி மிகுந்த தீரராய், கட்டிடக் கலையிலும் அரிய சாதனைகளை நிகழ்த்தினார்.

80. 'அவருக்கு பிறகு'

அவருக்கு ஸ்ரீ உ. வே. ராமஸ்வாமி அய்யங்கார், ஸ்ரீ உ. வே. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் என்று குமாரர்கள் இருவர். ஸ்ரீ உ. வே. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் பாகவத தசமஸ்கந்த கீர்த்தனைகளை அந்நாளில் அச்சிட்டு வெளியிட்டார். அவருடைய திருக்குமாரராக விளங்கியவர்தான் அடியேனுடைய திருத் தகப்பனார். தமது சொத்துக்களில் பெரும்பாகத்தினை ஒரு டிரஸ்டாக ஏற்படுத்தி அதன் மூலம் "ஸ்ரீஸூக்திமாலா" என்ற பெயருடன் பழைய ஆசார்ய நூல்களையும் வெளியிட்டார். 'ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்' என்று பிரபலமான மாதப்பத்திரிகையையும் வெளியிட ஆரம்பித்தார். எனது திருத் தகப்பனாரின் பணிகள் யாவும் ஸ்ரீ வைஷ்ணவ உலகம் முழுமையும் பரவியுள்ளன. ஆக இவைகளே என் குடும்பப் பின்னணிகள் ஆகும்.

81. இப்படி ஒரு பொதுக் காரியத்துக்குச் சொத்துக்களைச் செலவிட வேண்டும் என்ற தாராள மனப்பான்மை தங்களது தகப்பனாருக்கு ஏற்படக் காரணம்?

அடியேன் மேலே தெரிவித்த பரம்பரைக் காரணம் தவிர அப்போது இருந்த சமூகச் சூழ்நிலையே முக்கிய காரணமாகும். எமது தந்தையார் வைணவநெறி மேலும் ஊக்கத்துடன் வளர இந்த டிரஸ்டினை ஆரம்பித்து, தமது பணிகளில் முழுகவனமும் செலுத்தி 'ஸ்ரீஸூக்தி மாலா' வெளியீடுகளுக்கும் 'ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்' மாதப் பத்திரிகைக்கும் இந்த டிரஸ்டினைப் பயன்படுத்தி, வைணவ சமயத்தை வளர்க்கும் முயற்சிகளில் ஈடுபட்டார் அந்த. அடிப்படையிலேயே அடியேனது பணிகளும் இந்த டிரஸ்டின் மூலம் தொடர்கின்றன.

http://acharya.org

82. தங்களது தந்தை ஆரம்பித்த இந்த டிரஸ்ட் இப்போது எந்த நிலையில் உள்ளது?

மிகவும் நன்முறையில் படிப்படியாக வளர்ந்து, இன்று ஆல் போல் தழைத்து ஓங்கி உள்ளது என்பதில் நிச்சயம் பெருமை கொள்ள முடியும். ஆரம்பத்தில் 3, 4 லட்சங்களுடன் ஆரம்பித்த இந்த டிரஸ்ட்டானது 30-40 லட்ச ரூபாய்க்குப் பெருகியுள்ளது, முன்னர் 24 பக்கங்களுடன் வெளிவந்த பத்திரிகையானது இன்று 60 பக்கங்களாக வெளிவருகின்றது. சுமார் 40 (ஆசார்ய) நூல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

83. தங்களது வெளியீடுகள் மூலம் நல்ல லாபம் கிடைக்கிறதா?

இந்த டிரஸ்டின் நோக்கமே குறைந்தவிலையில் விற்க வேண்டும் என்பதே. பாதி விலைக்கே புத்தகங்களின் விலை நிர்ணயிக்கப்படுகின்றது. மீதி பாதி விலையை டிரஸ்ட் ஏற்கின்றது. மேலும் 'ஸுதர்சனம்' பத்திரிகை ஆரம்பகாலத்தில் 300—சந்தாதாரரைக்கொண்டு ஆரம்பமாயிற்று. இன்று ஆயிரக்கணக்கில் பெருகியுள்ளது. எமது பல வெளியீடுகளில் பல பதிப்புக்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன, சிலவற்றில் தேக்கநிலையும் உண்டு.

84. தாங்கள் 'ஸுதர்சனர் பதில்' என்ற புதிய பகுதியை ஆரம்பித்தமைக்கு என்ன காரணம்? அந்தப் பாணி வெற்றியடைந்துள்ளதா?

ஏளனம் செய்யும் ஒரு சாதாரண விஷயம் சொல்லுகிறேன். யாரையாவது ஒருவன் ஏமாற்றி விட்டான் என்று எழுதுகிறார்கள். ஒருசிலருக்கு பட்டையாக நாமத்தையிட்டு கார்டூன்கள் வரைகிறார்கள். வைணவர்கள் மிகவும் புனிதமாகக் கருதுகின்ற திருமண்ணை இப்படி கேலிக்குரியதாகச் சித்திரிக்கிறார்கள். இம்மாதிரி வைணவ சமயத்தை எவர் அவமதித்தாலும், அல்லது தவறாக எழுதினாலும் அவர்களைக் கண்டிக்கும் வகையில் 'ஸுதர்சனர் பதில்' பாணி அமைந்து வருகின்றது. இதில் வெற்றியா தோல்வியா என்பதனை வாசகர்கள் தான் தெரிவிக்கவேண்டும். இதுவரை ஆயிரத்திற்கு மேற்பட்ட கேள்விகளுக்குப் பதில் அளிக்கப்பட்டுள்ளன. அவை தனிப் புத்தகமாகவும் வெளிவந்திருக்கின்றன,

http://acharya.org

**85.** தங்களது பதிலை ஒப்புக்கொண்டு யாராவது தேவரீருக்கு நேர்மையாக பதில் எழுதி உள்ளனரா?

ஒரு சிலர் எழுதியும் உள்ளனர். ராஜாஜி அவர்கள் ஒருமுறை 'முதலாழ்வார்கள் நம்மாழ்வார் ஆகியோர் சமரசவாதிகள்' என்று எழுதிய கட்டுரை ஒன்றுக்கு நான் மறுப்பு எழுதியபோது அவர் மிகவும் நாணயமாக 'இந்தமாதிரி விஷயங்கள் அதிகம் தெரியாது' என்று ஒப்புக்கொண்டு கடிதம் எழுதினார். திரு கா. ஸ்ரீ ஸ்ரீ அவர்கள் ஆதித்ய ஹ்ருதயம் பற்றிய தமது கூற்றுக்கு எனது மறுப்புரையைக்கண்டு தமது நிலை சரியானது அன்று என்பதனை உணர்ந்ததாகத் தெரிவித்தார். இதேபோல் தீபம் நா. பார்த்தசாரதி அவர்களும் ஒருமுறை எனது கருத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.

**86.** தாங்கள் பிறரைக் கண்டித்து எழுதும்போது மிகவும் கடுமையாக எழுதுகிறீர்கள் என்று ஒரு குற்றச்சாட்டு நிலவிவருகிறது. மிகப் பிரபலமான ஒருவர் 'நீங்கள் பேனாவில் மை தோய்த்து எழுதுவதில்லை, திராவகம் தோய்த்து எழுதுகிறீர்கள்' என்று கூடக் கூறியுள்ளார், இதுபற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

நான் யாரையும் தனிப்பட்ட முறையில் தாக்கி எழுதுவதில்லை. ஆயினும் தனிப்பட்ட முறையில் சிறிதும் நெறிமுறைகள் இல்லாமல் வாழ்ந்து வருபவர்களுக்கு வேதங்களைப் பற்றியோ வைதிக சமயங்களைப்பற்றியோ எழுத அருகதையில்லை என்பதை நான் தைரியமாகக்கூறி வருகிறேன்.

**87.** தாங்கள் நடத்துவது வைணவர்களை மட்டும் சென்றடையக் கூடிய சிறிய பத்திரிகை. ஆனால் மிகப் பிரபலமானவர்கள் எழுதுவது லட்சக்கணக்கான வாசகர்களைச் சென்றடைகிறது. அப்படியிருக்கும் போது தாங்கள் அவர்களைத் தங்களது சிறிய பத்திரிகையில் கண்டிப்பதால் பயன் என்ன? அவர்களது கருத்துக்கள் பரவுவதுபோல் தங்கள் கருத்துக்கள் பரவாமல் போகலாம் அல்லவா?

என்னுடைய பத்திரிகையைப் பெரும்பாலான வைணவர்கள் படிக்கிறார்கள். அவர்கள் உண்மையை உணர்ந்துகொள்ள வேண்டும் என்பதற்காக நான் எழுதுகிறேனே தவிர, லட்சக்கணக்கானவர்கள் படிக்கவேண்டும் என்னும் எண்ணத்தில்

http://acharya.org

அல்ல; என்னைப் பொறுத்த வரையில் லட்சக்கணக்கானவர்களைத் திருத்த வேண்டும் என்ற நோக்கம் எனக்குக் கிடையாது. வைணவர்களாக இருப்பவர்கள் போலி வாதங்களைப் படித்து மனம் மாறிவிடக் கூடாது என்பதை வலியுறுத்தவே நான் எழுதுகிறேன்.

88. மிகவும் தைரியமாக எதிரிட்டு எழுதி வருகின்றீர்கள், இதனால் தங்களுக்கு இடையூறுகள் ஏதும் ஏற்படவில்லையா?

நான் கல்லூரி மாணவனாக இருந்தபோதே திரு டி. கே. சி. அவர்கள் கம்பராமாயணப் பாடலான "விழுமியது சொற்றனை" எனும் பாடலில் வரும் 'முழுமுதல்வன்' என்னும் பதத்திற்குப் பரமசிவன்தான் முழுமுதல்வன் எனக்கூற, அதனை மறுத்துக் கண்டிக்கும் சுபாவம் எனக்கு இருந்தது. தவறு செய்பவர்களைப்பார்த்து வெறுமனே இருக்கக்கூடாது. அதனைக் கண்டிக்கத் தவறக் கூடாது. ஆனால் அதனைப் பண்போடு கண்டிக்கவேண்டும் என்பதே எனது மனஉறுதி, அதனால் எந்த இடையூறும் ஏற்பட்டதில்லை. எதனையாவது எவரிடமாவது எதிர்பார்த்தால் பயப்படவேண்டும். எனது பத்திரிகைக்கு விளம்பரம் எதிர்பார்த்தால் பயப்படவேண்டும், எனது பத்திரிகைக்கு விளம்பரம் கூட எதிர்பார்ப்பதில்லை. 'ஸுதர்சனம்' பத்திரிகை விளம்பரமில்லாத ஒரு பத்திரிகை.

89 சமீபகாலமாகத் தாங்கள் உபந்யாஸங்களிலும், பத்திரிகைகளிலும் சங்க இலக்கியங்கள் - அதிலும் குறிப்பாகப் பரிபாடல் முதலியவற்றிலிருந்து பற்பல சான்றுகளைக் கையாளுகின்றீர்கள், தங்களுக்கு ஸம்ஸ்கிருத பரிச்சயமும் அதே போன்று சங்கநூல்களில் ஈடுபாடும் எப்படி ஏற்பட்டன?

நான் இண்டர்மீடியட்வரை படிக்கும்போது ஸம்ஸ்கிருதத்தை ஒருபாட நூலாகப் பயின்றேன். அபாரமான ஞானம் ஏற்பட்டது, வகுப்பிலேயே முதல் மாணவன் நான் தான், பிரபல வித்வான், ஸ்ரீ உ. வே கோழியாலம் ரங்கநாதாசார்ய ஸ்வாமியிடம் எனது ஸம்ஸ்கிருத ஞானத்தை எம். ஏ. ஸ்டாண்டர்டுக்கு வளர்த்துக் கொண்டேன், தமிழ் 6-வது வரையில் தான் பயின்றேன் என்றாலும் அடியேன் கர்ப்பவாசத்திலேயே கம்பராமாயணம் கேட்டதாக என் திருத்தகப்பனார் பன்முறை என்னிடம் கூறுவார். அதா

http://acharya.org

வது என்னை எனது தாயார் கர்ப்பத்திலே தரித்திருந்த சமயம் என் தகப்பனரும் தாயாரும் ஸ்ரீமான் அனந்தபாரதியிடம் கம்ப ராமாயண உபந்யாஸம் கேட்டனராம். ஆக, எனது தமிழ்ப்பாட மானது கர்ப்பகாலம் முதலே ஆரம்பம் எனலாம். பின்னுளில் சங்க நூல்களைப் பதம் பிரித்து வெளியிட, அவைகளைக் கண்ட போதுதான் பரிபாடல் போன்ற சங்க இலக்கியங்களில் நமது ஸ்ரீ வைஷ்ணவ சித்தாந்தப் புதையல் புதைந்துள்ளதைக் கண்டேன். பின்னர் அவைகளிலேயே என் பெரும் நேரங்களைச் செலவிட்டு 'சங்ககாலத் தமிழர் சமயம்' போன்ற பல நூல்களை ஏராளமான பிரதிகள் அச்சிட்டு. முதல், இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு களில் விநியோகிக்கவும் துணிந்து செயல் பட்டேன்.

90. தாங்கள் எர். ஏ., பி. எல், வரை படித்தும் அட்வகேட் தொழிலில் தங்களை ஈடு படுத்திக்கொள்ளாமல் வைணவ சமயப் பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டமைக்கு என்ன காரணம்?

எம்பெருமானது கடாட்சம் என்றே கொள்ளலாம், நான் ஏற் கனவே கூறியபடி உண்மையை நிலைநாட்டவேண்டும் என்ற ஆவல் எனக்கு மிகவும் அதிகம். வக்கீல் தொழிலில் ஏராளமான பொய்யைப் புகுத்த வேண்டியும் சிலசமயம் நேரிடுமே!

அண்ணங்கராசார்ய ஸ்வாமி போன்ரேருடன் தொடர்பு ஏற் பட்டு அவர்களது காலக்ஷேபங்களினுல் சம்ப்ரதாயத் தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணமே என் ரத்தத்தில் ஊறிவிட் டது. வேறு தொழிலைப் பற்றி எண்ணமே ஏற்படவில்லை.

## 'கள்வாழகர்' பற்றிய கட்டுரைக்கு விளக்கம்

[ஸுதர்சனரின் இந்த விளக்கமும் ஆன்மீகம் நவம்பர்-97 இதழில் வெளிவந்தது.]

ஆன்மீகம் ஏப்ரல்-97 இதழில் 'கள்ளழகர்' என்னும் தலைப்பில் வெளியாகியுள்ள கட்டுரையில் இந்தத்தலம் (திருமாலிருஞ்சோலை) முருகனுக்கும் பெருமாளுக்குப் பொது என்று கருதப்படுகிறது. என்று குறிப்பிடப்பட்டுள்ளது, இதுஉண்மைக்கு முரணுனது. பரிபாடலில் இளம்பெருவழுதியார் என்னும் சங்ககாலப்புலவர் திருமாலிருஞ்சோலை யில் திருமால் கோயில் கொண்டிருப்பதாகப் பாடியிருக்கிருர். ஆழ் வார்கள் பலரும் இதையே வலியுறுத்தியிருக்கிருர்கள். 'மாலிருங் குன்றம்', திருமாலிருஞ்சோலை' என்னும் மலையின் பெயரே அது

http://acharya.org

திருமாலுக்கு மட்டுமே சொந்தம் என்று தெளிவாகக் காட்டுகிறது. பத்துப்பாட்டில் ஒன்றான திருமுருகாற்றுப்படையில் "பழமுதிர் சோலை மலை கிழவோனே" என்பது கடைசி அடி. 'பழம் உதிரும்படியான சோலைகளையுடைய மலைகளில் முருகன் விரவிளையாட்டு விளையாடினான்' என்று நக்கீரர் இங்கு பாடுகிறார். இது பொதுவாக மலைகளைக் குறிக்குமிடம். ஒரு குறிப்பிட்ட இடத்தைக் குறிப்பிட்டதாகக் கொண்டாலும், பழமுதிர் சோலை என்னும் பெயரிலிருந்தே இது திருமாலிருஞ்சோலையைக்காட்டிலும் வேறுபட்டது என்று விளங்குகிறது.

சில வருடங்களுக்கு முன் இதை ஒரு முருகன் தலமாக மாற்ற வேண்டும் என்று எண்ணி, சிலர் பெருமாள் கோயிலுக்குச் சொந்தமான மண்டபத்தில் ஒரு முருகன் சிலையை இரவோடிரவாக வைத்துப் பழமுதிர்சோலை என்ற ஒரு பெயர்ப் பலகையும் அங்கு வைத்து இதுதான் பழமுதிர்சோலை என்று பிரசாரம் செய்யத் தொடங்கினார்கள். வைஷ்ணவர்கள் வழக்குத் தொடுத்து, பல வருடங்கள் கழிந்த பின் சென்னை உயர் நீதிமன்றத்தில் கட்டின கோயிலை இடிக்கவேண்டாம் என்று வைஷ்ணவர்கள் பெருந்தன்மையுடன் ஒப்புக்கொண்டதால், அந்தக் கோயில் அழகர்கோயில் தேவஸ்தானத்தின் கீழ் ஒரு உபகோயிலாக ஆக்கப்பட்டது. பழமுதிர் சோலை என்னும் பெயர்ப் பலகையும் அகற்றப்பட்டது. ஆகையால் அழகர் மலை திருமாலுக்கும் முருகனுக்கும் பொது என்று கருதப்படுகிறது என்று தாங்கள் வெளியிட்டிருப்பது தவறானதும் ஆதாரமற்றதும் ஆகும்.

எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்,
ஆசிரியர் 'ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்'

S. முரளி. அந்தணல்லூர்.

91. தினமலர் 97 நவம்பர் 15, 16 தேதி இதழ்களில் "ஆன்மீகம் அறிவோமா" பகுதியில் திருவிசலூர் ஸ்ரீதர ஐயாவாளைப் பற்றிய தொடர் கட்டுரை 3, 4 பகுதிகளில் திரு ம. ராமகிருஷ்ணன் என்பவர் பல சிவவிஷ்ணு ஐக்கிய வாதங்களை ஐயாவாள் செய்ததாக எழுதியுள்ளார். அப்பையதீக்ஷிதரைப்பற்றியும் ஒரு செய்தியை எழுதியுள்ளார். இவற்றை விமர்சிக்க வேண்டுகிறேன்.

http://acharya.org

"நமக்கு வேதம் பிரமாணம், வேதங்களில் சிவபரமாகவும் விஷ்ணுபரமாகவும் ஸூக்தங்கள் காணப்படுகின்றன. அவை 'சிவனே பரம்பொருள்' என்றும் 'விஷ்ணுவேபரப்பிரம்மம்' என்றும் கூறுகின்றன. எனினும் பிறதெய்வ நிந்தனை கிடையாது; ஒரே பரம்பிரம்மத்தின் வெவ்வேறு வடிவங்களே சிவனும் திருமாலும் என்னும் உண்மையை இங்கே நாம் புரிந்துகொள்ளவேண்டும். ஒரு நடிகன் பல வேடங்களில் நடித்தாலும் நடிகன் ஒருவனேயாதல் போன்றதே இது" என்று எழுதுகிறார். வேதங்களில் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் மட்டும் ஸூக்தங்கள் காணப்படவில்லை இந்திரன் முதலான மற்ற பல தெய்வங்களுக்கும் ஸூக்தங்கள் காணப்படுகின்றன. பிரமனின் பெயரான "ஹிரண்யகர்ப$_4$ன்" என்னும்பெயரை முதன்மையாகக்கொண்ட எட்டு மந்திரங்கள் கொண்ட ஸூக்தமும் காணப்படுகிறது. அதே வேதங்களே தேவர்களுக்கெல்லாம் தலைவனான ஒருதேவனே பரமாத்மா என்றும் மற்ற தெய்வங்கள் அவனுடைய அங்கங்கள் என்றும், அந்த தேவதேவனை உபாஸித்தால் தான் மோக்ஷம் கிடைக்கும் என்றும், மற்றவர்களை உபாஸித்தால் அற்பபலன்களே கிடைக்கும் என்றும் முழங்குகின்றன, ஹிரண்யகர்ப்பன் எனப்படும் பிரமன் பரமாத்மாவான நாராயணனிடமிருந்து அவனது உந்தித்தாமரையில் பிறந்தான் என்றும், அப்பிரமனுக்கும் உஷஸ் என்னும் தேவிக்கும் ஆண் பெண் சேர்க்கையினால் உருத்திரன் பிறந்தான் என்றும் கூறுகின்றன. திரிபுர ஸம்ஹாரத்தைச் சொல்லும்போது வேதம் 'ருத்$_3$ரோவை க்ரூர:" [ருத்ரன் கொடிய தெய்வம்] என்று சொல்லி, "தேவர்களிடம் 'பசுபதியாக வேண்டும்' என்று வரம் வேண்டிப்பெற்று, அதன் பிறகே விஷ்ணுவாகிய அம்பைக்கொண்டு திரிபுரம் எரித்தான்" என்று கூறுகிறது. இப்படி நாராயணனுக்கு எந்தத்தாழ்வும் வேதத்தில் சொல்லப்படவில்லை. ஆகையால் வேதத்தில் பரம்பொருளைக் குறிக்கும்போது சொல்லப்பட்ட நாராயணன், ஹரி, அனந்தன், ஹிரண்யகர்ப$_4$ன், பிரஜாபதி, சிவன், உருத்திரன், இந்திரன், ஆகாசம், அக்னி, வாயு முதலிய எல்லாப் பெயர்களும் பரப்ரம்மமாகவும், பரமாத்மாவாகவும், பரஞ்சோதியாகவும், பரதத்துவமாகவும் தைத்திரீய நாராயண வல்லியில் ஓதப்பட்ட நாராயணனுடைய பெயர்களே என்றும், தன்னால் படைக்கப்பட்ட

http://acharya.org

சேதநாசேதநங்களுக்கு அவன் தன்பெயர்களில் ஒவ்வொன்றைக் கொடுத்தான் என்றும், வேதங்களைக் கரைகண்ட மஹாசார்யர்கள் நிர்ணயித்துள்ளார்கள். ஆதிசங்கரரும் மத்வரும் தம்பாஷ்யங்களில் இக்கருத்தையே வெளியிட்டிருக்கின்றனர். ''நாராயண'' சப்தத்தை மற்ற தெய்வங்களுக்குச் சேர்ப்பதற்குப் பாணினியின் இலக்கண விதி தடையாய் இருப்பதை ஆசார்யர்கள் காட்டியிருக்கிறார்கள். மஹோபநிஷத், ''பிரளய காலத்தில் நாராயணன் ஒருவனே இருந்தான், பிரமனும் இல்லை, சிவனும் இல்லை'' என்று முழங்குவதையும், நாராயண உபநிஷத் ''நாராயணனிடமிருந்து பிரமனும் சிவனும் இந்திரனும் மற்றும் அனைத்துலகமும் உண்டாகிறது'' என்று முழங்கியுள்ளதையும் காட்டியிருக்கிறார்கள், இவையொன்றையும் உணராமல் ''ஒரே நடிகன் பலவேடங்களில் நடிப்பதைப் போன்றதே இது'' என்று கூறுவது ஆராய்ச்சியின்மையின் விளைவே. இக்கட்டுரைகளில், திருமாலையே பரம்பொருளாகக் கூறுவது என்று அனைவரும் அறிந்த ஸ்ரீராமாயணத்தையும்மஹாபாரதத்தையும் ''ராமாயணதாத்பர்யஸங்க்ரஹம்'' ''மஹாபாரததாத்பர்யஸங்க்ரஹம்'' என்னும் நூல்களில் அப்பையதீக்ஷிதர் சிவபரமானவை என்று எழுதியது விஷ்ணுபரத்வவாதம் செய்பவர்களைக்கண்டனம் செய்வதற்காக எழுதியதேயொழிய தன்கருத்தல்ல என்று அவரே ஒப்புக்கொண்டதாக எழுதியிருப்பது பாராட்டத்தக்கது, பதினெட்டு புராணங்களை இயற்றிய வியாசர், இறுதியில்பாடிய பாகவதத்தில் 'பேதபாவத்தையும் ஏற்றத் தாழ்வு கற்பிப்பதையும் விட்டுவிடவேண்டும்' என்று கூறியதாக இக்கட்டுரையில் உள்ளது, ஒன்றோடொன்று முரண்பட்ட பதினெட்டு புராணங்களையும் ஒருவரே (வியாசரே) இயற்றியிருப்பது இயலாத காரியம், அவருடைய தந்தையான பராசரர் இயற்றிய ஸ்ரீவிஷ்ணுபுராணத்தை வியாசர் எப்படி இயற்றியிருக்கமுடியும்? ஆகையால் பதினெட்டு புராணங்களையும் ஸத்வ ரஜஸ் தமோகுணங்களையுடையவர்களுக்கு அந்தந்தகுணங்களையுடைய தெய்வங்களைக் கூறும் புராணங்களை ஒவ்வொருவரைக்கொண்டு பரவச்செய்தார் என்றே கொள்ளவேண்டும். பாகவதத்தில் ''தமோகுணமுடைய சிவனைக்காட்டிலும் சிறந்த ஸத்வகுணமுடைய விஷ்ணுவேபரமாத்மா'' என்று பலவிடங்களில் முழங்கியிருப்பதை நாம் ஸாத்விக விஜயத்தில் காட்டியிருக்கிறோம், 'ஆன்மீகம்' என்னும் பெயரில் பொய்யான செய்திகளைப்பரப்பி தினமலர் போன்ற பத்திரிகைகளில்

http://acharya.org

வெளிவரும் ஆன்மீக வியாபாரக் கட்டுரைகளை அறிவுள்ளவர்கள் கூர்க்கடைக் கொள்ளவேண்டும்.

K. ஜகந்நாதன், சென்னை-90.

92. சென்னைப் பல்கலைக்கழகத்தில் 26—11—97 தொடங்கி நடைபெற்ற ஸுதர்சனம் பொன்விழாக் கருத்தரங்கில் ஓர் அமர்வுக்குத் தலைமையேற்று நடத்திய தமிழ்ப் பெரும் புலவர் ஒருவர் "திருமுருகாற்றுப்படையில் முருகனும் வீடுபேறளிப்பவன்" என்று கூறியிருப்பதாகச் சொன்னதைக் கேட்டேன் அதை விமர்சிக்க வேண்டுகிறேன்,

திருமுருகாற்றுப் படையில் முருகன் "பெறுதற்கரிய பரிசில்" அளிப்பதாக உள்ளதேயொழிய, பரிபாடல்களில் 'மறுபிறப்பை அறுப்பவன்' என்றும், "வீறுபெறுதுறக்கத்தைத் திருமால் தவிர வேறு எவராலும் அளிக்கமுடியாது" என்றும் திருமாலுக்குப்பெருமை கூறியதுபோல் முருகனுக்குக் கூறவில்லை. அமர்வு முடிந்தவுடன் நமது நண்பரான புலவரிடம் நாம் இதை எடுத்துக்காட்டினோம்.

திருவெள்ளறை கீழைத் திருமாளிகை அம்மாள் ஸ்ரீ திருவேங்கடாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.

93. ஸ்ரீ தத்வவிஷயமாகத் தாங்கள் ஸுதர்சனத்தில் எழுதி வரும் கட்டுரைகளை ஸுதர்சனத்தில் வெளியான தீர்ப்புகளைத் தவிர வேறுபத்திரிகைகள் எவையாவது விமர்சித்துள்ளனவா?

ஈஸ்வர புரட்டாசி இதழ் தொடங்கி "ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா" பத்திரிகை ஸ்ரீதத்வவிஷயத்தைப் பற்றிய நம் கட்டுரைகளை விமர்சிக்கத் தொடங்கியுள்ளது. ஆனால் நம்முடைய கேள்விகளையோ விலாசத்தையோ அச்சிடவில்லை. ப்ரியாவின் விமர்சனங்களை ஒன்று விடாமல் எடுத்து "ப்ரியா ஸுதர்சன ஸாத்விக ஸம்வாதம்" என்னும் தலைப்பில் இவ்விதழிலிருந்து [ஸுதர்சனம் 601 ஈஸ்வர மார்கழி 25—12—97] நாம் பதிலளிக்கிறோம், விசிஷ்டாத்வைத [illegible]ரக்ஷணம் தொடங்கி நாம் எழுதியவைகளும், பலருடைய தீர்ப்புகளும் இந்தச் சர்ச்சை நிறைவுபெற்றவுடன் 'ஸ்ரீதத்வஸர்வஸ்வம்' என்னும் தலைப்பில் தனிப்புத்தகமாக வெளியிடப்படும்.

http://acharya.org

ந்யாய வேதாந்த வித்வான் ஆசுகவி ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீநிவாஸாசாரியார். 5, லக்ஷ்மீ நிவாஸ், சுதர்சன காலனி, தாணே ஈஸ்டு-400608 (மஹாராஷ்ட்ரா)

94 காலத்திற்கேற்ப ஸ்ரீவைஷ்ணவர்கள் சில நடைமுறைகளை மாற்றிக்கொள்ளவேண்டுமென்று நான் கருதுகிறேன். இதற்காக ஓர் கட்டுரையை மடாதிபதிகளுக்கும் பத்திரிகை ஆசிரியர்களுக்கும் அனுப்பியிருக்கிறேன். இந்த விஷயங்களை வைணவர்கள் முன்வைத்து உங்களது கருத்துக்களையும் தெரிவிக்கக்கோருகிறேன். என் கருத்துக்களாவன :—

(1) வைணவர்கள், சைவர்கள் (அத்வைதிகள்), மாத்வர்கள் என்னும் மூன்று பிராம்மணப் பிரிவுகளிடையே விவாஹங்கள் நடந்து வருகின்றன. காமகோடிப் பெரியவர் பலவருடங்களுக்கு முன் சொன்னது போல் 'இவ்விவாஹங்கள் மாஸ்த்ர ஸம்மதமே' என்று அனைவரும் அறிவித்து விட்டால் வேறு வர்ணங்கள் மதத்தினரிடையே விவாஹங்கள் நிகழாமல்தடுக்கலாம். (2) பிராம்மணர்கள் அநுஜ்ஞையின்போது "ஸர்வேப்₄யோ ப்₃ராஹ்மணேப்₄யோ நம:" என்று பிரார்த்திக்கின்றனர்; ஸ்ரீவைஷ்ணவர்கள் "ஸர்வேப்₄ய: ஸ்ரீவைஷ்ணவேப்₄யோ நம:" என்று சொல்லி வருகின்றனர். ஸ்ம்ருதிகளில் உபநயனம் முதலானவற்றைச் சொல்லும்போது 'ப்₃ராஹ்மண' மப்₃த₃ப்ரயோகமும் உள்ளதேயொழிய "ஸ்ரீவைஷ்ணவ" மப்₃த₃ப்ரயோகமும் இல்லாமையால் அனைவரும் "ப்₃ராஹ்மணேப்₄யோ நம:" என்றே சொல்லலாம். ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு என்று தனியாக ஒரு சாஸ்திரம் இல்லை (3) பிராம்மணர்களல்லாத பாகவதர்களுக்கும் திவ்யப்ரபந்தத்தைக் கற்றுக்கொடுத்து அவர்களையும் உற்சவகாலங்களில் பெருமாளுக்கு ஸேவைசெய்ய அனுமதிக்கலாம்.

இம்மூன்று விஷயங்களைப்பற்றியும் முறையே நம் கருத்தைத் தெரிவிக்கிறோம்:—

(1) த்ரிமத ப்₃ராஹ்மணர்களிடையே விவாஹங்கள் ஒருசில நடக்கின்றன. 'இதை மடாதிபதிகள் முதலான அனைவரும் ஏற்றுக்கொண்டு பிரகடனப்படுத்தி விடலாம்' என்று கூறுவதில், வைணவர்களுக்குப் பலபா₃த₄கங்கள் உள்ளன. நம் வைஷ்ணவ மதத்தில் "புறந்தொழாமை" என்பது அடிப்படைக்கொள்கையாக ஆசார்யர்களால் வற்புறுத்தப்பட்டுள்ளது. மற்ற இரு பிரிவினருக்கும் இது கிடையாது. ஏற்கனவே வைஷ்ணவ ஸமூஹத்தில் பல காரணங்களால் வைஷ்ணவ ப்₃ராஹ்மணர்களிடையே புறந்

http://acharya.org

தொழாமைக் கொள்கை மிகுதியாகக் கைவிடப்பட்டு வருகிறது. விவாஹங்களை மற்ற பிராம்மணர்களோடு வைஷ்ணவர்கள் செய்து கொள்ளலாம் என்று அறிவித்தால், சில காலங்களுக்குப்பிறகு புறந்தொழாமைக் கொள்கையே வைணவர்களிடையே அழிந்துவிடும். வைணவ ஸமூஹத்தில் எவருக்குமே நம்பூர்வாசார்யர்களின் கருத்துப்படி மோக்ஷமடையத் தகுதியில்லாமை விளைந்துவிடும். விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதத்தின் தனித்தன்மை அழிந்துவிடும். இப்படி அறிவித்துவிடுவதால் மட்டும், காதல் முதலான லௌகிககாரணங்களால் இதரவர்ணத்தாரோடும், இதர மதத்தினரோடும் பிராம்மணர்கள் சிலர் விவாஹம் செய்வது நின்றுவிடாது. ஆகையால் ஆத்மநாசத்தைவிளைக்கக்கூடிய இக்கருத்தை ஏற்பதற்கில்லை.

(2) மனு முதலான ஸ்ம்ருதிகர்த்தாக்கள் காலத்தில் பிராம்மணர்கள் அனைவரும் விஷ்ணு பரத்வ ஞானம் உடையவர்களாய் இருந்தார்களாகையாலே ஸ்மார்த்தர் வைஷ்ணவர் என்னும் பிரிவு அவர்களிடையே ஏற்படவில்லை. ஆகையால் ஸ்ம்ருதிகளில் 'ப்ராஹ்மண' என்னும் வழக்கேயுள்ளது. 'பராசர விசிஷ்ட பரம தர்மசாஸ்திரம்' 'வ்ருத்தஹாரீத ஸ்ம்ருதி' முதலான வைஷ்ணவர்களுக்கேயுரிய ஸ்ம்ருதிகளும் உண்டு. நம்முடைய விஷ்ணுசித்த விஜயம் ஸ்ம்ருதி ப்ரகரணத்தில் அவற்றை விரிவாக விளக்கியிருக்கிறோம். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் வரையில் (தமிழ் நாட்டில் சங்ககாலம் வரையில்) பிராம்மணர்கள் அனைவரும் விஷ்ணுபரத்வ ஜ்ஞானம் உடையவர்களாகவே இருந்தனர். பிற்காலத்தில் காபாலிகம், காளாமுகம், சாக்தம் முதலான மதங்கள் வலுப்பெற்றபோது பிராம்மணர்களிலேயே பலர் சைவர்களாகவும், சாக்தர்களாகவும் மாறினர். ஆழ்வார்கள காலத்திற்கு முன்பே இந்நிலை தொடங்கிவிட்டது. அப்போது வில்லிபுத்தூர்ப் பகவர் என்னும் முக்கோற்பகவர் (த்ரிதண்டி ஸந்யாஸி) திருவஹீந்த்ரபுரத்தில் மற்ற பிராம்மணர்கள் நீராடும் துறையை ஒதுக்கி, தனித்துறையில் தம்முடைய அனுஷ்டானங்களைச் செய்து வந்தார், மற்ற பிராம்மணர்கள் அவரிடம் அதற்கான காரணங்களைக் கேட்டபோது,

"விஷ்ணுதாஸா வயம் யூயம் ப்ராஹ்மணா வர்ணதர்மிண:।
அஸ்மாகம் தாஸவ்ருத்தீநாம் யுஷ்மாகம் நாஸ்தி ஸங்கதி:॥

http://acharya.org

நாஸ்தி ஸங்கீ₃திரஸ்மாகம் யுஷ்மாகஞ்ச பரஸ்பரம்|
வயம் து கிங்கரா விஷ்ணோ: யூயம் இந்த்₃ரிய கிங்கரா:||
அத்₃யப்ரப்₄ருதி ஹே லோகா: யூயம் யூயம் வயம் வயம்|
அர்த்த₂காமபரா யூயம் நாராயண பரா வயம்||

["நாங்கள் விஷ்ணுதாஸர்கள். நீங்கள் வர்ணத₄ர்மத்தை மட்டுமே பற்றி நிற்கும் பிராம்மணர்கள், ப₄க₃வத்₃ ப₄ாக₃வத கைங்கர்யம் செய்வதையே இயல்பாகக் கொண்ட எங்களுக்கும் உங்களுக்கும் ஒருசேர்த்தியும் இல்லை எங்களுக்கும் உங்களுக்கும் ஒருவரோடொருவர் கொள்வினை கொடுப்பினை முதலான எந்தத் தொடர்பும் இனி இல்லை. நாங்கள் விஷ்ணுவிற்கு அடிமைப்பட்டவர்கள். நீங்கள் இந்த்₃ரியங்களுக்கு அடிமைப்பட்டவர்கள், கேவல பிராம்மணர்களே! இன்று முதல் நீங்கள் நீங்கள்தான். நாங்கள் நாங்கள்தான். நீங்கள் அர்த்த₂காமங்களில் (பொருள் இன்பங்களில்) ஈடுபட்டவர்கள்; நாங்கள் நாராயணனிடம் ஈடுபட்டவர்கள்] என்று சொல்லி வைஷ்ணவ ப்ராம்மணர்களையும், இதர ப்ராம்மணர்களையும் ஒருவரோடொருவர் தொடர்பு இல்லாதபடி வேறுபடுத்திப் பிரித்து விட்டார் வில்லிபுத்தூர்ப் பகவர் என்னும் இச்செய்தி பூர்வாசார்யர்களால் எடுக்கப்பட்டுள்ளது, 'துறை வேறிடுவித்தது' என்று இச்செய்தி பூர்வாசார்ய க்ரந்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படிப் பிரிக்கப்பட்டபின்பு வைதிக கர்மங்களில் ஸ்ரீவைஷ்ணவர்கள் ப்₃ராஹ்மண ஶப்₃த₃த்திற்குப் பதிலாக ஸ்ரீவைஷ்ணவ ஶப்₃த₃த்தைப் பயன் படுத்தியிருக்க வேண்டும். "நாலு வேதங்களையும் ஓதியவனானாலும் 'வாஸுதே₃வனே பரமாத்மா' என்று உணராத பிராம்மணன் வேதமாகிற சுமையைச் சுமக்கும் கழுதையை ஒத்தவன்" "அத்தகைய ப்ராம்மணனைக் காட்டிலும் நாய் மாமிசம் தின்பவன் உயர்ந்தவன்" முதலான ப்ரமாணங்களைப் பூர்வாசார்யர்கள் கையாண்டுள்ளார்கள், ஆகையால் உண்மையான் வைஷ்ணவர் எவரும் வைஷ்ணவத்வம் இல்லாத பிராம்மணர்களுக்கு நமஸ்காரம் செய்வது ஸ்வரூபவிருத்தமாகும். ஆகையால் "ப்₃ராஹ்மணேப்₄யோ நம:" என்று மாற்றுவது பூர்வாசார்யர்கள் திருவுள்ளத்திற்கு உகப்பாகாது.

(3) தற்காலத்தில் தென்கலை அல்லது வடகலைக் கோயில்களில் அந்தந்தப் பிரிவைச்சேர்ந்த ஸ்ரீவைஷ்ணவ ப்ராஹ்மணர்கள் தத்தம் கோயில் பழக்கவழக்கங்களையொட்டி அருளிச்செயலை ஸேவிக்கும் வழக்கம் உள்ளது இதை மாற்றுவது தற்போது நிலவிவரும்

http://...

உரிமைகளில் குறுக்கிடுவது ஆகும், ஆகையாலே பல சண்டைகளுக்கும் வழக்குகளுக்கும் வழிவகுக்கும், அந்தணரல்லாத பாகவதர்கள் திருவிழாக்காலங்களில பஜனை கோஷ்டிகளாக திவ்ய ப்ரபந்தங்களை இசைத்து வருகின்றனர். இந்த பஜனைக் கோஷ்டிகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளலாம்,

எனவே இவர் தெரிவித்துள்ள மூன்று ஆலோசனைகளும் ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்தால் ஏற்கத்தக்கவை அல்ல என்பது நம் கருத்து.

திருவெள்ளறை கீழத்திருமாளிகை அம்மாள் ஸ்ரீ திருவேங்கடாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.

95. "ராமர் பிறந்த இடம் அயோத்தி என்கின்றனர், தசரதனின் இருப்பிடம் அயோத்தியாகும், தசரதனின் மனைவி கௌசல்யாவின் தாய்வீடு கோசலைநாடாகும். நமது வழக்கப்படி முதல் குழந்தை தாய்வீட்டில்தான் பிறக்கும். அதன்படி பார்த்தால் ராமர் பிறந்த இடம் கோசலைநாடாகும், ஆனால் ராமர் பிறந்தஇடம் அயோத்தி என்கின்றனர். கிருபானந்தவாரியார் இருந்தால் அவரைக் கேட்டிருப்பேன். அவர் மறைந்து விட்டார்'' என்று மாண்புமிகு முதலமைச்சர் மு. கருணாநிதி பேசியது தினமலர் 8-2-98 இதழில் வெளியாகி உள்ளது, இதை விமர்சிக்கவேண்டுகிறேன்,

கிருபானந்தவாரியார் இறந்து விட்டாலும் வால்மீகி ராமாயணத்தையும் கம்பராமாயணத்தையும் நன்கு கற்ற பல வடமொழி தென்மொழி அறிஞர்கள் நம்நாட்டில் இப்போதும் இருப்பது ஏனோ நம் முதல்வர் கண்களுக்குப் புலப்படவில்லை. அவர்களைக் கேட்டிருந்தால், வால்மீகிராமாயணத்திலும், கம்பராமாயணத்திலும், துளசிராமாயணம் போன்ற மற்றமொழி ராமாயணங்களிலும் ராமர், பரதர், லக்ஷ்மண சத்ருக்னர்கள் ஆகிய நால்வருமே அயோத்தியிலேயே அடுத்தடுத்த நாட்களில் முறையே புனர்பூசம். பூசம், ஆயில்யம் என்னும் நக்ஷத்திரங்களில் பிறந்தார்கள் என்று தெளிவாகக் கூறப்பட்டிருப்பதை உணர்த்தியிருப்பார்கள், பிரசவத்திற்கு மனைவிகளைப்பிறந்தவீட்டிற்கு அனுப்பும் பழக்கம் சக்ரவர்த்திகள் குடும்பத்திற்குக்கிடையாது. ஆகையால் கௌஸல்யையைக் கோசலநாட்டிற்கும், கைகேகியினைக் கேகயநாட்டிற்கும், சுமித்திரையை அவள் பிறந்த ஊருக்கும் அனுப்புவதற்கு இடமேயில்லை,

திருவெள்ளறை கீழத்திருமாளிகை அம்மாள் ஸ்ரீதிருவேங்கடாசார்ய ஸ்வாமி, 43 மேலச்சித்திரைவீதி, ஸ்ரீரங்கம்-620006. (96-99)

96. தினமலர் வாரமலர் [1-3-98] இதழில் வெளிவந்துள்ள "பன்னிரு திருமுறைகள்" வெளியீடுபற்றிய விளம்பரத்தில் சங்ககாலத்தில் பத்துப்பாட்டு. எட்டுத்தொகை போன்ற ஒப்பற்ற இலக்கியங்களில் வீரம் காதல் முதலானவற்றைப் பற்றிப் பேசியிருக்கிறதேயொழிய ஆன்மாவைப் பற்றியோ அது வீடு பேறடையும் வழியைப்பற்றியோ சங்கப்பாடல் எதுவும் வாய்திறக்கவேயில்லை. பக்தி மார்க்கத்தைப் புகுத்தி முத்திக்கு வித்திட்ட இலக்கியங்களில் பன்னிருதிருமுறைகள் முதலிடம் பெறுகின்றன" என்று எழுதப்பட்டுள்ளதை விமர்சிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

"சங்கஇலக்கியத்தில் ஆன்மாவைப்பற்றியோ, அது வீடு பேறடையும் வழிபற்றியோ, வாய் திறக்கவேயில்லை" என்று எழுதியது முற்றிலும் தவறு. எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான பரிபாடலில் திருமாலைப்பற்றிய பாடல்களில "திருமாலே உலகனைத்தையும் படைத்து அளித்து அழிக்கும் முழு முதல்வன்" என்றும், "மறுபிறப்பை அறுத்து ஆன்மாக்களுக்கு வீடு பேற்றை அளிக்கக்கூடியவன்" என்றும், "எல்லாம் அறிந்தவனாயிருக்கை, எங்கும் வியாபித்திருக்கை, எல்லாம் வல்லவனாயிருக்கை முதலான பரம்பொருளுக்கேயுரிய பெருமைகளையுடையவன்" என்றும் "இப்பெருமைகளெல்லாம் திருமாலுக்கு வேதங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன" என்றும் பலவிடங்களில் தெளிவாக முழங்கப்பட்டிருக்கின்றது. சிவன், முருகன், காளி முதலான மற்ற எந்த தெய்வங்களுக்கும் சங்க நூல்களில் இப்பெருமைகள் எதுவும் சொல்லப்படவில்லை. "மாஅயோயே மாஅயோயே" மறுபிறப்பு அறுக்கும் மாசில் சேவடி—மணிதிகழ் உருபின் மாஅயோயே" என்று மூன்றாம் பரிபாடலின் தொடக்கத்திலேயே திருமால் மறுபிறப்பையறுக்கக் கூடியவன் என்று முழங்கப்பட்டது. பதின்மூன்றாம் பரிபாடலில் "இருமை வினையும் இல ஏத்துமவை' என்று திருமாலைத் துதிப்பவர்களுக்கு இருவினைகளும் அழியும்' என்று சொல்லப்பட்டது. "நாறு இணர்த்துழாயோன் நல்கின் அல்லதை ஏறுதல்

http://acharya.org

எளிதோ வீறுபெறு துறக்கம்" என்று பதினைந்தாம் பரிபாடலிலும் வீடு பேறு அளிக்க வல்லவன் திருமாலைத் தவிர வேறு எவருமில்லை என்றும் மிகத்தெளிவாகச் சொல்லப்பட்டது. சங்ககாலத்துக்குச் சில நூற்றாண்டுகள் பிற்பட்ட திருக்குறள் முதலான பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் காலத்திலும் இந்நிலையே தொடர்ந்தது. அதற்கும் பிற்பட்ட களப்பிரர்கள் காலத்திலேயே சைவ ஆகமங்களையும் சைவ புராணங்களையும் கொண்டு திருமாலுக்குத் தாழ்வையும் சிவனுக்கு முழு முதன்மையையும் கூறும் சைவமதம் தமிழ் நாட்டில் முதன் முதலாகத் தோன்றிற்று. அக்காலத்தில் தோன்றிய ஆழ்வார்கள் அதைமறுத்து வேத மதமான வைணவமதத்தை நிலைநாட்டினர். ஆழ்வார்களை மறுக்கும் முறையிலேயே பன்னிருதிருமுறைகள் பிறகாலத்தில் படிப்படியாக நாயன்மார்களால் தோற்றுவிக்கப்பட்டன. வேதங்களையும், ராமாயணம், மஹாபாரதம், பகவத்கீதை, ஸாத்விக புராணங்கள் முதலானவற்றையும் அநுசரித்து ஆழ்வார்கள் திருமாலுக்குச் சொன்ன பெருமைகளை எல்லாம் சைவாகமங்களையும், தாமஸமான சைவபுராணங்களையும் அநுசரித்து சிவனுக்கு ஏற்றிக்கூறினர் நாயன்மார்கள். இவ்வுண்மைகளை நாம் நம்முடைய சங்ககாலத் தமிழர் சமயம், சாதி மத ஆராய்ச்சி, தமிழகத்தில் தத்துவ சமய வளர்ச்சி முதலான நூல்களில் அசைக்கவொண்ணாதபடி நிலைநாட்டியிருக்கிறோம். தினமலர்போன்ற பொதுஜனப் பத்திரிகைகள் தங்கள் பத்திரிகைகள் விற்பனையாகவேண்டுமென்பதற்காக உண்மையை மறைத்துப் பொய்களைத் தொடர்ந்து பரப்பி வருவது மிகவும் வருந்தத்தக்கது.

97. தினமலர் வாரமலர் [1-3-98] இதழில் ஞானந்தம் பகுதியில் 'புராணத்தில் கூறப்பட்டுள்ள நடாத்தூர் அம்மாள் என்ற பக்தை பாலைக்காய்ச்சி, விரலால் தொட்டு சூடு பதமாயிருக்கிறதா என்று பார்த்துவிட்டு நைவேத்யம் செய்வார்" என்று வெளியாகியுள்ளதை விமர்சிக்கவும்.

இந்தச்செய்தி புராணத்தில் கூறப்பட்டுள்ளதாக எழுதியது தவறு. நடாதூர் அம்மாள் என்பவர் ராமாநுஜருக்குச்

http://acharya.org

சிலகாலத்திற்குப்பின் அவதரித்த ஸ்ரீவைஷ்ணவபூர்வாசார்யர்களில் ஒருவர்; வரதாசார்யர் என்று பெயர் பெற்றவர். வாரமலர் செய்தியில் சொல்லியதுபோல் பெண்பாலல்ல, ஆண் மகனே. பெருமாளிடம் தாயைப்போல் பரிவு காட்டியதால் அம்மாள் என்னும் சிறப்புப் பெயர் பெற்ருர் இவர் என்று வைணவ நூல்கள் கூறும்.

98. தினமலர் வாரமலர் 22-2-98 இதழில் "அறிவோமா ஆன்மீகம்" பகுதியில் "கங்காதீர்த்தம் புனிதமானது என்கிருர்களே ஏன்?—இது தேவலோகத்திலிருந்து பரமசிவனின் சடையில் விழுந்து, பிறகு விஷ்ணுவின் பாதங்கள் வழியாக பூலோகம் வருவதால் இதில் தெய்வீகம் உள்ளது" என்று எழுதப்பட்டுள்ளது. இதை விமர்சிக்கக்கோருகிறேன்.

"சதுமுகன் கையில் சதுப்புயன் தாளில்
சங்கரன் சடையினில் தங்கி
கதிர்முக மணிகொண்டு இழிபுனல் கங்கைக்
கண்டமென்னும் கடிநகரே"—[பெரியாழ்திரு 4-7-3]

என்று திருமால் திரிவிக்கிரமாவதாரம் எடுத்துத் தன் திருவடியை உயர நீட்டியபோது, பிரமன் அதை விளக்கியதாகவும் (கழுவியதாகவும்), அந்த ஸ்ரீபாத தீர்த்தத்தை சிவன் தன் பாபம் போவதற்காகத் தலையில் தரித்ததாகவும் பெரியாழ்வார் பாடியிருக்கிருர். இந்த விருத்தாந்தத்தை விளக்கும் ஈஶ்வரஸம்ஹிதை வசநங்களையும், ஸ்ரீபாகவத வசநங்களையும் பூர்வாசார்யர்கள் எடுத்துக்காட்டியிருக்கிருர்கள். இப்படியிருக்க ஒரு ஆதாரமும் காட்டாமல் சிவனின் சடையில் விழுந்து பிறகு விஷ்ணுவின் பாதங்கள் வழியாக பூலோகம் வந்தது எனத் திரித்து எழுதுவது விஷ்ணுவின் பெருமையைப் பொறுக்காமையாலேயே என்று விளங்குகிறது.

99. தினமலர் நாளிதழில் 'ஆன்மிகம் அறிவோமா என்னும் தலைப்பில் அத்யாத்ம ராமாயணம் என்னும் ஒரு நூலில வசிஷ்டர் அத்வைத தத்துவத்தை ராமன் முதலானோருக்கு உபதேசம் செய்ததாக அடிக்கடி எழுதப்படுகிறது. இப்படி ஒரு ராமாயணம் இருப்பது உண்மையா?

http://acharya.org

உண்மையில் இப்படி ஒரு இராமாயணம் முற்காலத்தில் இருந்திருந்தால் ஆதிசங்கரரும் அவருக்குப்பின் வந்த அவருடைய சிஷ்ய பரம்பரைகளும் இதை ப்ரமாணமாக எடுத்திருப்பார்கள். ஆதிசங்கரர் காலத்திற்குப் பிறகு பல நூற்றுண்டுகள் வரை அப்படி யாரும் எடுக்கவில்லை. விசிஷ்டாத்வைத, த்வைதமத ஆசார்யர்களும் இதை எடுத்துக் கண்டிக்கவில்லை. இதிலிருந்தே ஒரு சில நூற்றுண்டுகளுக்குள் அத்வைதிகளால் கற்பனையாக எழுதப்பட்டது இந்நூல் என்று விளங்குகிறது.

P. S. அழகியமணவாளன், ஸ்ரீரங்கம்.

**100.** 26-2-98 தினமலர் நாளிதழில் காமகோடி ஜயேந்திரர் 'ஈஶ்வரனே எல்லாவற்றிலும் மேலானவர். அதிலும் மேலானவர் பரமேஶ்வரனே' என்று பேசியதாக வெளிவந்துள்ளது. இதை விமர்சிக்க வேண்டுகிறேன்.

ஈஶ்வரன் என்றும் பரமேஶ்வரன் என்றும் பெயர்படைத்த இரண்டு தெய்வங்கள் இருப்பதாக வேதம் முதலான ப்ரமாணங்களில் எங்கும் இல்லை. நாட்டில் காணப்படும் கோயில்களிலும் ஈஶ்வரன் கோயில் என்றும் பரமேஶ்வரன் கோயில் என்றும் இரண்டுவிதமான கோயில்களும் இல்லை. கபாலமாலை, பாம்பு, எருக்கு, சுடுகாட்டுச் சாம்பல் முதலானவற்றை அணிந்தவன், பார்வதிக்குப பதியாயிருப்பவன் முதலான ஓரேவிதமான லக்ஷணங்களை இருவருக்கும் இவர்கள் கூறுகிறார்கள். இதிலிருந்தே இப்படி இரண்டு தெய்வங்களைச் சொல்லுவது கற்பனையே என்று விளங்குகிறது. "விஷ்ணு: பரம:" [தைத். ஸம்ஹிதை 5-5] முதலான வேதவாக்யங்களில் விஷ்ணுவே அனைவரிலும் மேலானவனாகக் கூறப்பட்டுள்ளான். ஆயிரக் கணக்கான இதிஹாஸ புராண வாக்யங்களிலும் இவ்வேத வாக்யங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான பக்கங்கள் கொண்ட நம்முடைய விஷ்ணுசித்த விஜயத்தில் இவை எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

**ஸுதர்சனர் பதில் பதின்மூன்றுவது சதகம் முற்றிற்று.**

http://acharya.org